விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 31 சனிக்கிழமை (17.09.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 272

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இலங்கை அரசாங்கத்தை இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும்

## அமெரிக்கா வலியுறுத்தல்

(சென்னை) இலங்கையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்த இந்திய மத்திய அரசு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. இலங்கையில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படும் மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் யாராக இருப்பினும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது. (19 ஆம் பக்கம் பார்க்க)

## கனேடிய பிரதமரின் கருத்துக்கு இலங்கை அரசாங்கம் ஏமாற்றம்

2018ஆம் ஆண்டு இலங்கையில் பொது நலவாய உச்சிமாநாட்டைநடத்துவது குறித்து கனேடிய பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் தெரிவித்த கருத்துக்கு இலங்கை தனது ஏமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது.

2009-ம் ஆண்டு ட்ரினிடாட் அன்ட் டுபாகோவில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டின்போது, 2013-ம் ஆண்டு உச்சிமாநாட்டை இலங்கையில் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இந்நிலையில் 2013-ம் ஆண்டு உச்சி மாநாட்டை நடத்துவதற்கான ஏற்பாடுகள் ஏற்கெனவே ஆரம்பமாகியுள்ள நிலையில் இவ்விவகாரத்தை மீண்டும் (19 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் தமிழ் பொலிஸார் தேவையில்லாத ஒன்று!

### பாதுகாப்பு செயலர் திட்டவட்டம்



வடக்கில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்குத் தமிழ்ப் பொலிஸாரை நியமிக்க வேண்டிய தேவை இல்லை என்றும் அவ்வாறானதொரு தேவை இருப்பின் அதனை அமெரிக்காவுக்குள் அவர் அமுல்படுத்தட்டும் எனவும் பாதுகாப்பு செயலாளரான கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அண்மையில் இலங்கை வந்திருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் தெரிவித்திருந்த கருத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொலிஸாரின் நியமனத்தில் (19 ஆம் பக்கம் பார்க்க)

## லிபிய போராளிகளுக்கு ஒப்பான விடுதலைப்புலிகள்

தமிழீழ விடுதலைப்புலிகளை கடாபிக்கு எதிரான லிபிய போராளிகளுக்கு ஒப்பிட்டு, நெதர்லாந்து ஹேக் நீதிமன்றத்தில் வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு நிதி வழங்கிய குற்றச்சாட்டில் கைதான ஐந்து இலங்கையர்களுக்கு எதிரான வழக்கு நேற்றைய தினம் ஹேக் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது பிரதிவாதிகள் தரப்பில் வாதிட்ட பிரபல சட்டத்தரணி, தமது தரப்பினர் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவே நிதி திரட்டியதாக சுட்டிக்காட்டினார்.

அத்துடன் விடுதலைப் புலிகள் இயக்கம், பயங்கரவாத அமைப்பு இல்லை எனவும் அவர்கள் கடாபிக்கு எதிரான போராட்டக் குழுவுக்கு ஒப்பான (19 ஆம் பக்கம் பார்க்க)

## நிபுணர் குழுவின் அறிக்கையை சமர்ப்பிக்க அநேக நாடுகள் எதிர்ப்பு

### அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கக் கூடாது என்ற நிலைப்பாட்டையே அநேகமான நாடுகள் கொண்டுள்ளதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிக்கின்றார்.

ஒருதலைப்பட்சமாக உறுதிசெய்யப்படாத தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என



பதை சர்வதேச சமூகத்திற்கு தெளிவுபடுத்தியதாக அமைச்சர் (19 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ முகாம்களை அகற்றுமாறு கோரும் உரிமை பிளேக்குக்கு இல்லை!

### விமல் வீரவன்ச ஆவேசம்

இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் மற்றும் இராணுவ முகாம்களை அகற்றுமாறு கோருவதற்கு அமெரிக்க பிரதி இராஜாங்க செயலர் றொபேர்ட் ஓ பிளேக்கிற்கு எவ்வித அதிகாரமும் இல்லை என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

றொபேட் ஓ பிளேக் இலங்கை வந்திருந்த போதும் அமைச்சர் விமல் வீரவன்ச இலங்கையில்தான் இருந்தார். பிளேக் மீண்டும் அமெரிக்கா திரும்பியுள்ள (19 ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்ந்து பேச்சை முன்னெடுக்க அரசு – கூட்டமைப்பு இணக்கம்

### அரசியல் தீர்வை பெறும்வரை தொடருமாம்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சு - வார்த்தைகளை தொடர்ந்து முன்னெடுப்பதென இணக்கம் காணப்பட்டது.

நேற்று நடைபெற்ற சந்திப்பின் போதே இவ் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் பேராசிரியர் ரஜீவ விஜயசிங்க மற்றும் சஜின்வாஸ் குணவர்த்தன(செயற்குழுவின் செயலாளர்)போன்றவர்கள் உள்ளிட்ட அரச பிரதிநிதி குழு, அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்துவதற்கும், உடனடியான மனிதாபிமான தேவைகளை நிறைவேற்றுவது தொடர்பாகவும் இவ்வருடம் ஜனவரி மாதத்தி லிருந்து ஆகஸ்ட் வரை, கூட்டமைப்பைச் சேர்ந்த ஆர்.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி கே.கணக்-ஈஸ்வரன் (19 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பு/ சென்னை/ கொழும்பு -12250/=
கொழும்பு/ திருச்சி/ கொழும்பு -14200/=
கொழும்பு/ லண்டன் -39500/=
24 HOURS SERVICE
Call 0777380557 0777727617
Subject to change

AiR MARK
Travels & Tours
IATA
No. 05, Stanley Rd, Jaffna.
379 2/2, GALLE ROAD, COLOMBO - 06
94, CHATHAM STREET, COLOMBO - 01

# 10 ஆண்டு சிறைக்குப் பின் சந்தேகநபர் விடுதலை

(கொழும்பு)

பத்து ஆண்டுகளுக்கும் அதிகமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலி சந்தேகநபர் ஒருவரை விடுதலை செய்ய கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் பொலிஸாரிடம் இவர் கொடுத்திருந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை இவருக்கு எதிரான சாட்சியமாக ஏற்றுக்கொள்ள முடியாதென்று நீதிமன்றம் கூறியுள்ளது.

இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக தாக்குதல் ஒன்றை நடத்த வெடிப்பொருட்களை சேகரித்ததாக குற்றம் சாட்டி சந்திரகுமார் ராபர்ட் புஷ்பராஜன் என்பவர் 2000ஆம் ஆண்டு நீர்கொழும்பு பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பொலிஸாருக்கு இவர் வழங்கிய குற்றஒப்புதல் வாக்குமூலம் இவருக்கு எதிரான சாட்சியமான வழக்கில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

இந்த வாக்குமூலம் இவர் தன்னிச்சையாக வழங்கியதுதான் என நிரூபிக்க அரச சட்டவாதி தவறிவிட்டதாக மேலும் நீதிமன்ற நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

இந்த சந்தேக நபரிடமிருந்து வெடிபொருட்கள் பலவற்றை கைப்பற்றியதாக பொலிஸார் கூறினர். ஆனால் அதனை சாட்சிகள் மூலம் நிரூபிக்க பொலிஸார் தவறிவிட்டதாகவும் நீதிபதி சுனில் ராஜபக்ஷ குறிப்பிட்டிருந்தார்.

குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாத நிலையில் புஷ்பராசன் விடுவிக்கப்படவேண்டும் என நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ச-5)


## தவறிவிட்டது

டச்சு வீதி, சித்தன்கேணி எனும் முகவரியுடைய சந்திரதாஸ் பிறேமாவதி என்பவரின் தேசிய அடையாள அட்டை (486942649V) யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (5622)

## வாடகைக்கு

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் முதலாவது மாடியில் அலுவலகம்/வியாபாரக் காட்சி அறை/கல்வி நிறுவனமாகப் பாவிக்கக்கூடிய 1000 சதுர அடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 0773126712 (அ-4457)

## வீடு விற்பனைக்கு

அளவெட்டி அம்பனை வீதியில் இருந்து இரண்டாவதாக உள்ள 2 1/2 பரப்புக் விஸ்தீரணம் உள்ள காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. (6137)

தொடர்பு : 0114949234

## காணி விற்பனைக்கு

அளவெட்டி அம்பனை வீதியில் இருந்து இரண்டாவதாக உள்ள 2 3/4 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. (6137)

தொடர்பு : 0114949234


# கிளாலியில் மீள் குடியேற்றம்

(கிளிநொச்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிளாலி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த (கே.என்/95) கிளாலி றோ.க.த.க பாடசாலைக்குத் தென்புறமாக குடியிருந்த மக்களுக்கான மீள்குடியேற்றம் எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 10 மணிக்கு இடம் பெறவுள்ளது.

எனவே தங்கள் சொந்த இடங்களில் குடியமர விரும்புவோர் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள்பெயர்விபரங்களைபச்சிலைப் பள்ளி உதவி அரசாங்க அதிபர் செயலகத்தில் பதிவுசெய்து கொள்ளுமாறும் அத்தோடு மீள்குடியேற்றத்திற்காக வருகை தரும் போது அவர்கள் தற்போது வதியும் பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து பதிவு நீக்கப்பட்ட கடிதத்தினையும்எடுத்துவருமாறு கிளிநொச்சி அரசாங்க அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார். (எ-12)

# ஊடகவியலாளர் அமைப்பின் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்பாடி விருந்தினர் விடுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் ஒன்றுகூடலின்போது, ஏகமனதாக எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி நாளை 18.09.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் ஊடகவியலாளர்களின் புதிய அமைப்பின் தொடக்க நிகழ்வும், நிர்வாகக் குழுத் தெரிவும் இடம்பெறும் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ந)


## காணி/வீடு விற்பனைக்கு

- பளை, புலோப்பளையில் 5 பரப்பு வெற்றுக் காணியும்,
- பளை, கச்சார் வெளி பிள்ளையார் கோயிலுக்கு அருகில் 6 ஏக்கர் காணியும்,
- 56, அச்சுக் கூட லேன், கொக்குவில் கிழக்கில் 6 அறை, 2 மலசலகூட வசதி, சுற்றுமதில் கொண்ட மேல் மாடி வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு: 0779592051 (6147)


# பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (பகுதி நேரம்) இரண்டாவது ஆண்டு இரண்டாம் பருவ அரையிறுதிப் பரீட்சை எதிர்வரும் 19 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறுமென பரீட்சைக் கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார். (ந)


## மரண அறிவித்தல்

## முருகேசு சிவப்பிரகாசம்



(ஓய்வு பெற்ற பொது முகாமையாளர் யா.ப.நோ.கூ.சங்கம், ஓய்வுபெற்ற ஆசிரியர் யாழ்.இந்துக் கல்லூரி, கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட மன்றலாடும் விநாயகர் ஆலய முன்னாள் பொருளாளரும் தற்போதைய நிர்வாகசபை உறுப்பினரும், கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலைய பொருளாளரும்.)

அளவெட்டி வடக்கு சாத்தாகலட்டியை பிறப்பிடமாகவும், கொழும்புத்துறை சுவாமியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சிவப்பிரகாசம் அவர்கள் 15.09.2011 வியாழக்கிழமை சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு செல்லம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வனும், நாகேஸ்வரி (கருணா) அவர்களின் பாசமிகு கணவரும், சத்தியா, கோதை (லண்டன்), பிரணவன் (Kevilton Electrical Product (PVT) Ltd) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரதீபன் (பிரான்ஸ்) இராதேயன் (Doctor London), வர்ஷினி (மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மிருதுலா, மானசா, ஆதிரை ஆகியோரின் அருமைப் பேரனும், நகுலாம்பிகை கந்தரட்ணம்,திலகவதி, சதாசிவம் ஆகியோரின் சகோதரனும், விஜயலட்சுமி பரமானந்தம் அவர்களின் மைத்துனரும், சுலோசனா, பிரபாகரன் ஆகியோரின் சிறிய தந்தையும், கௌரி, ராகவன், அழகேசன், சஞ்சயன், சான்றோன், சாதுரியன், சாயீசன் ஆகியோரின் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18/09/2011 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

20/3 சுவாமியார் ஒழுங்கை,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

தகவல்
மகன் : சி.பிரணவன்
(0773604486)

(6159)


## இலங்கை மின்சார சபை - யாழ் பிரதேச அலுவலகம்

# மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர்அழுத்த மின் விநியோக மார்க்கங்களிலுள்ள மின்கம்பங்களை இடமாற்ற வேண்டியிருப்பதாலும் உயர் அழுத்த மின் விநியோக வலைப்பின்னலில் திருத்த வேலைகள் செய்யும் பொருட்டும் குறிப்பிட்ட தினங்களில் காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதையும் கடுமையான மழை இருக்கும் சந்தர்ப்பங்களில் இந்த மின்தடை அமுல்படுத்தப்படமாட்டாது என்பதையும் கவனத்தில்கொள்ளவும்.

| திகதி | இடங்கள் |
|---|---|
| 19.09.2011 (திங்கட்கிழமை) | சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், இணுவில், மருதனார்மடம், உடுவில் ஒரு பகுதி, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன் மணல் பிரதேசம், யாழ். பட்டணப் பகுதி, புன்னாலைக்கட்டுவன் வடக்கு, தெற்கு, மயிலங்காடு பிரதேசத்தின் ஒரு பகுதி, ஈவினைப் பிரதேசத்தின் ஒரு பகுதி. |
| 20.09.2011 (செவ்வாய்க்கிழமை) 22.09.2011 (வியாழக்கிழமை) | கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், புன் னாலைக்கட்டுவன் வடக்கு, தெற்கு, மயிலங்காடு பிரதேசத்தின் ஒரு பகுதி, ஈவினைப் பிரதேசத்தின் ஒரு பகுதி. |
| 21.09.2011 (புதன்கிழமை) 23.09.2011 (வெள்ளிக்கிழமை) | சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், இணுவில், மருதனார்மடம், உடுவில் ஒரு பகுதி, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன் மணல் பிரதேசம், யாழ். பட்டணப் பகுதி. |
| 24.09.2011 (சனிக்கிழமை) | கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர்ப் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன் துறை, உயர்பாதுகாப்பு வலயப்பகுதி, சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சுதுமலை, சங்குவேலி, கட்டுடை, கோண்டாவில், காக்கை தீவு, கொட்டடி, கோம்பயன் மணல் பிரதேசம், யாழ். பட்டணப்பகுதி. |
| 25.09.2011 (ஞாயிற்றுக்கிழமை) | கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக் கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர்ப் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, சுன்னா கம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர்பாதுகாப்பு வலயப் பகுதி, சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சுதுமலை, சங்குவேலி, கட்டுடை, கோண்டா வில், காக்கைதீவு, கொட்டடி, கோம்பயன் மணல் பிரதேசம், யாழ். பட்டணப்பகுதி. |

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

'சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கை கொடுக்கும் இலங்கை மின்சார சபை'

(சி-4460)

## இன்று ஒரு தகவல்

# வாழ்வின் சுவை!

ஜென் குரு ஒருவர் மரணப்படுக்கையிலே இருந்தார். அவரைச் சுற்றி சீடர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது ஒரு சீடன்" எங்களுடைய குருவுக்கு மிகவும் பிடித்த பலகாரம் ஒன்று உள்ளதே. அதை இப்பொழுது அவருக்குக் கொண்டுவந்து கொடுத்தால் என்ன?" என்று யோசித்தார்.

உடனே கடைவீதிக்கு ஓடிச் சென்று அப்பலகாரத்தை வாங்கிக் கொண்டு குருவிடம் வந்தார்.

"குருவே... உங்களுக்குப் பிடித்த பலகாரம்.... இந்தாருங்கள் இதைச் சாப்பிடுங்கள் என்று குருவிடம் கொடுத்தார்.

குரு அதை நிதானமாகச் சுவைத்துச் சாப்பிட்டார்.

அப்பொழுது அவர் வாய் ஏதோ சொல்ல வந்தது... உதடு அசைந்தது... இதனைப் பார்த்த சீடர் அவர் வாயருகே குனிந்து 'சொல்லுங்கள்' என்றார்.

"ஆஹா... எத்தனை ருசி!" என்று குரு இலேசாக முணுமுணுத்தார்.

இறுதி மூச்சுப் பிரிகின்ற வரைக்கும் ருசி உணர்வு அவருக்கு இருந்தது. அது பலகார ருசி அல்ல வாழ்க்கையின் பால் அவர் கொண்டிருந்த ருசி!.

இன்றைக்குப் பலபேர் வாழ்க்கையின் ருசி தெரியாமலே இறந்து போய் விடுகின்றனர்!

பலபேர் எப்படியென்றால்... அவர்களுக்கு யாரையாவது பின்பற்றத் தெரிகிறதே தவிர தாமே ஒரு முன்மாதிரியாக நடந்து கொள்ளவேண்டும் என்று தோன்றுவதில்லை!

நடந்து தேய்ந்த பாதையிலே நடப்பது அவர்களுக்குப் பாதுகாப்பாகத் தெரிகிறது.

அதுதான் நல்லபாதை என்றும் வேறுபாதையே கிடையாது என்றும் நினைத்துக் கொள்கின்றனர். கிடைப்பது போதுமென்று நினைப்பவர்கள் பழைய பாதையையே தேர்ந்தெடுக்கின்றனர்.

சரி... இந்த உபதேசமெல்லாம் ஒருபக்கம் இருக்கட்டும். இப்பொழுது நாம் செய்ய வேண்டியது என்ன?

அதுக்கு ஒரு சுலபமான ஆலோசனை உண்டு.

அது என்னன்ன...

எப்பவும் மகிழ்ச்சியாக இருக்கின்ற மனிதர்கள் உண்டு. அவர்களைக் கண்டுபிடித்து அவர்களோடு பழகவேண்டும். கூடவே இருக்கவேண்டும்.

அவர்களுடைய கண்களை நன்றாகக் கவனித்துப் பாருங்கள். ஓர் இனம்புரியாத இனிமை நமக்குள்ளே நுழையும். வாழ்க்கை என்பது துன்பம் மட்டுமே நிறைந்தது அல்ல என்பது புரியும்.

ஒரு குடும்பத் தலைவர் ஒருவர் படுக்கையிலே கிடந்தார்.

அவர் பக்கத்திலே நின்று கொண்டிருந்த மனைவிக்கு ஒரு யோசனை தோன்றியது.

இவர் எப்பவும் சாப்பிடுகிற ஒரு பலகாரத்தைக் கொண்டுவந்து கொடுக்கவேண்டும்!

உடனே உள்ளே ஓடிப்போய் எடுத்துக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்தார்.

அவர் அதை உடனே வாங்கிச் சாப்பிட்டார்.

அதன்பின்னர் அவர் உதடு துடித்தது. ஏதோ சொல்ல முனைந்தார். மனைவியைப் பார்த்து கையை அசைத்தார். அப்பொழுது மனைவி அவரருகே குனிந்தார்.

இவர் மெதுவாக வாயைத் திறந்து "இனிமேலாவது வாய்க்கு ருசியா பலகாரம் செய்யக் கற்றுக் கொள்!" என்றார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

### முல்லைத்தீவு மாவட்டத்தில்

# கைவிடப்பட்ட 48 வாகனங்கள் உரியவர்களிடம் ஒப்படைப்பு

இறுதிக் கட்ட யுத்தத்தின்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் பொதுமக்களால் கைவிடப்பட்ட வாகனங்களில் 48 வாகனங்கள் கடந்த இரு வாரங்களில் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அந்த மாவட்டத்தின் அரசாங்க அதிபர் ஏ.பத்திநாதன் தெரிவித்தார்.

பொதுமக்களால் கைவிடப்பட்ட 2 ஆயிரத்து 447 வாகனங்களுக்கான பட்டியலொன்று இராணுவத்தினரால் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கையளிக்கப்பட்டிருந்தது. மேற்படி வாகனங்களை ஒப்படைக்கும் நடவடிக்கைக்கமைய சுதந்திரபுரம் மற்றும் மன்னாகண்டல் பகுதிகளில் வைக்கப்பட்ட வாகனங்களில் 48 வாகனங்களுக்கான அடையாளத்தை உறுதிப்படுத்தி உரியவர்கள் பெற்றுச் சென்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் சுதந்திரபுரம் பகுதியில் உரியவர்களிடம் ஒப்படைப்பதற்காக வைக்கப்பட்ட 506 வாகனங்களில் 3 வாகனங்களே உரியர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் அதேபோன்று மன்னாகண்டல் பகுதியில் உரியவர்களிடம் ஒப்படைப்பதற்காக வைக்கப்பட்ட 284 வாகனங்களில் 46 வாகனங்களே உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன், அம்பலவன், பொக்கணை, புதுக்குடியிருப்பு ஏனைய பகுதிகளிலும் கைவிடப்பட்ட வாகனங்கள் வைக்கப்பட்டு கூடிய விரைவில் உரியவர்களிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேற்படி கைவிடப்பட்ட வாகனங்களை உரியவர்களிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் உரியவர்கள் உரிய ஆவணங்களுடன் வந்து தங்களது வாகனங்களுக்கான அடையாளத்தை உறுதிப்படுத்தி வாகனங்களை விரைவாகப் பெற்றுச் செல்லுமாறும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டார். (4-2)

# புலமைப்பரிசில் பெறுபேறுகள் தொடர்பில் முறையிட ஏற்பாடு

ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் சந்தேகம் இருப்பின் அது தொடர்பில் மேன்முறையீடு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாடசாலைகளின் அனைத்து அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு முன்னர் பல தடவைகள் மீள் பரிசீலனைக்கு உட்பட்டதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

அதனால் விடைத்தாள்கள் மீண்டும் பரிசீலனைக்கு உட்படுத்தப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். எனினும் மாணவர்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளில் சந்தேகங்கள் இருப்பின் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அது குறித்து முறையீடு செய்ய முடியும். பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி இலக்கம் 1503 என்ற முகவரிக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க முடியும். அதிபரினால் குறித்த மேன்முறையீடுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதுடன் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் திணைக்களத்திற்கு கிடைக்கும் விதத்தில் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படவேண்டும். இதேவேளை இம்முறை ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்கான வெட்டுப்புள்ளிகளையும் பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ளது. (4-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 115 | 130 | 50 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 90 |
| தக்காளி | 30 | 60 | 40 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 40 | 30 |
| கோவா | 40 | 80 | 40 |
| கரட் | 50 | 60 | 50 |
| பூசணி | 25 | 40 | 25 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 40-90 | 65 | 90 |
| பெரிய வெங்காயம் | 65 | 60 | 80 |
| பாகற்காய் | 80 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | 130 | 100 |
| பயற்றங்காய் | 50 | 80 | 60 |
| லீக்ஸ் | 50 | 60 | 50 |
| பீற்றூட் | 15 | 20 | 15 |
| கறிமிளகாய் | 35 | 40 | 40 |
| முருங்கைக்காய் | 50 | 80 | 80 |
| போஞ்சி | -- | 110 | 100 |
| கத்தரிதம்புள்ள | 30 | 20 | 40 |
| கீரை - 1 பிடி | 8-10 | 20 | 20 |
| தேசிக்காய் | 200 | 160 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

# இராசி பலன்

17.09.2011
(ஆவணி 31, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
பஞ்சமி பின்னிரவு 12.27 மணிவரை
பரணி மாலை 5.46 மணிவரை
இராகுகாலம் 9.03-10.33 மணிவரை
சுபநேரம் 3.03-4.33 மணிவரை
மகாபரணி, சித்தாமிர்தம்

**மேடம்** குடும்பத்தினர் உங்கள் செயற்பாடுகளுக்கு பக்கபலமாக இருப்பர், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆட்பட நேரிடும், எதிலும் பொறுமையுடன் செயற்படுவது நல்லது.

**மிதுனம்** இனிய செய்தி இல்லம் தேடி வரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பயணங்கள் செல்ல போட்ட திட்டம் வெற்றிபெறும்.

**கடகம்** பம்பரமாகச் சுழன்று பணி புரிவீர்கள், நண்பர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும், கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**சிங்கம்** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், தந்தை வழியில் ஏற்பட்ட தகராறுகள் அகலும்.

**கன்னி** சஞ்சலங்கள் தீர சனிபகவானை வழிபட வேண்டிய நாள், ஒரு வகையில் வந்த வரவுகள் இன்னொரு வகையில் செலவாகலாம், அலைச்சல்கள் அதிகரிக்கும்.

**துலாம்** உறவினர் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், நண்பர்கள் மூலம் நன்மைகள் நடைபெறலாம், வருமானம் திருப்தி தரும், அதிர்ஷ்டகரமான நாள்.

**விருச்சிகம்** உறவினர் வழி ஒத்துழைப்புக் கிடைக்கலாம், செய்தொழிலில் மேன்மையுண்டு, பணவரவு திருப்தி தரும், சொத்துக்களால் நன்மையுண்டு, ஆரோக்கியமான நாள்.

**தனுசு** கலகலப்பான சூழ்நிலைகள் அமையலாம், மைத்துனர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**மகரம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைச் சொல்லலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்** வேலையில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், வீண்பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, உடன்பிறப்புக்களின் குணத்தை அறிந்து நடந்து கொள்வீர்கள்.

**மீனம்** தனவரவு திருப்திகரமாக அமையும், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் மேலோங்கும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், திருமணப் பேச்சுக்கள் சாதகமாக அமையும்.

வளவன்

## விவசாய சம்மேளனத்தின் பொதுக்கூட்டம்

(நவாலி)

நவாலி விவசாய சம்மேளத்தின் பொதுக் கூட்டமும் காலபோக கூட்டமும் இன்று பிற்பகல் 2.30 மணியளவில் நவாலி மகா வித்தியாலய மண்டபத்தில் வே. சிற்றம்பலம் தலைமையில் பெரும்போக உத்தியோகத்தரின் மேற்பார்வையுடன் நடைபெறவுள்ளது.

இதில் புதிய நிர்வாக சபைத் தெரிவு நடைபெற்று பின்பு காலபோக கூட்டமும் நடைபெறும்.

இக் கூட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட வருடத்திற்கான உரமானிய விண்ணப்பப் படிவங்கள் ஆராயப்பட்டு உறுதிப்படுத்தப்பட் இருப்பதால் அனைத்து விவசாயிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு விவசாய சம்மேளனத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். (4-12-26)




## பரு. நகரசபையினரால் பௌசர்மூலம் குடிநீர் விநியோகம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபையினரால் பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் பௌசர்மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

மேற்குறித்த பகுதிகளில் நீர்ப்பற்றாக் குறை காரணமாக மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

இதை நிவர்த்தி செய்யும் பொருட்டு பௌசர்மூலம் குடிநீரானது கடந்த புதன்கிழமை தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றது.

இத் திட்டத்தை பருத்தித்துறை நகரசபை தவிசாளர் ச.ரவீந்திரன் பருத்தித்துறை முதலாம் குறுக்குத் தெருவில் ஆரம்பித்து வைத்தார்.

தற்போது மக்களின் குடிநீர்ப்பிரச்சினை தீர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-3)

## செஞ்சிலுவைச் சங்க ஆளுநர் சபைக்கூட்டம்

(நல்லூர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் ஆளுநர் சபைக்கான் கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு இதன் யாழ். கிளையின் அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் தலைவர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரிவுத் தலைவர், செயலாளர் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (4-12-134)

## பாதுகாப்புச் சபையின் யாழ்.கிளையினால்
# ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து மரணமானவர்களுக்கு பணிக்கொடை

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாதுகாப்பு சபையின் யாழ். மாவட்டக் கிளையினால் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து மரணமடைந்தவர்களுக்கான மரணப் பணிப்கொடை அவர்களின் உறவினர்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் இணைந்த பின்பு உயிரிழுந்தவர்களின் வயது மற்றும் இத்திட்டத்தில் இணைந்த காலம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு இந்த பணிக்கொடை வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி இத்திட்டத்தில் இணைந்த பின்பு உயிரிழந்த குமாரசாமி தவச்செல்வம் என்பவரின் உறவினர்களுக்கு 10 ஆயிரம் ரூபாவும் தம்பிரட்ணம் முரளிதரன் என்பவரின் உறவினர்களுக்கு 15 ஆயிரம் ரூபாவும் வல்லிபுரம் சந்திரகாந்தன் என்பவரின் உறவினர்களுக்கு 20 ஆயிரம் ரூபாவும் துரைராசா செல்வச்சந்திரன் என்பவரின் உறவினர்களுக்கு 25 ஆயிரம் ரூபாவும் பணிக்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் 20 பேரின் உறவினர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் பணிக்கொடை வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (4-6)

# உலக அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் வீதி புனரமைப்பு

(கரவெட்டி)

உலக அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட கரணவாய் தெற்கு, தலையாட்டி, முள்ளிவல்லை. விளுந்தாடி வீதி 31 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப் புனரமைப்பு வீதி தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, சுமார் 20 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இவ்வீதி பல வருடங்களாக புனரமைக்கப்படாமல் இருந்தது. தற்போது மேற்படி நிதியுதவியுடன் கடந்த 14 ஆம் திகதி வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் ஆரம்ப நிகழ்வில் பிரதேச சபையின் செயற்குழுத்தலைவர் பொ. வியாகேசு, எஸ்.பரஞ்சோதி, பொ.குகதாஸ், எஸ்.பவிராஜ் க.ரத்னம் ஆகியோர் கலந்து கொண்டதுடன் எதிர்க்கட்சி சார்பில் சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தனர். (4-12-24)

## ஹற்றன்நஷனல் வங்கியின்
# சங்கானைக் கிளையினரால் நடத்தப்படவுள்ள மரதன் ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

சங்கானையில் உள்ள ஹற்றன் நஷனல் வங்கியின் ஓராண்டு நிறைவுவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வங்கிக் கிளையில் நடைபெறவுள்ளது.

அதனையொட்டி வங்கிக்கு அருகாமையிலுள்ள பாடசாலைகளிலிருந்து தரம் 9 இற்கு மேற்பட்ட மாணவர்களை உள்வாங்கி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு மரதன் ஓட்ட நிகழ்வை வங்கி முன்றலிலிருந்து ஆரம்பிக்க தீர்மானித்துள்ளனர்.

இம்மரதன் ஓட்டம் 10 கிலோ மீற்றர் தூரம் பின்வரும் வழிகளில் இடம்பெறவுள்ளது.

இதற்கமைய சங்கானை எச்என்பியிலிருந்து சண்டிலிப்பாய் சந்தி வரை பயணித்து சண்டிலிப்பாய் சந்தியிலிருந்து தொட்டிலடி சந்திக்கும் பயணித்து தொட்டிலடி சந்தியிலிருந்து பண்டத்தரிப்பு சந்திக்கும் பின்னர் பண்டத்தரிப்பு சந்தியிலிருந்து சித்தங்கேணி சந்திக்கும் சித்தங்கேணி சந்தியிலிருந்து எச்என்பி சங்கானைக்கும் சென்றடையவுள்ளது.

அத்துடன் மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டு முதல் மூன்று இடங்களைப் பெற்று வெற்றியீட்டும் மாணவர்களுக்கு ஆண்டு விழாவின் போது பரிசுத் தொகையாக முறையே 5 ஆயிரம், 3 ஆயிரம், 2 ஆயிரம் ரூபா வழங்கி கௌரவிக்கப்படுவதுடன் மேலும் ஏழு சிறப்புப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

எனவே மேற்படி நிகழ்வில் மாணவர்களை கலந்து கொண்டு வெற்றியீட்டுமாறு எச்என்பி உதவி முகாமையாளர் திருமதி ஏ.யோகதாஸ் கேட்டுள்ளார். (4-12)

## பொதுக்கூட்டம்

(நல்லூர்)

இருபாலை தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய உத்தியோகத்தர்கள் தெரிவும் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இருபாலை தெற்கு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அனைத்து அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (12-134)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சரின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் உதவி ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆசிரியர் பதவியில் 3-II இற்குக் உள்ளீர்ப்புச் செய்தல், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெறல் போன்ற விடயங்கள் பற்றி கலந்துரையாடல் இடம்பெற இருப்பதால் அனைத்து உதவி ஆசிரியர்களும் வேண்டிய ஆவணங்களுடன் சமூகம் தருமாறு யாழ். மாவட்ட ஆசிரிய உதவியாளர் சங்க தலைவர் ச.சிவகாந்தன் அறிவித்துள்ளார். (4-8)

## அழகியல் பாட செயலமர்வு

(யாழ்ப்பாண்ம்)

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் புதிதாக நியமனம் பெற்ற அழகியல் பாட (சித்திரம், சங்கீதம், நடனம், நாடகம்) ஆசிரியர்களுக்குரிய செயலமர்வு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 4.30 மணிவரை இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இதில் அழகியல் பாட ஆசிரியர்களைத் தவறாது சமூகம் தருமாறு யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4-12)

## பரிசளிப்புவிழா

(நல்லூர்)

புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தில் பரிசளிப்புவிழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய அதிபர் ஏ.தவநாயகம் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய பதில் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வே.பால சுப்பிரமணியம், யாழ். கல்வி வலய சேவைக் கால ஆலோசகர் ச.அருந்தவரத்னம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (12-134)

# இளைஞனைக் காணவில்லை





(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் நோக்கிப் புறப்பட்ட இளைஞர் ஒருவர் கடந்த 9 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இலங்கை நாயகி அம்மன் கோயிலடி, பருத்தித்துறை வீதி, கல்வியங்காட்டைச் சேர்ந்த புவனேந்திர சர்மா சத்திதரசர்மா (வயது-26) என்ற இளைஞரே காணாமல் போயுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

யாழ். நகருக்குப் புறப்படுவதாக கூறிவிட்டுச் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-8-4)





ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் திருப்பதி தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத் தேர்த்திருவிழா அண்மையில் நடைபெற்றது. இதில் தேரில் அம்பாள் வீதியுலா வருவதையும் தூக்குக் காவடி எடுத்து வரும் பக்தர் ஒருவரையும் படத்தில் காணலாம்.

# 2 ஆயிரத்து 800 குடும்பங்களுக்கு விவசாய உள்ளீடுகள்கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் ஒரு மில்லியன் வீட்டுத் தோட்டம் உருவாக்கும் தேசிய திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் படி யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 2 ஆயிரத்து 800 பயனாளிகளுக்கான விவசாய உள்ளீடுகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 28 கிராம சேவையாளர் பிரிவிலிருந்து இந்தப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (4-6)

## வடக்குக் கிழக்கு மாகாணங்களில்

# மீன்பிடித்துறையை மேம்படுத்த தென்னாபிரிக்க அரசு விருப்பம்

### ஜியோட் ஜெய்ட் தெரிவிப்பு

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீன்பிடித் துறையினை மேம்படுத்த தென்னாபிரிக்க அரசாங்கம் விருப்பம் கொண்டுள்ளதாக இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் ஜியோட் ஜொய்ஜ் கைத்தொழில், வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீனிடம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் றிசாத் பதியுதீனை நேற்று முன்தினம் மாலை அமைச்சில் சந்தித்து கலந்துரையாடிய போது அமைச்சர் றிசாத் பதியுதீன் விடுத்த வேண்டுகோளினையடுத்து அதன் விருப்பத்தை உயர்ஸ்தானிகர் வெளியிட்டுள்ளார்.



மேலும் அமைச்சர் இங்கு குறிப்பிடுகையில்,

இலங்கைக்கும் தென்னாபிரிக்காவுக்குமான வர்த்தக செயற்பாடுகள் மிகவும் நெருக்கமான முறையில் இருப்பதாகவும் இலங்கையிலிருந்து தென்னாபிரிக்காவுக்கு இடம்பெற்ற ஏற்றுமதி வருமானம் 2010ஆம் ஆண்டில் 20.08 மில்லியன் அமெரிக்க டொலராகவும் இறக்குமதி மீதான பெறுமதி 17.9 மில்லியன் அமெரிக்க டொலராகவும் காணப்பட்டது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை இரத்தினக்கற்கள், பழப்பதனிடல், உல்லாசப் பயண துறைகளில் தென்னாபிரிக்கா இலங்கையில் முதலீடுகளை செய்வதற்கு ஆர்வம் கொண்டுள்ளதாகவும் தற்போது இலங்கை பாரிய அபிவிருத்திகள் மற்றும் பொருளாதார வளர்ச்சிகளை கண்டுவருவதால் முதலீட்டாளர்களுக்கான வாய்ப்புக்கள் அதிகமாக இலங்கையில் காணப்படுவதாகவும் உயர்ஸ்தானிகர் அமைச்சரிடத்தில் சுட்டிக்காட்டியதை வரவேற்ற அமைச்சர் றிசாத் பதியுதீன், புதிய முதலீட்டாளர்களை இலங்கை வரவேற்பதாகவும் கூறினார்.

இலங்கைக்கு தென்னாபிரிக்கா நேரடி விமான சேவையொன்றினை ஆரம்பிக்க விருப்பம் கொண்டுள்ளதாக கூறிய உயர்ஸ்தானிகர் இதன்மூலம் உல்லாசப்பயணத் துறை மற்றும் வர்த்தக மேம்பாடுகள் மேலும் வளர்ச்சி பெறும் என்றும் இரு தரப்பிலும் கலந்துரையாடப்பட்டது. (4-2)


மனதார பாராட்டி வாழ்த்துகின்றேன்


லோ. டிலோஜன்
191 புள்ளிகள்
(மாவட்ட நிலையில் 2ஆம் இடம்
நல்லூர் கோட்டத்தில் 1ஆம் இடம்)

ப. பவதாரகன்
190 புள்ளிகள்
(மாவட்ட நிலையில் 4ஆம் இடம்)

இ. மாதங்கி
188 புள்ளிகள்
(மாவட்ட நிலையில் 9ஆம் இடம்)

யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலையிலிருந்து 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த 111 மாணவச் செல்வங்களையும் மனதார பாராட்டி வாழ்த்துவதுடன், இம் மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றேன்.

எஸ். தியாகலிங்கம்
அதிபர், யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை

(சி-4454)


# சிறுவர் இல்லத்து சிறுமிகளை துஷ்பிரயோகம் செய்தவர் கைது

திஹாரி, பத்தலஹேனவத்த பகுதியில் அமைந்துள்ள சிறுவர் இல்லமொன்றைச் சேர்ந்த நான்கு சிறுமியர்களை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதான குற்றச்சாட்டின் பேரில் மேற்படி இல்லத்தின் முன்னாள் பெண் நிர்வாகியும் அவரது 15 வயதான மகனும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேற்படி இரு சந்தேகநபர்களையும் மினுவன்கொட, கல்கந்தை பிரதேசத்தில் வைத்து கைது செய்ததாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் அனோமா திஸாநாயக்கா தெரிவித்தார்.

குறித்த சிறுமியர் நால்வரையும் மேற்படி 15 வயதான சந்தேகநபர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என்பதுடன், அவரது தாயாரான முன்னாள் நிர்வாகி, தனது மகனின் செயலுக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே கைது செய்யப்பட்டுள்ளார் என பணிப்பாளர் குறிப்பிட்டார். இவ்வாறு கைது செய்யப்பட்ட இவரிடமும் தொடர்ந்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் உரிய விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

சந்தேகநபரான முன்னாள் நிர்வாகி, கடந்த 3 வருடங்களாக மேற்படி சிறுவர் இல்லத்தில் சேவையாற்றிய நிலையில் இவ்வருடம் தனது பணியிலிருந்து விலகிச் சென்று கல்கந்த பிரதேசத்தில் அமைந்துள்ள சிறுவர் இல்லமொன்றில் நிர்வாகியாகச் சேவையாற்றி வந்துள்ளார்.

திஹாரியில் அமையப்பெற்றுள்ள சிறுவர் இல்லத்தில் 10 சிறுமியர் உட்பட 24 சிறுவர்கள் தங்கியுள்ளனர். இந்த சிறுவர் இல்லம் உரிய முறையில் பதிவு செய்யப்படாதுள்ளதால் அதிலுள்ள 24 சிறுவர்களையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவுள்ளதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் அனோமா திஸாநாயக்கா மேலும் கூறினார். (4-2)


உயர்தர பரீட்சைகளின் பின்
Your next step...



Mega
COMPUTER SCHOLARSHIP
* Web Design & Development
* Java Programming
* ICT & Web Programming
* Office Automation
* Tally Accounting Training
* Hardware & Networking
* Computer Application
* Software & Web Engineering

Win 75% SCHOLARSHIP

ISO 9001 : 2008 Certified Institution

மாணவர்கள் நேரடியாகவும், ஸ்கொலர்ஷிப் திட்டத்தின் மூலமாகவும் தகவல் தொழில்நுட்பம், மல்டிமீடியா மற்றும் ஆங்கில பேச்சுப் பயிற்சிகளில் இணைந்து கொள்ளலாம்

செப்டெம்பர் 18 ஞாயிறு

Admissions on Progress !

இலவச புலமைப்பரிசில்
- பரீட்சையை தமிழ், சிங்களம் or ஆங்கிலத்தில் எழுதலாம்
- அடிப்படைத் தகைமை G.C.E. (O/L)
- வினாத்தாள் 50 நிமிடங்கள் மட்டுமே
- பாடசாலைப் பாடத்திட்டம் & பொது அறிவு வினாக்கள்
- இலவச பாடநூல்கள் (இந்தியா & இலங்கை)
- தவணைமுறை கட்டண வசதி (Installment)
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்

இலவச அனுமதிகள் அருகிலுள்ள எமது பயிற்சி மையங்களில் ...!

Web Animation
Graphics Design
2D & 3D Animation
Cartoon Animation
Digital Film Making
3D Modeling & Graphics
Digital Video Production
Master Dip. in Multimedia

Professional Training
Multimedia
Graphics - Animation



SPOKEN English
Join Speak Easy®
Centre for Better English
English Fluency Made Easy...

Level - 1 Contact Programme
Level - 2 Connect Programme
Level - 3 Comfort Programme

Reading - Writing - Listening - Speaking
நவீனமுறை கற்பித்தல், இலவச பாடப்புத்தகங்கள்
இலகு தவணைக் கட்டணம்.

ASIAN COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | வவுனியா |
|---|---|---|---|
| 2G ஸ்ரான்லி வீதி | கொடிகாமம் வீதி | 230- 1ம் மாடி கண்டி வீதி | 192 குருமன்காடு சந்தி மன்னார்வீதி |
| 021-2225677 | 021-2262399 | 021-2270267 | 024-2226050 |

பாராட்டி வாழ்த்துகின்றோம்



5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 194 புள்ளிகள் பெற்று தேசிய ரீதியில் 2ஆம் இடம்பெற்ற
**பரமேஸ்வரன் சேதுராகவன்**
அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மென்மேலும் பல உயர்வு பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
மாமாமார்:-
ந. செவ்வேள்
ந. வரதன் (பிரான்ஸ்)
ந. சேந்தன் (கனடா)
ந. ஐங்கரன்

(சி-4455)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தின் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் 2011 வெளியாகியுள்ளன. இதில் சித்தியடைந்த மாணவர்களின் பெறுபேறுகள் அவ்வப் பாடசாலை அதிபர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதற்கமைய பாடசாலைகளும் அதில் சித்திபெற்றுள்ள மாணவர்களின் பெயர் விபரங்களும் வருமாறு,

**யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்**

ர.நிதூஷிகா- 192, கு.கஜானி- 190, சூ.துவாரகன்- 190, ந.கஜேந்திரன்-187, அ.அபிராம்-186, இ.மோனலிசன்-185, கு.சரண்-184, ச.ஜெயராம்- 182, பி.பற்றிக் நிலக்ஷன்- 180, பீ.டயஸ் அனோல்ட் - 179, இ. அபிநயா- 179, க.விதுஷா - 178, ச.அர்பிந்தா- 178, அ.ஆரபி- 178, வி.வேணுகரன் - 177.

க.சங்கவி- 177, அ.ஜி. மரின் றோஜஸ்-177, நெ.ஜெ.அனதில் சைனுகா- 177, க.வைஷ்ணவி- 176, ஜெ.ஆகாஸ்- 176, ந.தனுரங்கி- 175, ப.விதுஷனா- 174, வி.விஜயந்தி - 174, பே.ஷாலினி- 174, ஜெ.அர்ச்சுணன்- 174, ம.தர்சிகா- 173, ம.அபிநாத்-173, வி.வைஷ்ணவி-172, சா.டினுசாந்தன்-172, தி.றொஷான்-172, கி.கிஷோர்-172, ந.அருள்ஜீவிதன்-171, நா.சகானா-171, கெ.அனற்கியூரி-171, கி.ஜெனிபர்-170, உ.ராகவி-170, ய.அனோஜியஸ்-169.

கு.யனுஷிக்கா-169, நி.தனுரேஷ்-168, ஸ்ரீ.தேனுஜன்-168, க.லஜிதர்-168, வி.டிலக்சனா-168, வி.நிர்மலன்-167, ஜோ.நிரோஷன்-167, அ.றுக்ஷன்-167, ஸ்.ஸ்ரீவ் நிவேதன்-167, ர.யதுஷா-167, ரோ.கௌரிசங்கர்-167, ச.குகப்பிரியன்-167, பி.கிறிஸ்ரிக்கா-166, த.சங்கீதன்-166, கி.லஜிதன்-165, ஸ்ரீ.ஷாயிதன்-165, ர.கிஷானா கற்லின்-165, அ.பி.மேரி இவேஞ்சல்-165, த.யதர்ஷினி-165.

இ.றொபின்சனா-164,ஜொ. எ.க.கிஷான்-164,ம.துவாரகன்-164,சி. மாதுமை -163, வ.ஜவகர்-163,பி.ஆரணன்-163, கு. சௌமியா -162, இ.சமிந்தன்-162, சி. பிரவீணா-161,வி.லஜிதன்-161, சி. பிரணவன்-161, சு.பிருந்தாபன்-161, ஆ.டினுஜன்-161, சா.கஜானன்-161, மி.சிவஜனனி-160, த.வரணுயா-160, கோ.தமிழினி-160, வி. விதுசன்-160.

ந.நந்தபாலன்-160,சி. திலக்ஷிகன்-160, சு.ஜயந்தினி-160,ஜெ. விவியான்-158, செ.வரண்யா-158, ஜோ. அபிராஜ்-158,இ.வேணுஷா-158, இ. யதுசன்-158, க. பதுசனன்-158, ர.தீபிகா-157, ஜோ. பானுஜா-157,அ.மிதுசிகன்-157,நா.கீர்த்தனா-157, ச.சினேகா-157, யூ.யூடினஸ்-157,ச. பிரவீன்-156,அ.சங்கீத்-156,ச.கோபி கிருஷ்ணா-155, ர.சியாமின் துஷானா-155, மு.தரங்கினி-155.

த.இலக்கியன்-155, ஜெ. துஷிகா-155,வி.டினோஜன்-155,பி.நிரோஷா-155, ச.விமர்சன்-155, ஜெ.அஜிஸ்ரா- 155, ச.பவதாரணி-155, சி.யபிசேக்-154, ஜெ.மிதுஷனா-154, சி.சிந்தூரி-154, வி.விவியன்-154, பி.மிரோஷன்-154, ப.தர்ஷிகன்-154,ப.பெய்த்நயோமி-154, த.இந்துஜா-154, ஜே.மிதுஷனா-154, அ.பி.மேரி ஏஞ்சல்-153, கு.மிதுலா-152, து.கிரோஸ்மி-151.

**யா/ இந்து ஆரம்பப் பாடசாலை**

லோ. டிலோஷன் - 191, ப.பவதாரகன்-190, இ.மாதங்கி- 188, சி. தனலக்ஷன்- 187, சு.மிருதி-186, சி.தனுஸ்ரன்-183, அ.தமிழ்ப்பிரியா -183, பா.சாருணி-152, இ.கலைநிலா-182, சி.அநுபமா-181, ச.சங்கவிதா-181, ச.கலாதரன்-180, ந.வித்தியாசகன்-180, ஜெ.சன்னு தாங்கி-180, வி.லிசானி- 180, இ.திஷோக்- 179, ஜோ.சார்ள்ஸ்- 179, வி.துவாரகன் - 178, த.கஜானன்- 177, உ.சுதர்சன்-177, க.விந்துஜன்- 177, சோ.துவாரகா-177, கி.ஆர்த்திகன்-176, சி.சிவடிஜன்-175, சி.துஷிதன்-175, கு.கஜானி- 175, ச.லக்ஷன் -173, ப.நிலாஜன்-173, ஜ.திவ்யனி-173, சி.திவாக ரன்- 172.

சி.மனாமிர்தன்- 172, இ.அபிநயன் - 172, க.தர்ஷனா- 172, பே.விஷ்ணுகா- 171, கு.அபிஷரன்- 171, ப.கோபிராம்-171, சு.கோபீசன்- 170,ர.ராகப்பிரியா-170, சி.சஞ்சீவன்-170, சு.கிருஷிகா- 169, கு.தீபிகா-169, பா.பிரவீன சர்மா-168, சி.சௌமியா-168, ம.சங்கீத்- 168, மு.பிரகஜன்-168, தா.ஜெயடான்சி- 168, ச.வினோஷன் -167, நா.துவாரகன்- 167.

வ.அவனிகா- 167, பா.ஷாம்பவி- 167, சி.சுபோதினி- 167, கி.ஆரூரன்- 166, ச.சகீர்த்தன்- 166, ந.லக்சிகா- 166, லி.துவாரகன்-165, செ.கோபிகிஸான் -165, சி.யதுர்ஷன்- 165, வி.ஜதுகுலன் - 164, மு.திஷாந்- 164, பா.ஆதிரையன்-164, செ.தர்சிகா- 164, பி.கபிலேஷ்-164, ஸ்ரீ.ஜதுவி- 164, சி.லோகஜன் -164, ச.விஷ்ணுகா- 163.

தே.சிவவருணன்-163, ச.கஜதீபன்-162, சி.சிவாம்ஸன்-162, ம.சிவஷாயினி-162, சு.பரணீதரன்- 162, ப.அஸ்வினி-161, ம.ஹரிகரன்- 161, ப.லக்ஷிகா- 160, ச.சிவதர்சன்- 160, சோ.துவாரகா- 160, தா.ஜிவசாந்- 159, ம.லவதர்சன்- 159, க.வாகீசன்- 158, இ.திவிதரன்-158, சு.கஜானன்- 158, சி.பிரணவன்-157, ப.கபிலினி-157, பி.ஹம்சாயினி- 157, சு.சிவானுஜா-157, சூ.ருகித்-157.

கி.வைஷ்ணவி- 157, து.சிவசங்கர்- 156, அ.கோபிகன்-156, க.அபிமன்யூ-156, ஐ.வைஷ்ணவி- 156, ஏ.திலக்சனா-156, சு.வித்தியாபவன் -155, உ.சுருதி-155, தி.இனியவன்- 155, சு.கிருபாலினி- 155, பா.பாலமயூரி-155, த.திலக்சன் -154, ஸ்ரீ.துவாரகன்-154, கு.உமாகாந்தன்- 154, லோ.தவக்குமரன்- 154.

கெ.தரண்ஜா-153, இ.நிதுஜா-153, இ.பிரணவன் -152, சி.திவிக்ஷனன்- 152, வி.திலக்ஷன் -152, த.கஜன்-152, அ.குருசுதன்- 152, வி.ராகவன்- 151, த.டினேஸ்-151, இ.அபி நகா- 151, ஜீ.மிதுனா- 151.

**யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை**

ஜெ.சங்கீர்த்தனா-180, இ.யனுஷா-178, வ.டிலோஜனா-173,ற.டிலக்ஷிகா-171,ந.கேசினி -171,ரா.கஸ்தூரி-170, ஜீ. தாட்ஷாஜினி-166,ச.லினோஜி-165, கு.பானுஜா-163, கோ. கஜேந்திக்கா- 161, ம.கீர்த்திகா -159, ச.ஹரிஸ்யந்தி-159, தி.விதுஷிகா- 157, கி.யதுஷிகா-157, கு.கார்த்திகாயினி - 156, செ.டாஜ்ஷாயினி -156, ந.அபிநயா- 155, ர.சோபனா-155, கா.சித்தாரா- 154, ர.கீர்த்தனா- 154, இ.அனுஷா- 153.

**யா/ ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்**

அ.ரிதூஸ்கர்- 175, ஜெ. அனோஜ்- 175, இ. பிரியங்கன்-164, சி.சாம்பவி- 161, வ. கிருஷ்ணவர்ணன்- 159, வி.விதுஷா - 157, செ.திலீபா- 156, உ .விதுஷன்- 156, மு.பிரனேஷ்-153, ச.தமிழ்ப்பிரியன் -151, து.காயத்திரி -151.

**யா/ நாவாந்துறை றோ.க.வித்தியாலம்**

அ.பே. மரியபேட்சிகா -172, ஜோ. சதுரியன்- 161, மி.மேரிஸ்ரெபானி- 154, அ.க. அன்ரனி செலோஜியினி -151.

**கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்**

ஜெ.லியான்சியா- 174, இ.நிலாந்தன்-171, பா.தரணிகா-170, நி.நிலுக்ஷன்- 170, ச.நகுலசேகரி- 169, சி.சர்மிதா- 169, க.யனுசயா-168, கு.சீனுகா- 168, ப.கிருகாந்- 166, ஜெ.விதுசாயினி- 165, தே.சஜிந்தன்-164, த.நிஷா -164, பா.கஜலக்ஸ்ம னன்- 164, ச.மதுஷா -162, சி.சங்கவை- 160, ஜே.கவியரசன்- 160, ந.கீர்த்திகா - 159, ச.யுகன்- 155, ல.பிரணியா-155, சு.பவித்திரா-155, சி.அபிசா - 153, சு.லவன்- 152, க.பிரணவன்- 152, கௌ.கனியகன்- 151.

**யா/ பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்**

இ.துஷாரகன் - 181, இ.சாகித்தியா- 173, ஜெ.பிருந்தாபன் - 162, நா.நவசுஜிதா -161.

**யா/ இளையதம்பி இந்து வித்தியாலயம்**

ச. கனிஸ்ரன்- 159, மு. சோபன்தாஸ்- 157.

**யா/நல்லூர் ஆனந்த வித்தியாலயம்**

அ.தனுஷா- 167.

**யா/ வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்**

இ.லக்சிகா- 166, ம.துவாரகா -165, சு.அனுசன் -165, சி.நிரோசனா- 151.

**யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

ர.சிலோஜன்-179, பா.றொபின்சன்-172,ர.நிருபனா-168, ர.வுசைன்-167, சூ.அபிசன்-153.

**யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி**

உ.ஸ்ரீத்தனா-183, ஈ.சௌமியா-178,டா.எட்வினா-178, ர.கஜனிகன்-178, க.புவதாரணி-170,சா.வேணுஜா-166, த.சாரங்கன்-164,ஜெ.அனுஷன்-162, பி.கலைமதி-162, தே.கிரிஸ்ரி நிதர்ஷன்-160, லெ.மேரிஜெரீனா-159, சு.கபிஷா-159,ப.கிதுஸ்ணகி-156,ஜெ.லயன்சிகா-155, சி.சதுர்ஷன்-155,வி.தனஸ்ரிகா-154, டே .டன்சன்றொக்சி-153.

**யா/ மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை**

கே. குந்தவி- 176, தெ. சுஜியெந்திரன் -176, சி.கபிலா- 175, நி. தனிசிகா- 174, பு.துவாரகன்- 173, ச.லக்ஸன்- 171, சா. கோபிகன்-167, கே. தரணிகா- 166, யோ. ஐங் கரன்- 166, கு. சயுகன்-164, உ.சருணுகா- 163, ச.தாமிரபரன்- 161, தெ. சோவென்ஜா- 160, இ.ரிசாந்- 159, ஜெ. ஜெலக்ஸன்- 157, சு.வனித்திரன் - 157, ரா. தீபிகா- 153, பா. திவ்ஜன்- 153, சி. மகிசினி- 152, சி.ஜாம்ஸன்-152, ஜோ. நிதுசா- 151, வ. தர்ஸனா- 151.

**யா/ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம்**

பா. மிசோதன்- 184, சி. தேனுசன்- 182, அ.திவானா- 178, தே.கிருபானந்-175, சூ.சாருஜன்-174, ப.தாருகா- 167, சு.டாரணி-165, இ.பிரவீனன்- 162, சி.ஹரிகரன்- 160, தே.மறீன்நிகிலா- 160, சி.சங்கவன்- 158, ந.சௌமியா-158, பா.அமலன்-155, ற.நிதர்ஷனா- 155, செ. சாரங்கன்- 154, ச.கார்த்திகா- 154, ப.கிஷானி- 153,ம. திவ்யா- 152, இ.ஹார்த்தியாயினி- 151, அ.சுவர்ணா- 151.

**யா/ வயாவிளான் ம.ம.வித்தியாலயம்**

ச.தனோஜிதன்- 179, ம.சுவேதா- 170, த.லோஜிகா- 166, ர. தேனுஜா- 165, க. சுகந்தா- 164, த. பிரசாந்தன் -164, ம.பிருந்திசியா -157, நி.அஞ்சனா- 154, த. அனுஷ்-153, அ.டிலக்ஷன் - 153, ம. தனிஸ்தா- 152.

**யா/ யாழ்ற்ரன் கல்லூரி**

சு.புயலிசை- 178, சி.ரகுராமன்-165, சி.காருண்யன்- 155, ச.லக்ஸன் -155, செ. நாகதீபா- 154, தி.திலக்ஸி- 153.

**யா/ கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலயம்**

இ.நிமல்-172, அ.யசிந்தா- 165, பா.சிவதாஜினி- 162, சோ. கிருத்திகா- 158, சு.கோபிநாத்- 154.

**யா/ வலந்தலை வடக்கு அ.த.க.மி. பாடசாலை**

கி.சிந்துயன்- 161, ஜெ. விதுர்சனா- 158.

**யா/ சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்**

அ.பிரணவரூபன்- 155.

**யா/ ஊரி. அ.மி.த.க. வித்தியாலயம்**

சு.விதுர்ஸன்- 181.

**கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை**

து. வைஷ்ணவி- 186, மா. ஜெயச்சந்திரன்- 182, ந. கரிகிருஷ்ணா- 179, லோ. கஜீவன்- 176, ரா. மிதுசுஜி- 176, பு. சோபிகா-175, த. சுந்தரேஸ்வரி- 175, ரா.கஜனி- 174, செ. சுயாந்தன்- 174, ப. திசாஜினி- 171, கா.ருக்குமணி- 171, ஸ்ரீ.நதீபா 171.

**அனலைதீவு தெற்கு அ.த.க. பாடசாலை**

தே. துவாரகன்- 168, இ.நிதர்சன்- 167, உ. தர்சன்- 157.

**அனலைதீவு வடலூர் அ.த.க். பாடசாலை**

ச.கிருத்திகா- 155, பா. தனுசன்- 154.

**ஊர்காவற்றுறை ஆர்.சி. ஆண்கள் பாடசாலை**

ஞா. டக்ஷன் -163.

**கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் வித்தியாலயம்**

க. விஷ்ணுகா- 157 .

**மு/ ஒட்டுசுட்டான் ஆறுமுகம் தமிழ் வித்தியாலயம்**

உ.ஜனார்த்தனி-171, சி.ஆரணி-169, சி.லக்ஷிகா-158, க.ஹருபார்ட்சன்-154, சா.சர்மிளா-150, ச.ஜென்சிகா -149.

**மு/முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை**

ச.டிசாந்தன்-156, பா.நிக்கிலா-155, ஆ.தாரணி-149,

**மு/யோகபுரம் மகாவித்தியாலயம்**

சி.எடின்சிகா-159, வ.மயூரதன்-157.

**மு/ மல்லாவி மயில்வாகனம் ஆரம்ப தமிழ் வித்தியாலயம்**

பா.அஜிந்தன்-176, ம.அணித்தராஜினி-160, சி.பிரணவராஜ்-151, ஜெ.நிவேதன்- 148.

**மு/தேறாங்கண்டல் அ.த.க.பாடசாலை**

வ.உஷாளினி-153,

**மு/ஆரோக்கியபுரம் தமிழ் வித்தியாலயம்**

க.வசீகரன்-167

**மு/அனிஞ்சியன்குளம் தமிழ் கலவன் வித்தியாலயம்**

அ.சண்முகப்பிரியா-182, செ.சங்கவி-175, து.யதுர்சன்-164

**மு/ஐய்யங்கன்குளம் அ.த.க பாடசாலை**

க.சங்கீத்-154

**மு/பாண்டியன்குளம் ம.வி.**

வா.திலக்ஷன்-152.

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவை தேட இலங்கை அரசாங்கம் முயற்சித்தது

## கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

**இலங்கையில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு ஆதரவாக செயற்பட்டவரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளின் நிலைப்பாட்டை மாற்றியமைக்கும் நோக்குடனேயே மூத்த அமைச்சரான டி.யூ.குணசேகரவை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு அனுப்பி வைத்ததாக கொழும்பு ஊடக வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.**

இலங்கைத் தமிழ் மக்களின் விவகாரங்கள் தொடர்பில் கடும் போக்குடன் இருக்கின்ற வைகோ மற்றும் நெடுமாறன் போன்றவர்களைக் கையாள்வதைவிட இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளை கையாள்வது இலகுவானது என இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கருதியுள்ளார்.

இது குறித்து அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கருத்துத் தெரிவிக்கும் போது விடுதலைப் புலிகளுக்குப் பின்னாலேயே வைகோ, நெடுமாறன் போன்றவர்கள் எப்போதும் நிற்பார்கள். ஆனால் இலங்கை தொடர்பில் இந்திய கம்யூனிஸ் கட்சிகள் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர். அவர்களுக்கு இது குறித்து எடுத்து விளக்க வேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.

அத்துடன் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராக இருக்கும் நீங்கள் இங்குள்ள நிலைமைகள் குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு ஏன் விளக்கம் அளிக்க முடியாது என டி யூ.குணசேகரவைப் பார்த்து அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் டி யூ. குணசேகர அதற்கான முயற்சிகளை தான் செய்யத் தயாராக இருப்பதாக கூறவே அவரை உடனடியாகவே இந்தியாவுக்கு விஜயம் செய்யுமாறு பணித்துள்ளார். அத்துடன் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைத் சந்தித்து போருக்குப் பிற்பட்ட நிலவரங்கள் குறித்து எடுத்துக் கூறுமாறும் டி யூ.குணசேகரவிடம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸும், பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேராவும் வெளிநாடுகளுக்கு சென்றிருந்த நிலையில் டி யூ.குணசேகரவை பிரதி வெளிவிவகார அமைச்சராக நியமித்த அமைச்சர் பதவியுடன் அவரை இந்தியாவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இந்நிலையில் இந்திய விஜயத்தின் போது தனக்குத் தேவையான தகவல்களைத் திரட்டிக் கொண்ட மூத்த அமைச்சர் டி யூ குணசேகர கடந்த 7 ஆம் திகதி புதுடில்லிக்கு விஜயம் செய்துள்ளார். அத்துடன் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரான டி.ராஜாவை அக்கட்சியின் தலைமையகத்தில் கடந்த 8 ஆம் திகதி சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இச்சந்திப்பின் போது இலங்கை அரசாங்கத்தில் கம்யூனிஸ்ட் கட்சிகள் எவ்வாறு கூட்டுச் சேர்ந்திருக்கின்றன என டி.ராஜா அமைச்சரிடம் கேள்வி எழுப்பியுள்ளார். இக்கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் இலங்கை அரசாங்கம் பேரினவாத அரசாங்கம் அல்ல என்றும் இலங்கையின் களநிலைமைகள் குறித்து இந்தியா தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஸ்கரட்டையும் சந்தித்து போருக்குப் பிற்பட்ட இலங்கையின் நிலைமைகள் குறித்து விளக்கம் அளித்துள்ளார். அதேவேளை இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளின் மத்திய குழு உறுப்பினர்களையும் கடந்த 8 ஆம் திகதி ஒன்றாகச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இச்சந்திப்பில் போரின் போது இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், போராளிகளின் புனர்வாழ்வு நடவடிக்கை, அவசர காலச் சட்டம் நீக்கப்பட்டமை தொடர்பில் அவர் எடுத்துக் கூறியுள்ளார். அதேவேளை இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக அமெரிக்கா, பிரித்தானியா உட்பட்ட மேற்கத்தைய நாடுகள் சில செயற்படுவதாகவும் அமைச்சர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதனை தொடர்ந்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை கடந்த 9 ஆம் திகதி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய அவர் அன்று பிற்பகலே கொழும்பு திரும்பியுள்ளதாக கொழும்பு ஊடக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (4-2)

## தரமற்ற உணவுப் பொருட்களை விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

நுகர்வோருக்கு தரமற்ற உணவுப் பொருட்கள் விற்பனை செய்தமை தொடர்பில் நானாயிரம் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகாரசபை தெரிவிக்கின்றது.


அவர்களிடம் இருந்து அபராதமாக பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் மூலம் அரசாங்கத்திற்கு நான்கரை கோடி ரூபா இலாபம் கிடைத்துள்ளதாக அதிகாரசபையின் தலைவர் றூமி மர்சூக் குறிப்பிட்டார்.

இந்த வருடத்தின் ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் 26 ஆயிரம் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இவற்றின் ஊடாக மொத்தமாக 55 கோடி ரூபா அபராதமாக அறிவிடப்பட்டுள்ளதாகவும் நுகர்வோர் அதிகாரசபையின் தலைவர் றூமி மர்சூக் மேலும் கூறினார். (4-2)

## தாருஸ்மான் அறிக்கையை எதிர்க்க ஆபிரிக்க ஒன்றிய நாடுகள் இணக்கம்

### ஸ்ரீபாலடி சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)


இலங்கை தொடர்பில் தாருஸ்மான் குழுவின் அறிக்கைக்கு எதிராக செயற்பட ஆபிரிக்க ஒன்றிய நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஜெனீவா சென்றுள்ள இலங்கை பிரதிநிதிகள் குழு இந்தத்தகவலை வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் நிமல் ஸ்ரீ பாலடி சில்வா ஆபிரிக்க ஒன்றியத்துடன் இடம்பெற்ற சந்திப்பின் போது இந்த இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையகத்தின் மாநாட்டில் சமர்ப்பிக்கப்படுவதாக இருந்ததால் அதற்கு எதிராகச் செயற்பட இந்த நாடுகள் இணங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (4-9)

## இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த சிலர் முயற்சி

### ரட்ணசிறி விக்ரமநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் சிலர் செயற்பட்டுவருவதாக சிரேஷ்ட அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கொரளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இறுதி யுத்தத்தின் போது இலங்கையின் நிலவரம் குறித்து சர்வதேசத்திற்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. எனினும் யதார்த்தத்தை மீறி நாட்டினைப் பாதாளத்தில் தள்ள சர்வதேசம் முயற்சித்துவருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (4-9)

## இலங்கை தமிழ் மாணவர்களுக்கு இந்திய அகதி முகாமில் உதவித்தொகை

(கொழும்பு)

இந்தியாவில் அகதிகள் முகாம்களிலுள்ள இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கும் இந்த ஆண்டு முதல் கல்வி உதவித்தொகை வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

வரவு-செலவுத்திட்ட கூட்டத் தொடரின் கடைசி நாளான நேற்று முன்தினம் தமிழக சட்டப்பேரவையில் பல்வேறு சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்ணா பல்கலைக்கழக இணைப்பு காணாமல் போகும் சட்டமன்ற உறுப்பினர் குடும்பத்திற்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான சம்பளங்கள் திருத்தச்சட்ட மூலம் உள்ளிட்ட 14 பிரேரணைகள் குரல் வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதன்போது முகாம்களில் இருக்கும் இலங்கைத் தமிழர்களில் வருடாந்தம் ஆயிரம் பேருக்கு உயர்கல்விக்கான உதவித் தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவர்களுக்கு விடுதி வசதிகள் வழங்கும் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (4-2)

## மத்திய அமெரிக்க நாடான வெனிசிலிருந்து இலங்கையர்கள் நாடுகடத்தப்படவுள்ளனர்

மத்திய அமெரிக்கா நாடான வெனிசிலிருந்து இலங்கையர்கள் நாடு கடத்தப்படவுள்ளனர். அவர்கள் அமெரிக்காவிற்கு சட்ட விரோதமாகச் செல்வதற்கு வெனிஸ் நாட்டைப் பயன்படுத்தினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவர்கள் வெனிசில் உள்ள பிரபல திரைப்பட தயாரிப்பகமான புளுகோவில் திரைப்படம் ஒன்றைப் பதிவு செய்ய இருப்பதாக அதிகாரிகளிடம் அறிவித்துள்ளனர்.

எனினும் அதற்கான ஆதாரங்கள் எவையும் அவர்களிடம் இல்லை. அத்துடன் அவர்கள் இலங்கையில் திரைப்படம் எடுப்பவர்கள் இல்லையென இலங்கையின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து அவர்களை நாடுகடத்தத் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (4-9)

## விபத்துச் சம்பவத்தில் சாரதிக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

பளைப் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஹன்டர் வாகன விபத்தில் மோட்டார் சாரதி இறந்தமை தொடர்பாக குறித்த ஹன்டர் வாகன சாரதி சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெருமாள் சிவகுமார் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பண்டத்தரிப்பைச் சேர்ந்த திருநாவுக்கரசு பிரபாகரன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த ஹன்டர் சாரதியை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (4-12-24)

# சுய வருமானத்தை ஈட்டித்தரும் வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை

15-VIII



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு…


எங்களது உணவில் நஞ்சு வரக் கூடாது என்பதற்காகவே சிறியளவில் பலவகைத் தாவரங்களை வளர்ப்பது வீட்டுத் தோட்டத்தினூடாக கைகூடியிருக்கிறது. இதிலும் நஞ்சு கலக்க கூடாது. நாமே பயிரிட்டு அதன் மூலம் உற்பத்தியை அதிகரித்து நாட்டை வளமாக்குவோம் எனும் தொனிப்பொருளுக்கு நிறைந்த அர்த்தமுண்டு. இதில் அனைவருமே இணைந்து கொள்ள வாய்ப்புண்டு.

வீட்டுத்தோட்டத்தின் முழுமையான பலனை அதில் திட்டமிட்டு பயிர்களை வளர்ப்பதிலும் அவற்றிலிருந்து பெறப்படும் இலை, காய் ,கிழங்கு மற்றும் கனிகளிலுமே தங்கியிருக்கிறது. இதன்மூலம் எமது உணவுப் பழக்கத்தையும்சற்றேனும்மாற்றிக்கொள்ள முடியும். வெறுமனே குறிப்பிட்ட ஒருசில மரக்கறியுடன் காலத்தைக் கழிப்பதை விடுத்து தினமும் ஒவ்வொருவகையான மரக்கறிப் பயிர்கள், பழவகைகள், கிழங்குப்பயிர்கள் என வித்தியாசமான உணவை உட்கொள்ள வழியிருக்கிறதல்லவா. மாப்பொருள் நிறைந்த உணவைக் குறைத்து நார்ச்சத்து மற்றும் புரதம் நிறைந்த மரக்கறி வகைகளை உணவாக்குவது நீரிழிவு நோயரும்பியிருப்பவர்களுக்கு நல்லது. இதற்கொரு உதாரணம் சிறகவரையாகும். தாவரம் முழுவதுமே பயன்படும் சிறகவரையை, உணவாக்குபவர்கள் குறைவு. உருளைக் கிழங்கே தஞ்சமென இல்லாது எங்களூர் பயிர்வகைகளை உணவாக்குவோம்.

உணவுற்பத்தி சார்ந்த பலவகை எளிய தொழில்நுட்பங்களை உள்வாங்கி இம்முறை நடைபெற்ற விவசாய கண்காட்சி அமைந்திருக்கிறது.

வீட்டுத்தோட்டம் பற்றிய பல விபரங்களை அதனாலேற்படும் பலாபலன்களை இதுவரையிலும் விரிவாகப் பார்த்தோம். வீட்டுத் தோட்டம் எனும் சொல்லிக்குள் சேதன முறையில் பயிர்களை வளர்த்தல், பலவகையான தாவரங்களை தெரிந்து வளர்த்தல், வீட்டில் கிடைக்கும் வளங்களையும் பொருட்களையும் சிறந்த முறையில் பயன்படுத்துதல், ஊட்டச்சத்துடைய தாவரங்களை வளர்த்தல், வீட்டினுள் வரும் சேதனக் கழிவுகளை மீள்சுழற்சி செய்தல், பொழுதை இனிதே போக்கவும் மனதிற்கு புத்துணர்ச்சி தரும் பசுமையான சூழலை உருவாக்குதல், சுய வருமானத்தை தரும் வாய்ப்பினை ஏற்படுத்தல், மாணவர்கட்கு கற்றலுக்கான செயன்முறை பாடசாலையாக இருத்தல், இன்னும் குடும்ப உறுப்பினர்களனைவரும் இணைந்து மகிழ்ச்சியாக செயலாற்றும் இடமாக இருத்தல். இப்படி பலவற்றை நிரற்படுத்திக் கொண்டே போகலாம். ஆக மொத்தத்தில் எமது இனிய வாழ்வுக்கு உறுதுணையாக இன்னும் பக்கபலமாக வீட்டுக்கொரு தோட்டம் இருத்தல் அவசியம் என்றாகிறது. இந்த உண்மையை புரிந்து கொண்டால் வீட்டுத் தோட்டங்களின் உருவாக்கம் இன்னும் உயர்வடையும். பசுமையின் அரவணைப்பை இதனூடாகவும் உணர முடியும்.

செயற்கையுலகினுள் எமது தலையை துளைத்துவிட்டு அங்கு இயற்கையை தேடியலைவதை விடுத்து இயற்கையை அதனது செழிப்புடன் நாம் அனுசரித்து வாழ தலைப்பட வேண்டும். இதற்குரிய ஒரு வழியாகவே வீட்டுத் தோட்டத்தை கருதலாம். வெறுமனே ஏதோ தாவரங்களை நடுதல் என்பதற்கு மேலாக எமது தேவைக்கேற்ப விருப்பத்திற்கிணைவாக தாவரங்களை தெரிந்து நடுகை செய்தல் என்பதனை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இங்கேயும் குடும்ப உறுப்பினர்களது விருப்பத் தெரிவு அவர்களுக்கிடையிலான புரிந்துணர்வு இவற்றுடன் இளையவர்களைத் தட்டிக் கொடுத்து அவர்களின்



தலைமைத்துவத்தை முன்மாதிரியாக கொள்ளவொரு சந்தர்ப்பமாக இதனை கொள்ளலாம். விதை போட்டு அது முளைத்து துளிர் விட்டு தினம் தினம் வளர்ந்த பூ, காய், கனி என தரும் போது இளையோரின் மனதிலும் வளர்ச்சியும் புத்துணர்வும் தலைப்படும். தாவரத்தில் தினந்தினம் ஏற்படும் மாற்றங்கள் இளையவர்களின் எண்ணத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தும்.

மகிழ்ச்சியிலும் தன்னம்பிக்கையிலும் அவர்கள் மேன்மையுற இயற்கையின் இந்நிகழ்வுகள் உதவும். ஒரு காலத்தில் கிராமம்தோறும் சுமை தாக்கியும் ஆவுரோஞ்சரிக் கல்லும் இருக்கும். அவ்வப்போது தலைச் சுமையை இறக்கி வைக்கவும் அரிப்பெடுக்குமிடத்தில் உரோஞ்சிக் கொள்ளவுமாக இவை இருந்தன. ஆனால் தற்போது மாணவப் பருவம் இறக்கி வைக்க முடியாத சுமையை தாங்கி முதுகு வளைந்து கூனிக் குறுகுவதை காணமுடிகின்றதல்லவா. சுயமாக சிந்தித்து வாழ்க்கையை அனுபவித்து கல்வி சுமையாகாது சுகமான தாக திகழ எங்களது பிள்ளைகள் வாழும் கல்வி, கல்வி கற்கும் சுற்றுச் சூழலை பசுமையானதாக வைத்திருப்பது மிகவும் அவசியம். மன நெருக்கீடுகளுக்கும் மனவுளைச்சலுக்குள்ளும் இளஞ்சந்ததியை உள்ளீர்க்க விடாதிருப்பது ஒவ்வொரு பெற்றொருக்கும் அவர் தம் ஆசிரியருக்குமுரிய கடமை.

இதையுணர்ந்தால் பாடசாலையிலும் வீடுகளிலும் வீட்டுத் தோட்டத்தை உருவாக்கலாம். இருப்பதை இன்னும் மெருகூட்டலாம். வெறுமனே வார்த்தைகளாலன்றி செய்கைமூலமாக பசுமையை வளர்த்து அதிலே வளர்ந்து அனைவரும் உண்டு களித்து உயர்வடைய எங்களெல்லோரினதும் கைகள் ஒன்றிணைந்திட வேண்டுமென்பதனை எழுதும் இக்கையும் எதிர்பார்த்திருக்கின்றது. எனவே கனவு மெய்ப்பட வேண்டும்.

பசுமையெனும் தேரின் சில்லுகளை எம்மினிய உறவுகளனைவரும் இணைந்திழுத்து ஊரெங்கும் உலா வர வைக்க வேண்டும். இத்தேரின் மணியொலி எங்களூரெங்கும் இனிய நாதமாய் பசுமைப் புரட்சியின் கீதமாய் ஒலித்திட வேண்டும். அதுவரை இக்கைகள் ஓயாது.

(முற்றும்)

## வைக்கோலைப் பயன்படுத்துவதால் உற்பத்திச் செலவை கட்டுப்படுத்தலாம்

(கிளிநொச்சி)

வைக்கோலை பயனுள்ளதாக்கி மண் வளத்தைப் பேணுவதன் மூலம் உற்பத்திச் செலவை குறைத்து உயர் விளைவைப் பெற முடியும் என கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நெற்பயிர்ச்செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் கடந்த காலங்களில் தமது வயலில் மீதமாகும் வைக்கோலை அரிய வளமாகக் கருதி கால்நடை தீவனமாகவும் வீடு வேயவும் காகிதம் செய்வதற்கும் பயன்படுத்தினர்.

ஆனால், இன்றைய கால கட்டத்தில் நெற்செய்கை பரப்பளவு அதிகரிக்க புதிய நெல்வர்க்க பாவனையும் பசளைத்தூண்டல் பேறுடைய நெல்வர்க்கங்களும் விவசாயிகளிடையே பரவலடைந்துள்ளது.

அத்தோடு நீர்ப்பாசன வசதிகளும் விருத்தியடைந்து வரும் கால போகத்தில் ஏறத்தாழ 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட நிலப்பரப்பிலும் சிறுபோகத்தில் 12 ஆயிரம் ஏக்கர் வரையிலும் நெற்செய்கை மேற்கொள்ளப்படுவதனால் இரசாயனப் பசளைப் பாவனையில் விவசாயிகள் அதிக ஆர்வம் செலுத்துகின்றனர். இதனால் எமது அரியவளமான நீர், நிலம் என்பன மாசடைகின்றன,

வைக்கோலைப் பயன்படுத்துவதனூடாக இரசாயனப் பசளைச் செலவைக் குறைப்பதோடு கூடிய விளைவைப் பெற்று மண் வளத்தைப் பேண முடியுமெனஅவர் மேலும் தெரிவித்தார். (4-3)

## மட்டக்களப்பு சிறைக்கைதிகள் 13 பேருக்கு பொதுமன்னிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து 13 சிறைக்கைதிகள் பொதுமன்னிப்பில் நேற்று முன்தினம் விடுதலை. செய்யப்பட்டனர்.

ஜனாதிபதி வழங்கிய பொது மன்னிப்பின் அடிப்படையிலேயே இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலையின் பிரதம அத்தியட்சகர் ஏ.கித்சிறி பண்டார மற்றும் மட்டக்களப்பு சிறைச்சாலையின் பிரதம காவலாளர் எஸ்.இந்திரகுமார், காவலாளர் எம்.மோகன் ஆகியோர் முன்னிலையில் இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர் என்று அரச ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

போதைவஸ்து மற்றும் சிறுகுற்றங்கள் தொடர்பில் குறுகிய காலம் தண்டனை அனுபவித்து வந்த கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்ட 13 கைதிகளுக்கும் அவர்கள் வீடு செல்வதற்கான பிரயாணச் செலவும் இதன் போது வழங்கப்பட்டன.

கடந்த 12 ஆம் திகதி அன்று தேசிய சிறைக்கைதிகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதையொட்டி ஜனாதிபதியினால் சிறைக்கைதிகள் சிலருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-2)

## அரச பஸ் சேவைகளுக்கு 'மிரேக்கல்' எரிபொருள்

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகளுக்கு மிரேக்கல் எனும் எரிபொருளை பயன்படுத்த போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

என்.மிரேக்கல் பவர் பிறைவெட் லிமிட்டெட் எனும் தனியார் கம்பனியின் உற்பத்தியான இந்த எரிபொருள் சூழலுக்கு பாதுகாப்பானது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. டீசலின் விலையிலும் லீற்றருக்கு 20 ரூபா வீதம் குறைவாக வழங்க இந்நிறுவனம் இணக்கம் தெரிவித்திருப்பதனால் இதனை இ.போ.ச. பேருந்துகளில் பரீட்சித்துப் பார்க்க இணக்கம் தெரிவித்துள்ளதாக பிரதி போக்குவரத்து அமைச்சர் ரோஹண திஸாநாயக்க தெரிவித்தார்.

குறைந்த செலவில் கூடுதல் இலாபம் தரக்கூடிய இத்தகைய எரிபொருளை டீசலுக்கு பதிலாக உபயோகிப்பதன் மூலம் மக்களுக்கு பரந்த சேவையை வழங்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. (4-2)

# மற்றொரு கோணம்


## வாழ்வின் வேர்களைப் பலப்படுத்துங்கள்



ஆன்மீகம் 44

**பதிவுத் திருமணம், பொலீஸ் நிலையத் திருமணம் அதிகமாகி விட்டன இது நல்லதா?**

ஒரு காலத்தில் திருமணங்கள் மிகவும் புனிதமாய் கருதப்பட்டு சடங்குகளோடு நிகழ்த்தப்பட்டன. இப்போது நீதிமன்றங்களிலும் திருமணங்கள் நடக்கின்றன. திரு



மணம் எப்படி நடக்கிறது என்பது முக்கியமில்லை. திருமணவாழ்க்கை எப்படி நடக்கிறது என்பதுதான் முக்கியம் மண்டபத்தில் திருமணம் நடந்தால்ஆயிரம்பேர் வருவார்கள் பதிவுத் திருமணம் என்றால் இரண்டு சாட்சிகள் போதும். அந்தத் திருமண வாழ்க்கை எப்படி நடக்கிறது என்பதுதான் முக்கியம்.

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டதாக ஏன் சொல்லத் தொடங்கினார்கள் தெரியுமா? பலர் திருமணவாழ்வை நரகமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே திருமண வாழ்வையும் சொர்க்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் அப்படிச் சொன்னார்கள். நீங்கள் சொர்க்கத்தின் தன்மையோடு இருந்தால் உங்கள் மணவாழ்வும் சொர்க்கமாக இருக்கும். நீங்கள் நரகத்தின் தன்மையோடு இருந்தால் உங்கள் மண வாழ்வும் நரகமாகத்தான் இருக்கும். எனவே உங்கள் மணவாழ்க்கை எப்படி இருக்கும் என்று கவலைப்படுவதை விடுத்து, உங்கள் தன்மையை எப்படி மேம்படுத்துவது என்பதைப் பாருங்கள். நீங்கள் கிளைகளில் கவனம் செலுத்துகிறீர்களே தவிர வாழ்வின் வேர்களை உறுதி செய்வதில்லை. வேர்களைப் பலப்படுத்தாமல் கனிகளில் செயற்கை ஊசிபோடுவதால் எந்தப்பயனும் கிடையாது.

இன்று திருமணம் செய்து கொள்ளாமல் சேர்ந்து வாழ்கிற வழக்கமும் ஆங்காங்கே தென்படுகிறது. இதில் என்ன சிக்கலென்றால் உங்களுடன் சேர்ந்து வாழ்பவர் வெளியே போனால் திரும்பவருவார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இந்த நிச்சயமின்மை, பாதுகாப்பற்ற சூழலை உருவாக்கியுள்ளது. மேலைநாடுகளில் இதுதான் நிகழ்கிறது. நாகரிகத்தின் பெயரால் சிலவற்றைச் செய்துவிட்டு பிறகு அவதிப்படுபவர்கள்தான் அதிகம். உத்தரவாதம் இல்லாத உறவுகளால் பாதுகாப்பின்மையும் நிச்சயமின்மையும் நிலவி வருகிறது. இந்த உலகில் எந்தவொரு வாழக்கை முறையையும் மிகச்சரியாக வாழ்வதற்கும் பயன்படுத்த முடியும் நிச்சயமில்லாத உறவுகளாலேயே பலருக்குப் பைத்தியம் பிடித்துக் கொண்டிருக்கிறது.

**ஈசாவில் எப்படிப்பட்டவர்களை உருவாக்குகிறீர்கள்?**

நம்மைப்பொறுத்தவரை நாம் நல்லவர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுவரவில்லை. புனிதமானவர்களை உருவாக்குவது நம்முடைய நோக்கமில்லை. மனிதத் தன்மையில், மனித நேயத்தை உயிர்ப்போடு வைத்திருக்கிற கூர்மையான மனிதர்களைத்தான் நாம் உருவாக்குகிறோம். இவர்களுடைய எண்ணிக்கை கூடும் என்றால் அவாகளால் தங்கள் கனவை நனவாக்க முடியும். இந்த உலகில் மிகப்பெரிய அமைதியை ஏற்படுத்த இயலும். இன்று... இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு பொருளாதாரத் துறையில் நாம் வளர்வதற்காக வல்லமை பெறுகிற சூழல் வந்திருக்கிறது. இத்தனை காலம் இந்தியாவை வளரும் நாடு... வளரும் நாடு என்றே சொல்லி வந்திருக்கிறோம். அது வளர்ந்த நாடு என்ற எல்லையை தொடுவதற்கான காலம் நெருங்கிக் கொண்டே இருக்கிறது. எதை நம்மால் செய்ய இயலும் என்பதற்கும்,என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதற்குமான இடைவெளி மிக அதிகமாக இருக்கிறது. ஆனால், நடக்க வேண்டியதற்கான சாத்தியத்திற்கும் நடைபெறுகிற விடயத்திற்குமான இடைவெளி ஒருவகையில் மிகவும் தூரமாக இருக்கிறது. ஒருவகையில் மிக நெருக்கமாக இருக்கிறது. இந்த குறுக்குச்சாலையை நாம் கடக்கப் போகிறோமா அல்லது அங்கேயே நிற்கப் போகிறோமா என்பதுதான் இப்போதைய கேள்வி. பொதுவாகவே புரட்சி என்று சொன்னால் அது ஏதோ ஓர் கோபத்தில் ஏற்படுகிறது என்றுதான் காலாகாலமாக இந்த உலகம் அறிந்துவைத்திருக்கிறது. கோபத்தில் ஏற்படுத்திய புரட்சியென்பது ஒருசமூக அநீதிக்கு மாற்றாக இன்னொரு சமூக அநீதியைக் கொண்டுவருவதுதான். ஆனால், கோபத்தின் அடிப்படையில் இல்லாமல் பரிவுணர்வின் அடிப்படையில் ஓர் அன்பான புரட்சியினை எற்படுத்த நாம் நினைத்திருக்கிறோம். (தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# நீலாவணன் காவியங்கள்

## ஓர் அறிமுகம்

இரண்டாம் காவியம் வடமீன் மொத்தம் 47 விருத்தப் பாக்களால் படைக்கப்பட்டுள்ளது. இக்காவியம் உத்தியோக நிமித்தம் கொழுப்பிலே வசிக்க நேரிடும் யாழ்ப்பாணத்து நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த புது மணத் தம்பதிக்கிடையே-அவர்களுடைய கொழும்பு வாழ்க்கையில் அவர்கள் எதிர்கொள்ள நேரிடும் பாலியல் சார்ந்த குடும்பப் பிரச்சனை ஒன்றைத் தொட்டுக் காட்டுவதே இக்காவியம்.

மனித வாழ்வில் எழும் பாலியல் பிரச்சனைகளைக் கருப்பொருளாகக் கொண்டு மேற்கு நாடுகளில் எழுத்துக்கள் தோன்றிய அளவுக்குத் தமிழிலே அவற்றை எழுத துணிபவர்கள் குறைவு. தமிழர் தம் இறுக்கமான பண்பாட்டுப் பின்புலம் அதற்கு

02

செங்கதிரோன்

காரணமாயிருக்கலாம். ஆனாலும் துணிவு மிக்க சில இலக்கிய ஆளுமைகளினால் இவ்வகை எழுத்துக்கள் எழாமலுமில்லை. குடும்பத்தை யாழ்ப்பாணத்தில் வைத்துவிட்டு கொழும்பிலே வசிக்கும் ஓர் நடுத்தரவர்க்க 'கிளறிக்கல் சேவன்ற்' எதிர்கொள்ளும் பாலியல் உட்பட்ட வாழ்வியல் பிரச்சனைகளைக் கருப்பொருளாக்கி எழுத்தளார் எஸ்.பொ.அவர்கள் சடங்கு எனும் நாவலைப் படைத்தார். அத்தகையதோர் துணிச்சலோடும்-இலக்கிய ஆளுமையோடும்தான் நீலாவணன் இவ் வடமீன் காவியத்தைப் படைத்துள்ளார். ஆனால் தமிழர்தம் பண்பாட்டு விழுமியங்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்பாடாமல் அந்த தம்பதியினருக்கு இடையே ஏற்பட்ட பாலியல் சார்ந்த குடும்பச் சிக்கல் ஒன்றினை-தாம்பத்திய உறவில் ஏற்படும் ஒரு சிறு சலனத்தைத் தனது நுட்பமான படைப்பாளுமையால் தீர்த்து வைக்கிறார். இக்காவியத்தில் வரும் அருந்ததி, தன் கற்பினை தன்மீது சந்தேகம் கொள்ளும் தன் கணவன் மூர்த்திற்கு நிரூபிக்கிறாள்.

மூன்றாவது காவியம் வேளாண்மை. நீலாவணன் எழுதிய கடைசிக் காவியமே இது. முற்றுப்பெறாத காவியம் 1965 இல் இக்காவியத்தின் அரைவாசி எழுதப்பட்டுருந்ததாக இந்நூலுக்குக் கவிஞர் சண்முகம் சிவலிங்கம் வழங்கியிருந்த சிறந்த முன்னுரையில் இருந்து அறியக் கிடைக்கிறது. இக்காவியம் குறித்த விபரமான அறிமுகம் ஒன்றினை இங்கு முன்வைப்பது அவசியமாகும்.

கவிஞர் நீலாவணன் மட்டகளப்பு மண்ணின் வாழ்க்கையை இலக்கியமாக்க எத்தனித்தார். அதன் விளைவே அன்னாரின் **வேளாண்மைக் காவியம்.** ஈழத் தமிழ் பிரதேசங்களில் தனித்துவம் வாய்ந்த தான மட்டக்களப்பின் பாரம்பரியங்களையும் சடங்குகளையும் அம்மக்களின் வஞ்சகமில்லா வாழ்க்கை முறைகளையும் வைத்துக் காவியம் ஒன்றினை வடிப்பதற்காகவே நீலாவணன் வேளாண்மையை விதைத்தார். ஆனால் வேளாண்மைக் காவியத்தை நிறைவு செய்து அதன் முற்றிய முழு விளைச்சலையும் காணும் முன்பே "கதிர்ப் பருவத்திலேயே" அவரின் உயிரைக் காலன் கவர்ந்து சென்று விட்டான். **வேளாண்மைக் காவியத்தின் குடலை, கதிர்** ஆகிய இருபகுதிகளையே அவர் எழுதி முடித்திருந்தார். அவையும்கூட கையெழுத்துப் பிரதியாகவே அவர் வீட்டில் கிடந்தது. கவிஞர் நீலாவணன் 11.01.1975 காலமானார். 1980 களின் காலப்பகுதியில் ஈழத்தின் முது பெரும் பிரபல எழுத்தாளர் காலஞ்சென்ற வ.அ. இராசரத்தினம் அவர்கள் கல்முனைப் பிரதேசத்திற்குச் சென்றிருந்த போது கவிஞர் மு.சடாட்சரன் அவாகள் கவிஞர் நீலாவணன் எழுதி முற்றுப்பெறாத **வேளாண்மை** எனும் காவியத்தை நீலாவணனின் மனைவியிடமிருந்து பெற்று அவரிடம் படிக்கக் கொடுத்தார். அப்போது வ.அ.அவர்கள் மூதூரிலே சிறு அச்சுக்கூடம் ஒன்றிற்குச் சொந்தக்காரனாக இருந்தார். அதனால் **வேளாண்மை** (குறுங் காவியம்) என்னும் நூலின் முதற் பதிப்பு 1982 செப்ரெம்பரில் தங்கம் வெளியீடாக (தங்கம் வெளியீடு, திரிகூடம், மூதூர்) வெளிவந்தது. நூலுக்கு முன்னுரை வழங்கியுள்ள வ.அ.இராசரத்தனம் அவர்கள் பின்வருமாறு எழுதுகிறார்.

"இக்காவியத்தின் மூலம் இயந்திர நாகரீகத்தாற் கற்பழிந்து விடாத மட்டக்களப்பின் குமரிய ழகையும், மட்டக்களப்பாரின் விருந்திருக்க உண்ணாத வேளாண்

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

மைத்தனத்தையும் வெளியுலகுக்குக் காட்டத்தான் நீலாவணன் ஆசைப்பட்டிருக்கின்றார். எனத் துலாம்பரமாகிறது."

(தொடரும்)

# புரட்டாதி மாத இராசி பலன்கள்




(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்)

**முன்யோசனையுடன் செயற்பட்டால் முன்னேற்றம்!**

***வேகத்தோடு விவேகமும் இணைந்து செயற்படுத்தும் மிதுன இராசி நேயர்களே!***

நிறைய சம்பாதிக்க வேண்டும். நிறைவான வாழ்க்கையை வாழ வேண்டும் என்ற எண்ணம் இளமையிலேயே உங்கள் இதயத்தில் குடி கொண்டிருக்கும்.

உங்கள் பேச்சு அழகான பேச்சு மட்டுமல்ல ஆழமான பேச்சாகவும் இருக்கும். அனுபவமுடைய அறிவின் மூலம் எந்தக் காரியத்தை எப்படிச் செய்தால் பலன் கிடைக்கும் என்பதை அறிந்து வைத்திருப்பீர்கள். அதே சமயம் மற்றவர்களுக்கும் அதை எடுத்துரைப்பீர்கள்.

உங்களுக்கு இந்த புரட்டாதி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இராசிநாதன் புதன் மாதத் தொடக்க நாளிலேயே உச்சம் பெறப்போகிறார்.

அப்புறமென்ன? எதற்கும் யோசிக்க வேண்டியதில்லை. நீங்கள் செய்யும் செயல்களில் எல்லாம் வெற்றி கிடைக்கப் போகிறது.

அர்த்தாஷ்டமச்சனியின் ஆதிக்கம் இருக்கும் பொழுது எப்படி முழுமையாக பலன் கிடைக்கும் என்று நீங்கள் நினைக்கலாம்.

இராசிநாதன் அந்தச் சனியோடு சூழ்நிலை உருவாவதால் கெடு பலனில் கூட ஒரு சிலருக்கு நல்ல பலன்கள் வந்து சேரலாம். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து மகிழ்ச்சியடைவீர்கள். கூட்டாளிகள் விலகினாலும் புதியவர்கள் வந்திணைவர்.

கேந்திராதிபத்திய தோஷம் பெற்ற கிரகமான குரு இம்மாதம் வக்ரம் பெறுவது யோகம் தான். எனவே வழக்குகளில் வெற்றி கிடைக்கும். வாய்தர்க்கம் ஓயும்.

சனீஸ்வர வழிபாடும் விஷ்ணு, அனுமன் வழிபாட்டையும் ஒவ்வொரு சனிக்கிழமையும் முறையாக மேற்கொள்ளுங்கள். அப்பொழுது தான் தடைக்கற்கள் எல்லாம் படிக்கற்களாக மாறும். சனி விலகிய பின்னர் உங்கள் எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும்.

இராசிநாதன் புதன் மாதத் தொடக்க நாளில் கன்னி இராசியில் உச்சம் பெறுகின்றார். நான்கில் உச்சம் பெறும் பொழுது குடும்பத்தில் சுகங்களும் சந்தோஷங்களும் அதிகரிக்கும்.

பயணங்களால் பலன் கிடைக்கும். பாசமின்றி இருந்த உறவினர் பாசத்தோடு பழக முன்வருவர். ஊர் மாற்றச் சிந்தனைகள், இடமாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். கடித அனுகூலம் உண்டு. மாற்று மருத்துவத்தால் நோய் குணமாகும்.

எதிர்வரும் ஒக்டோபர் 5 ஆம் திகதி துலாம் இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். அதற்கு முன் முதன் நாளே புதனும் அதோடு வந்திணைகிறார்.

5, 12 இக்கு அதிபதி 5 இல் சஞ்சரிக்கும் பொழுது சுய காரிய பேச்சுக்கள் நல்ல முடிவிக்கு வரலாம். பிள்ளைகளின் கல்யாண கனவுகளை நனவாக்குவீர்கள்.

குருவின் பார்வை சுக்ரன் மீது பதிவதால் மூடு விழாக் கண்ட தொழில்கள் இனி திறப்பு விழா காணும் சூழ்நிலை உருவாகும். வாழ்க்கைத் துணை வழியே வந்த பிரச்சினைகள் அகலும் வருமானம் திருப்தி தரும்.

இம்மாதம் கண்ணன் வழிபாடு உங்கள் கவலைகளைப் போக்கும். அருகிலுள்ள விஷ்ணு ஆலயத்திற்கு புதன்கிழமை தோறும் சென்று இலட்சுமி சமேத வெங்கடேஷப் பெருமாளை வழிபட்டு வாருங்கள். உங்கள் இலட்சியங்கள் அனைத்தும் நிறைவேறும்.

இம்மாதம் கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது. கடன் சுமையில் இருந்து ஓரளவு நிவாரணம் பெறுவீர்கள். குடும்பச் சுமை அதிகரிக்கிறதே என்று கவலைப் படுவீர்கள்.

உடனிருப்பவர்களை விமர்சிப்பதால் பிரச்சினை உருவாகலாம். குழந்தைகளின் கல்வி நலன் கருதியும் கல்யாணம் கருதியும் எடுத்த முயற்சி ஒக்டோபர் 6 க்கு மேல் நடைபெறத் தொடங்கும்.

சொத்து விற்பனையால் கிடைத்த இலாபத்தைக் கொண்டு மற்றொரு சொத்தை வாங்குவது நல்லது.




(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம் )

**இடமாற்றங்கள் இனிமை தரும்!**

***தங்கள் காரியத்தை சாதித்துக் கொள்வதை விட மற்றவர்களின் காரியத்தை சாதித்துக் கொடுப்பதில் வல்லவர்களாக விளங்கும் கடக இராசி நேயர்களே!***

பொறுமையையும் நிதானத்தையும் உங்களிடம் பார்க்க முடியாது. புறப்பட்டுச் செல்லும் பொழுது புயல் வேகத்தில் செல்வீர்கள். பொது வாழ்வில் தங்களை அர்ப்பணித்துக் கொள்பவர்களின் பட்டியலிலும் முதலிடம் பிடிப்பீர்கள்.

அவசரத்தில் பல காரியங்களை செய்யாமல் விட்டுவிட்டு பின்னர் அடடா! இப்படி செய்து விட்டோமே என்று கவலைப்படுவீர்கள். தங்களுக்கு ஏற்படும் பிரச்சினைளை மனத்திற்குள்ளேயே வைத்திருப்பீர்களே தவிர மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லமாட்டீர்கள்.

சிந்திக்கும் ஆற்றலாலும் சிறப்பு பெற்றவர்களும் நீங்கள் தான். உங்கள் யோசனைகள் மற்றவர்களுக்கு கை கொடுக்கும். உங்களுக்கு இந்த புரட்டாதி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இராசிநாதன் சந்திரன் உச்சம் பெற்று மாதம் தொடங்குவதால் நல்ல வாய்ப்புகளே இல்லம் தேடி வரும் என்று சொல்ல வேண்டும். இருந்தாலும் சந்திரனோடு கேது இணைந்திருப்பதால் திடீர் இடமாற்றம், ஊர் மாற்றங்கள் ஒரு சிலருக்கு வந்து சேரும்.

மனதிற்கு பிடிக்காத இடங்களுக்கு மாறுதல் ஏற்பட்டு மகிழ்ச்சியைக் குறைக்கலாம். யோகாதிபதி செவ்வாய் வலிமை இழப்பதால் எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது உடன் பிறப்புக்கள் வழியில் அனுசரித்து சென்றால் தான் உதவிக் கரம் நீட்டுவர்.

பூர்வீக சொத்துக்களில் ஏற்படும் தகராறுகள் பஞ்சாயத்துக்கள் மூலம் ஒழுங்கு செய்து கொள்வது நல்லது. இடம், பூமியால் பிரச்சினைகள் உருவாகி மறையும். தனாதிபதி சூரியன், அஷ்டமாதிபதி சனியுடன் இணைந்து சஞ்சரிப்பதால் பணம் வந்த மறுநிமிடமே செலவாகலாம். எனவே சூரிய, சனி வழிபாட்டை யோக பலம் பெற்ற நாளில் வைத்துக் கொள்வதோடு அசுர கிரகத்தையும் அர்ச்சனை செய்து வழிபட்டு வருவது நல்லது.

மூன்றுக்கு அதிபதி புதன் மூன்றில் உச்சம் பெற தொடங்கும் மாதமிது. அத்தோடு தனாதிபதி சூரியனும் சுகாதிபதி சுக்ரனும் இணைந்து சஞ்சரிப்பதால் வாழ்க்கைத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். மாமன், மைத்துனர் வழி ஆதரவு கிடைக்கும் கூடப் பிறந்தவர்களின் திருமணத்தை கோலாகலமாகச் செய்து வைப்பீர்கள்.

வெளிநாட்டுப் பயணம் விரும்பியபடியே ஒரு சிலருக்கு அமையும். எதிர்வரும் ஒக்டோபர் 4 ஆம் திகதி துலாம் இராசியில் புதனும் 5 ஆம் திகதி அத்தோடு சுக்ரனும் வந்திணைகிறார்கள். அதை வக்ர வியாழன் பார்ப்பதால் புதிய ஒப்பந்தங்கள் அதிகரிக்கும். பொருளாதார நிலை உயரும். பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் வந்து சேரலாம். அந்நிய தேசத்தில் இருந்து வரும் அனுகூலச் செய்தி நம்பகத்தன்மை உடையதா? என்பது சந்தேகம் தான். மாற்றம் செய்ய உகந்த நேரமிது. இளைய சகோதரத்தால் இனிய செய்தி வந்து சேரும்.

இம்மாதம் கேது உங்கள் இராசியைப் பார்ப்பதால் ஆனைமுகப் பெருமான் வழிபாட்டையும் யோகாதிபதி செவ்வாய் நீச்சம் பெறுவதால் அங்காரக வழிபாட்டையும் முறையாக மேற்கொள்ளுங்கள். நவராத்தீரி விரதமும் துர்க்கை, சரஸ்வதி, இலட்சுமி வழிபாடும் உங்கள் துயரங்களைப் போக்கும்.

இம்மாதம் மற்றவர்களை நம்பி முடிவெடுக்க வேண்டாம். தாய்வழி தனலாபம் வருவதிலிருந்த தடை அகலும். உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்வது நல்லது. கணவன்- மனைவிக்குள் அவ்வப்போது பிரச்சினைகள் தலைதூக்கும். குடும்ப பெரியவர்களை ஆலோசித்து முடிவெடுப்பது நல்லது. ஒக்டோபர் 6 ஆம் திகதிக்கு மேல் தங்கம், வெள்ளி சேர்க்கை உருவாகலாம். இராகு-கேது ப்ரீதி நன்மை தரும். (தொடரும்.)

## சிவல்புரி சிங்காரம்

# சிங்கராஜ வனப்பகுதிக்கு அண்மித்த வீதி அமைப்பு இடைநிறுத்தப்பட்டது

தேசிய மரபுரிமைகளில் ஒன்றான சிங்கராஜ வனத்திற்கு அண்மித்த பகுதியில் மேற்கொள்ளப்படும் வீதி அகழ்வு நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு சுற்றாடல்துறை அமைச்சினால் உத்தர.விடப்பட்டுள்ளது. விடயங்களை ஆராய்ந்து இறுதித் தீர்மானம் வழங்கப்படும் வரை வீதி அகழ்வு நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கு தீர்மானித்ததாக அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

சிங்கராஜ வனத்தின் ஊடாக வீதியொன்றை அமைக்கவுள்ளதாக சூழலியலாளர்கள் அண்மைக்காலமாக குற்றஞ்சுமத்தியதாக அமைச்சர் கூறினார்.

ஆனாலும் குறித்த வீதி நீண்ட காலமாகவே சிங்கராஜ வனத்தில் இருந்ததாகவும் காட்டிற்கு நடுவே கிராமம் ஒன்றுக்கு செல்வதற்காக இந்த வீதி அமைக்கப்பட்டிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வீதியின் ஒரு பகுதி காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் பொறுப்பில் உள்ளதாகவும் அந்தப் பகுதியை வனப் பாதுகாப்பு திணைக்களத்திற்கு வழங்குவதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா கூறினார்.

எவ்வாறாயினும் விடயங்களை ஆராய்ந்ததன் பின்னர் இறுதித் தீர்மானம் எடுக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வனப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை என்பன இணைந்து குறித்த பகுதிக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை செல்லவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். (4-2)


# களனி கங்கையின் தூய்மை மட்டம் குறைவடைகின்றது

களனி ஆற்று நீரை அண்மையில் பரிசோதனைக்கு உட்படுத்திய போது அதன் தூய்மை மட்டம் குறைந்து செல்வதாகவும் இதனால் அந்நீர் குடிப்பதற்கு ஏற்புடையதாக இருக்கமாட்டாதென சூழல் நட்பு தொண்டர்கள் எனும் அமைப்பு நேற்று முன்தினம் கூறியுள்ளது.

களனி ஆற்றின் ஆரம்ப இடமான சிவனொளிபாதமலை பிரதேசம் தொடங்கி அந்த ஆறு கடலில் கலக்கும் இடமான வத்தளை வரை பயணித்த இளம் தொண்டர்களின் உதவியுடன் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது. 13 நாட்கள் இந்த சோதனை இடம்பெற்றது. கடலை மேற்படி ஆறு அண்மிக்கும் போது அதன் தூய்மை குறைந்து செல்வதாக சூழல் நட்புத் தொண்டர் நிறுவுனர் தலைவர் காஞ்சனா வீரக்கோன் கூறினார். இந்த நீரை குடிக்கப் பயன்படுத்த முடியுமா என உறுதி செய்ய இன்னும் பல சோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.

இயற்கை தாவரங்களும் தூய்மையான சூழலுமே தரமான குடிநீரை உறுதி செய்வன. செயற்கை வழி தூய்மைப்படுத்தலுக்கு ஓர் எல்லை உண்டு என அவர் கூறினார். இதே வேளை, நாட்டின் நான்காவது பெரிய ஆறான களனிகங்கை கொழும்பு மக்களின் குடிநீர் தேவையில் 80 சதவீதத்தை பூர்த்தி செய்கின்றது. ஆறுகளை தூய்மையாக பாதுகாக்க வேண்டிய அவசியம் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டியுள்ளது என மேல் மாகாண சுற்றுச்சூழல் அமைச்சர் உதய கம்மன்பில கூறியுள்ளார். (4-2)

# அமைச்சர் மேர்வின் சில்வாவின் நடவடிக்கைக்கு தேரர்கள் பாராட்டு



(கொழும்பு)

பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வாவின் நடவடிக்கைகளுக்கு மாநாயக்க தேரர்கள் பாராட்டு வெளியிட்டுள்ளனர்.

சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயிலில் நடைபெறவிருந்த மிருகபலி பூஜையை தடுத்தமை பாராட்டப்பட வேண்டியது என அஸ்கிரி பீடாதிபதி உடுகம ஸ்ரீ புத்தரக்கித தேரர் பாராட்டியதாக அமைச்சரின் ஊடகப் பிரிவு செய்தி வெளியிட்டுள்ளது.

மிருகவதை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படாமையினால் கௌதம புத்தர் பாதம் பதிந்த நாட்டில் தொடர்ச்சியாக இவ்வாறான மிருகவதைச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும் அமைச்சர் மேர்வின் சில்வாவின் நடவடிக்கை பாராட்டுக்குரியது எனவும் அஸ்கிரி பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இரத்தம் தோய்ந்த இடங்களுக்கு கடவுள் அருள் பாலிக்க மாட்டார்கள் எனவும் இந்த வழிபாட்டு முறைமை பிழையானது. மிருகங்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்கு அமைச்சர் எடுத்த நடவடிக்கை வரவேற்கத்தக்கது என அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேர்வின் சில்வா போன்ற நபர்கள் இந்த நாட்டுக்கு தேவை என அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, பலி பூஜைக்கு இடையூறு ஏற்படுத்தியவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டுமெனக் கோரி முன்னேஸ்வர கோயிலில் விசேட பிரார்த்தனைகள் நடைபெற்றுள்ளன. (4-2)

# வெளிநாட்டு இராஜதந்திரிகளை சந்திப்பதற்கு புதிய பட்டியல்

## லக்ஸ்மன் யாப்பா தெரிவிப்பு

இலங்கைக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்திப்பது தொடர்பில் புதிய விதிமுறைகள் அறிமுகம் செய்யப்படவுள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய இந்தப் புதிய விதிமுறைகள் அறிமுகம் செய்யப்படவுள்ளன.

இலங்கைக்கு விஜயம் செய்யும் இராஜதந்திரிகள் தற்போது யாரை வேண்டுமானாலும் சந்திக்க முடியும் என்ற நிலைமையே காணப்படுகின்றது.

எனினும் இந்த நடைமுறையில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் குறிப்பாக யார் யாரைச் சந்திக்கமுடியும் என்பது குறித்த பட்டியல் ஒன்று தயாரிக்கப்படவுள்ளதாகவும் பதில் அமைச்சரவைப் பேச்சாளர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகள் மற்றும் அரசாங்க உயர் அதிகாரிகளின் பதவிப் பட்டியல் ஒன்று தயாரிக்கப்படவுள்ளது.

குறித்த பதவிகளை வகிக்கும் நபர்கள் மட்டுமே வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துமுடியும்.

இராஜதந்திரிகள் கடைநிலை ஊழியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதனால் நாட்டின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்தில் தெளிவுபடுத்தியதாக அமைச்சர் யாப்பா சுட்டிக்காட்டியுள்ளார். (4-2)

# படகு மூலம் அவுஸ்திரேலியா சென்ற 42 பேருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)


படகு மூலம் அவுஸ்திரேலியா நோக்கி சென்று கொண்டிருந்த போது கல்முனை கடற்பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டவர்களில் 42 பேரை எதிர்வரும் 29 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிமன்றமொன்று உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, கைது செய்யப்பட்ட 44 பேரில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தீவிர அங்கத்தவர்கள் என சந்தேகிக்கப்படும் 6 பேரும் உள்ளதாக குற்றப்புலனாய்வுப் பணியகத்தினர் நீதிமன்றில் நேற்று தெரிவித்தனர்.

மேற்படி 44 சந்தேக நபர்களில் பெண்களும் குழந்தைகளும் அடங்குவதாக கொழும்பு பிரதம நீதிவான் ரஷ்மி சிங்கப்புலியிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

நேத்ரா துவ எனப் பெயரிடப்பட்ட ட்றோலர் படகில் சென்று கொண்டிருந்தபோது கடற்படையினரால் அவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் சந்தேக நபர்கள் மீது குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்படும் எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சிசிர சேனநாயக்க குழந்தைகளை அவர்களின் தாத்தா- பாட்டியிடம் ஒப்படைக்குமாறு கோரினார். அதையடுத்து சந்தேக நபர்களை எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் குழந்தைகளை அவர்களின் தாத்தா- பாட்டியிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (4-2)




★ 1630-மசாசுசெட்ஸ், பொஸ்டன் நகரம் அமைக்கப்பட்டது.

★ 1789-வில்லியம் ஹேர்ச்செல் மைமாஸ் என்ற துணைக் கோளைக் கண்டுபிடித்தார்.

★ 1809-பின்லாந்து போரில் சுவீடனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் அமைதி ஒப் பந்தம் ஏற்பட்டது. பின்லாந்து ரஷ்யாவிடம் கையளிக்கப்பட்டது.

★ 1858-ஆழ்கடல் தொலைத்தந்திச் சேவை இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டது.

★ 1862-அமெரிக்க உள்நாட்டுப் போரில் மேரிலாந்தில் கூட்டமைப்பினருக்கும் அமெரிக்கப் படைகளுக்கும் இடையில் இடம்பெற்ற போரில் 4 ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டனர். பல்லாயிரக்கணக்கானோர் காயமடைந்தனர். இதுவே அமெரிக்காவில் ஒரே நாளில் அதிக இரத்தக்களரியை ஏற்படுத்திய போராகும்.

★ 1908-ஓர்வில் ரைட்டின் வானூர்தி தரையில் மோதிய விபத்தில் தோமஸ் செல்பிரிட்ஜ் என்பவர் விமான விபத்தில் முதலாவதாக உயிரிழந்தார்.

★ 1928-சூறாவளி தென்கிழக்கு புளோரிடாவைத் தாக்கிய தில் ஆயிரத்து 500 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1956- அவுஸ்திரேலியாவில் முதன் முதலாக தொலைக்காட்சி காண்பிக்கப்பட்டது.

★ 1974-வங்காளதேசம், கிரெனடா, கினி-பிசாவு ஆகியன ஐ.நா. வில் இணைந்தன.

★ 1976-நாசா தனது முதலாவது மீள் விண்ணோடமான எண்டர்பிறைசஸ் பற்றிய தகவல்களை வெளியிட்டது.

★ 1978-இஸ்ரேல், எகிப்து ஆகிய காம்ப்டேவிட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

★ 1980-போலந்தில் சொலிடாரிற்றி தொழிற்சங்கம் உருவாக்கப்பட்டது.

★ 1991-லினக்ஸ் இயங்குதளம் (0.01) இணையத்தில் கிடைத்தது.

★ 1993-கடைசி ரஷ்யப் படை போலந்தில் இருந்து வெளியேறியது.

★ 2004-இந்தியாவில் தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.

**பிறப்புக்கள்**

★ 1897-வில்லியம் கோபல்லாவ, இலங்கையின் ஆளுநர், முதலாவது ஜனாதிபதி (இ.1981)

★ 1989-வ.ரா.மணிக்கொடி, எழுத்தாளர்

★ 1906-ஜே.ஆர்.ஜெயவர்த்தன, இலங்கையின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதி (இ.1996)

★ 1930-லால்குடி ஜெயராமன், வயலின் மேதை

★ 1944-ரைன் மெஸ்னர், இத்தாலிய மலையேறுநர்

★ 1874-ரஷீத் வாலஸ், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

**இறப்புக்கள்**

★ 1953-வி.க.தமிழறிஞர் (பி.1883)

★ 1979-எம்.ஆர்.ராதா, தமிழ்த் திரைப்பட நாடக நடிகர் (பி.1907)

★ 1994-கார்ல் பொப்பர், ஆஸ்திரிய மெய்யியலாளர் (பி.1902)

**சிறப்பு நாள்**

★ அங்கோலா- தேசிய வீரர்கள் தினம்



★ 1879-ஈ.வெ.ரா.பெரியார், திராவிடர் கழகத் தந்தை (இ.1973)

# நவீன எண் சோதிடம்




## உலகில் பெற வேண்டிய பாக்கியங்கள் எல்லாம் பெற்று வாழ்வர்

48

### சுக்கிரன் பொதுப் பலன்

சுக்கிரனைப்பற்றி அறியாதவர்கள் உலகில் யாரும் இல்லை எனலாம். இதை நம் நாட்டு வழக்கில் வெள்ளி எனக்கூறுவர். சிலருடைய முன்னேற்றத்தையும், அவர்களுடைய சுகபோக வாழ்க்கையையும் பார்த்து மற்றவர்கள் விமர்சிக்கும் போது "அவனுக்கென்ன சுக்கரதிசை அடிக்கிறது எனக்கூறுவர். சுக்கிரன் என்றாலே ஆடம்பரம், பகட்டு என்பது எல்லோர் மனதிலும் உள்ளது. இப்படிப்பட்ட சுக்கிரனை கிரகங்களில் அசுர குருஎன அழைக்கப் படுகிறது.

இந்த உலகத்தில் உள்ள எல்லாவித சுகபோக பாக்கியங்களையும் அனுபவிக்கத் தூண்டும் தன்மையுடையது சுக்கிரன். ஆனால் பெயர் நன்றாக அமைந்து விட்டால் பெண்கள் ஆண்களாலும், ஆண்கள் பெண்களாலும் கெடும் நிலை உண்டாகிவிடும். பொதுவாகவே இந்த ஆதிக்கக்காரரர்களின் நடவடிக்கைகள் கவர்ச்சியானதாக இருக்கும். பார்க்கும் போதே புன்முறுவலுடன் காட்சியளிப்பர். எப்போதும் சுகங்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பர். பணக்காரர்களாக வாழும் இவர்கள் துன்பங்களை அதிகம் நினைக்காது இன்பகரமான நிகழ்ச்சிகளைப்பற்றியே சிந்தனை செய்து கொண்டிருப்பர். நாம் இறக்கப் போகும் மனிதர் தானே, உலகத்தில் உள்ளதை நன்கு அனுபவித்து இறப்போம் எனக் கொள்கை கொண்டவர்கள். இவர்களில் 9 வகை உண்டு.

### உடல் எண் 6 உயிர் எண் 1

6,15,24 போன்ற தேதியில் பிறந்து பிறந்த தேதி, மாதம், வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய சுக்கிரன், சூரியன் ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

இவர்கள் பார்ப்பதற்குக் கவர்ச்சியாகவும் காட்சியளிப்பர். இவர்கள் பேசுகின்ற போது மற்றவர்கள் கேட்கும் அளவிற்கு கவர்ச்சியாக இருக்கும். இந்த

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

உலகத்தில் பிறந்த நாம் எல்லா சுகபோகங்களையும் அனுபவிக்க வேண்டும் என்று எண்ணுவர். இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் வசதியுள்ளவராக இருக்கின்றனர்.

மிடுக்கான தோற்றம் கொண்ட இவர்கள், தான் பேசுகின்ற போது சுத்தமாகவும், அழகாகவும் பேசுவர். இவர்களது பெயர் பிறந்த தேதிக்குப் பொருத்தமானதாக அமையுமேயானால் உலகில் பெற வேண்டிய பாக்கியங்களையெல்லாம் பெற்று வீடு, வாகனம்,நிலம் போன்ற எல்லா வசதிகளுடன் வாழ்வர். ஆனால் பெயர் பொருத்தமற்ற நிலையில் இருக்குமேயானால் இவர்களுக்கு எல்லாவிதமான வாய்ப்புகள் இருந்தும் கஷ்டத்துக் குள்ளாகின்றனர்.

வாகனப்பிரியரான இவர்கள் தான் பயன்படுத்தும் வாகனங்களை அழகுபடுத்தி வைத்துக் கொள்வர். இயற்கைக் காட்சிகளையும், மலைப் பிரதேசங்களையும் நீர் வீழ்ச்சிகளையும் கண்டுகளிக்க ஆசைப்படுவர். சிலர் தூரப்தேசப் பயணங்கள் செய்வதில் ஆர்வம் உள்ளவராக இருப்பர்.

எப்போதும் தூய்மையாக காட்சியளிக்கும் இவர்கள் எந்த ஒரு பிரச்சினை வந்தாலும் அலட்டிக் கொள்ளாது செயற்படுவர். இவர்கள் பேசுகின்ற மொழி சுத்தமாகவும், சுருக்கமாகவும் இருக்கும். அதிகம் சிரமப்படாமல் பணம் ஈட்டும் பாக்கியம் உள்ளவர்கள். இவர்களில் சிலர் உயர்ந்த உத்தியோகத்திலும் இன்னும் சிலர் சிறிய உத்தியோகத்திலும் இருக்

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

கின்றனர்.உத்தியோகம் பார்க்கும் இவர்கள் கூட்டுக் சம்பந்தமான தொழில் செய்யவும் முற்படுவர். ஆடம்பரப் பிரியரான இவர்களுக்குப் பகட்டு சம்பந்தமான தொழில் செய்யும் வாய்ப்பு கிடைக்கும். எந்த ஆடையை அணிந்தாலும் கவர்ச்சியாகத் தோற்றமளிக்கும் இவர்கள் பெண்களாக இருந்தால் ஆண்களிடம் பழகும் போது கவன மாகவும், ஆண்களாக இருந்தால் பெண்களிடமும் நிதான மாகவும் இருக்க வேண்டும்.

ஆனால், ஆரம்பத்தில் பிறந்த தேதி எண்களுக்குப் பொருத்தமான பெயர் அமையுமேயானால் இவர்களது வாழ்க்கை படிப்படியாக உயர்ந்து கொண்டே போகும். இவர்களுக்கு எதிர்ப்பு எண்ணான 3 எண்ணிக்கையில் பெயர் அமையுமேயானால் எல்லாவிதமான பலன்களும் தலைகீழாக மாறிவிடும். இவர்களுக்குப் பெயர் நன்றாக அமைந்துவிட்டால் வெளி நாட்டுப் பயணங்களும், உல்லாசப் பயணங்களும் செய்யும் வாய்ப்பும் உண்டாகும்.

எல்லோரிடமும் பழக்கம் வைத்துக் கொள்ளாத இவர்கள் குறிப்பிட்ட நல்ல நண்பர்களை வைத்திருப்பார்கள். தனக்கு இலாபமில்லாத காரியங்களில் இறங்கி வீண் பொழுது போக்கமாட்டார்கள். எக்காரியத்தில் இறங்கினாலும் அதில் அவர்களுக்கு வருமானம் வரக்கூடியதாகவே இருக்கும். சில நேரங்களில் மிடுக்காகப் பேசி கடுமையானவராக நடந்து கொள்ளுவர். ஆனால் இவர்கள் கடுமையானவரல்லர். சில நேரங்களில் தன்னைப்பற்றி தனிமையில் சிந்திப்பர். வயது கூடினாலும் கவர்ச்சி குறையாது. மகிழ்ச்சியாகவும், உல்லாசமாகவும் வாழ ஆசைப் படுவார்கள். கண்ணாடியைப் அணியும் போது கூட அழகான பிரேம் தான் அணிவர். வீட்டை அலங்கரிப்பதிலும், தூய்மையாக வைத்துக் கொள்ளவும் ஆர்வம் கொண்டவர்கள்.

சட்டம், சமயம், கணிதம், ஜோதிடம், கைநுணுக்கத் தொழில் போன்றவற்றில் ஆராய்ச்சி இருக்கும். கடவுள் நம்பிக்கை கொண்ட இவர்கள் முயன்றால் முடியாதது இல்லை என்று கூறுவர். உயர்ந்த நிலையில் வாழ்பவர்கள்கூட பெயர் பொருத்தமற்று அமைந்து விட்டால் தன் தகுதிக்குக் குறைவான, பெண்களிடம் பழகி கஷ்டத்திற்குள்ளானதை காணமுடிகிறது. ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையப் பெற்றவர்கள் எல்லா வளமும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்கின்றனர்.

**தொழில்**

ஆடம்பரப் பொருள் சம்பந்தமான தொழில், கான்ட்ராக்ட், ஏஜென்சீஸ், இரும்பு, நெருப்பு சம்பந்தமான தொழில், வாகனத்தால் ஆன தொழில் இவர்களுக்கு நன்மை அளிப்பவையே.

**நோய்**

பொதுவாக இந்த எண்ணிக்கை காரர்களுக்கு உஷ்ணம் சம்பந்தப்பட்ட நோய்கள், நீர்சம்பந்தப்பட்ட நோய்கள் வாயுக் கோளாறு, பைல்ஸ், ரத்த அழுத்தம் போன்றவைகள் வந்து நீங்கும்.

**பெயர் அமைக்கும் முறை**

இந்த ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்கு சுக்கிர, சூரியன் ஆதிக்கமான 15,24,33,42,60, 69,19,37,46,64 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொண்டு சிறப்பாக வாழலாம்.

• **பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்- 6,1

யோகமான தேதிகள்- 1,10,19, 28,6,15,24,9,18,27

யோகமான மோதிரக்கல்- மரகதம்

யோகமான நிறம்- மஞ்சல், பச்சை


ஆகாத தேதிகள்- 3,12,21,30


ஆகாத நிறம்-ஆரஞ்சு, ரோஸ், கத்தரிப்பூ கலர், கறுப்பு

### பெயர் எண்களின் பலன்

**38 எண் பலன்**

இந்த எண் வருகின்ற மாதிரி பெயரை அமைத்துக் கொண்டால் மக்களிடத்து மதிப்புள்ள மனிதராகவும் சாத்வீகத் தன்மையும் ஆத்மீக வளர்ச்சியும் கொண்ட மனிதராகவும் வாழ்வர். பெரும் செல்வந்தர்களது நட்பு உண்டா





கும். இவர்கள் மீது பொறாமை கொண்டு சிலர் இடையூறுகளைச் செய்வர். நன்றாக இருக்கும் வேளையில் ஒரு நாள் எதிர்பாராத சோகம் குடி கொள்ளும். ஆனால், 9,18,27 தேதியில் பிறந்தவர்கள் இந்த எண் வருகின்ற மாதிரி பெயரை வைத்திருந்தால் திடீரென்று விபத்து உண்டாகும்.

(தொடரும்)

# தனக்கென்று வாழாத அரசியல் ஞானி கோப்பாய் கோமான் வன்னியசிங்கம்

**அமரர் கு.வன்னியசிங்கம் பிறந்து நூறு வருடங்கள் கடந்துவிட்டன. இவரது மரணத்தின்பின் அரசியல் பணி குறித்து தமிழரசுக்கட்சியின் தந்தை சா.ஜே.வி.செல்வநாயகம் பாராளுமன்றத்தில் ஆற்றிய அஞ்சலி உரை**

சபாநாயகர் அவர்களே! எமது கட்சியின் மிகவும் துயர் நிறைந்த இந்தச் சந்தர்ப்பத்திலே எனது அன்பு நண்பரும் சகபாடியுமான வன்னியசிங்கத்தின் நினைவுக்கு எனது பாராட்டுரையைச் செலுத்தும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. மரணம் எங்களைத் துன்பத்தில் மூழ்கச் செய்து விட்டது. எமது கட்சிக்கும் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கும் இது பேரிடர் என்ற பிரதம அமைச்சரின் கருத்தை நானும் ஏற்றுக்கொள்கின்றேன். கட்சிக்கும், தமிழ் மக்களுக்கும் நாட்டுக்கும் அவரது மரணம் இழப்பாக அமைந்ததுடன் தனிப்பட்ட முறையில் அவரது மரணம், பல ஆண்டுகளாகக் கூடிக்குலாவிய எனக்கும் பேரிடியாக அமைந்தது.

நாம் இருவரும் காங்கேசன்துறை தேர்தல் தொகுதியிலுள்ள தெல்லிப்பழை என்னும் ஒரே ஊரைப் பிறந்தகமாகக் கொண்டவர்கள். திரு.வன்னியசிங்கத்தின் தந்தை காலஞ்சென்ற திரு.வ.குமாரசாமி அவர்கள் சிறந்த கல்விமான். அவர் ஒரு தமிழறிஞர்.

அவரதுமகன் வன்னியசிங்கம் இயல்பாகவே கூர்மதி படைத்தவர்; அறிவுத்திறம் வாய்ந்தவர். அவர் தமது [illegible]ந்தையின் கல்வியினால் பெறக்கூடிய வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறவில்லை. திரு.வன்னியசிங்கம் தமிழைச் சிறப்பாக சங்கத் தமிழ் இலக்கியங்களைக் கசடறக் கற்றவர். அவர் அறிவுத்துறை பற்றிப் பேசுகின்ற போதும் அரசியல் துறைபற்றி உரையாற்றும் போதும் தங்கு தடையின்றித் தமிழ் இலக்கியத்தினின்று பற்பல எடுத்துக் காட்டுக்களை எடுத்துக் காட்டுவார்.

வன்னியசிங்கம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் தொடக்கக் கல்வி கற்றவர். பின் அவர் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி (அப்போது வழங்கப்பட்ட பெயரிது) யில் புகுந்தார். அவர் அங்கு லண்டன் பல்கலைக்கழக, கலைமாணியாகத் தேர்ச்சி பெற்றார்.

அதன்பின்னர் அவர் இலங்கைச் சட்டக் [illegible]ல்லூரியில் சேர்ந்து அப்புக்காத்தாகச் சித்தியடைந்தார். அவருடன் எனது நீதிமண்டபங்களில் ஆற்றக்கூடிய பேற்றை நான் பெற்றேன். அன்றிலிருந்து நானும் அவரும் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொண்டோம்.

1946ஆம் ஆண்டிற்குப் பின் அரசியல் துறையில் நானும் அவரும் கைகோர்த்தபின் எமது நட்பு மிகவும் நெருக்கமுடையதாயிற்று. தந்தையைப்போல் தனயன் வன்னியசிங்கமும் பொருள் வழக்குச் சட்டங்களிலேயே தனித்திறமைபெற்றார். சட்டத்திலே அக் குறிப்பிட்ட நிலையில் அவரது தகைமை பாராட்டக் கூறக்கூடியதொன்று. அங்குள்ள நீதிமன்றங்களில் குறிப்பிடத்தக்க அளவு பணியாற்றினார்.

1946ஆம் ஆண்டிறுதியில் 1947 ஆம் ஆண்டில் நடைபெறவிருந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்காகக் காங்கேசன்துறைத் தேர்தல் தொகுதியில் வன்னியசிங்கம் நானும் வேலைசெய்யத் தொடங்கினோம்.



இன்று இவரது நினைவு தினம்

தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்த வேளையில் கோப்பாய் ஆசனத்திற்காகத் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர் திரு.தம்பியப்பா மாரடைப்பால் திடீரெனக் காலமானார்.

இம் மரணத்தால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்குப் பதிலாள் ஒருவர் தேவைப்பட்டார். அந்தத் தொகுதியில் போட்டியிடத் தகுந்தவர் வன்னியசிங்கம் அவர்களே எனத் தமிழ் காங்கிரஸ் கருதியது. அக்கருத்துச் சரியானதே.

மிகக் குறுகிய காலத்தில் வாக்குரிமை ஆதரவு தேடி, மிகப் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றியுமீட்டினார். அன்றிலிருந்து அவர் இறக்கும்வரை 1947ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் 1952ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல், 1956 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் ஆகியவற்றில் வெற்றிவாகை சூடி, கோப்பாய் தோகுதி உறுப்பினராக விளங்கினார்.

1948ஆம் ஆண்டிலே அப்போது சபையில் இருந்த தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர்களிடையே கொள்கையில் பெரும் வேறுபாடு எழுந்தது. நானும் வன்னியசிங்கமும் அப்போதைய திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்க் காங்கிரசிலிருந்து விலகினோம். 1949ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழரசுக் கட்சியை வன்னியசிங்கமும் மற்றவர்களும் நானும் இணைந்து நிறுவினோம்.

வன்னியசிங்கம் கட்சியை நிறுவியவர் மட்டுமல்ல தொடர்ந்து மூன்றாண்டுகள் அதன் தலைவராகவும் திகழ்ந்தார். கட்சியின் உறுப்பினர் என்ற முறையில் திரு.வன்னியசிங்கம் ஒருபோதும் கட்சித் கொள்கையில் நின்று பிறழ்ந்ததில்லை. ஆனால் மறுபுறத்தில் வன்னியசிங்கம் அவர்களின் அரசியல் தாரக மந்திரமாகக் கட்சி கொள்கைமாறிற்று.

சிறந்த நினைவாற்றலைக் கொடையாகப் பெற்ற வன்னியசிங்கம், அவரை எதிர்நோக்கும் எந்தப் பிரச்சினை பற்றிய உண்மைகளையும் நன்கறிந்திருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் அவர் இந்தப் பாராளுமன்றக்காலம் முழுவதும் எமது கட்சியின் முக்கிய பேச்சாளராகவும் செயலாற்றுத்திறத்துடன் பேசினார். பொருட்கள் வழக்குகளின் வழக்கறிஞராகவும், பாராளுமன்ற நடைமுறையிலும் பிற விடயங்களிலும் எமது கட்சியின் முக்கிய ஆலோசகராவும் அவர் விளங்கினார்.

அவர் தமது உடல் நலனைப்பற்றி அக்கறைகொள்ளாமல் அரசியல் பணியும் பிறபணியும் புரிந்தார். அவர் பெருந்தொகையான், பணியாற்றக்கூடிய ஆற்றல் மிகுந்தவர்.

இவ்வாண்டு அன்று இயங்கிய தேர்தல் தொகுதிகளை வரையறுக்கும் ஆணைக் குழுவிற்கு எமது கட்சி விஞ்ஞாபனத்தை அவரே உருவாக்கினார்.

அத்தருணத்தில் வன்னியசிங்கம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல்வேறு பாகங்களையும் பாதிக்கக்கூடியவை பற்றிய உண்மைகளும் புள்ளி விபரங்களும் தமக்கு நன்கு தெரியும் என்பதை தெளிவாக எடுத்துக் காட்டினார்.

எமது மத்தியில் பெரு மனிதனாக ஆக்கிய சில தனிப் பண்புகளைப் பற்றி நான் குறிப்பிடாதிருக்க முடியாது. முதலாவதாக, வாழ்வின் எந்நிலைக்கும் தாம் உயரவேண்டும் என்ற தனிப்பட்ட ஆர்வமோ, இலட்சியமோ அவரிடமிருக்கவில்லை. எம் மக்களுக்குப் பணிபுரிந்தாரோ அம்மக்களின் நலத்திற்காக உழைக்க வேண்டும். அவர்களுடைய நோக்கம் நிறைவு பெறவேண்டும் என்பனவே அவர் கொண்டிருந்த குறிக்கோள்களும் இலட்சியங்களுமாகும். கட்சியிலோ, வெளியிலோ எவ்வித பதவி யாவது வகிக்க வேண்டும் எனவும் அவர் ஆசைப்பட்டதில்லை.

அவர் அஞ்சாநெஞ்சினர். 1956ஆம் ஆண்டில் காலி முகத்திடலில் சத்தியாக்கிரகம் நடாத்தியபோது முன் வரிசையில் அவரும் அமர்ந்திருந்தார். அவ்வேளை பலராலும் அவர் தாக்கப்பட்டார். அவரைத் தாக்கியவர்கள் அவரது ஆபாரத்தையும் பனியனையும் கிழித்தனர்.

1958ஆம் ஆண்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்ட எமது உறுப்பினர்களில் அவரும் ஒருவர். அவர் வீட்டுக்காவலில் இருந்த போது உயர் இரத்த அழுத்தத்திற்கு உட்பட்டு மருத்துவமனையில் சிகிச்சையும் பெற்றார். அதே இரத்த அழுத்தம் தான் அவரது அகால மரணத்திற்கும் காலாயிற்று. அவர் வீட்டுக் காவலிலிருந்து விடுபட்டு இரு கிழமையில் முடிவுறு முன்னரே, வட, கிழக்கு மாகாணங்களில் அவரது கட்சி நடாத்திய ஸ்ரீ எதிர்ப்பியக்கத்தில் கலந்து கொண்டதற்காக இரு கிழமைகள் சிறை சென்றார்.

வன்னியசிங்கம் மேடையேறித் தமிழ் மக்கள் முன்னிலையில் உரையாற்றும் சிறப்போ, தனிச்சிறப்பு. அக் கூட்டங்களுக்கு வருகை தரும் பொதுமக்கள் கேட்கும் கேள்விகளுக்குத் தகுந்த முறையில் விடையிறுக்கும் அருங்கலையை அவர் வளர்ச்சியுறச் செய்திருந்தார்.

ஆழ்ந்து அகன்ற தமிழ் அறிவின் துணையாலும், தமிழ் இலக்கியங்களிலிருந்து நல்ல எடுத்துக்காட்டுக்களை எடுத்துக்காட்டுவதன் வாயிலாகவும் தாம் அளிக்கும் விடைகளால், எதிர்ப்பாளர்களால் தூண்டப்பட்டு வினாக்களால் திகைக்கவைப்பவர்களை மடக்குவார்.

வன்னியசிங்கத்தின் அருஞ்செயல்கள் அரசியல்துறைக்குமட்டுமே உரிமையல்ல. எமது சமூகத்தில் நிலவும் சமூகக் கொடுமைகளில் ஒன்றான தீண்டாமையை அகற்றுவதை ஆதரித்து மிகவும் வலிமைவாய்ந்த நற்கருத்துக்களைக் கொண்டிருந்தார்.

அவர் இறுதிவரை தமது இலட்சியங்களிலும் நண்பர்களிடமும் நேர்மையுடடையவராகவும் நடந்துகொண்டார். நான் முன்னர் குறிப்பிட்டதைப்போல் வன்னியசிங்கம் அவர்களின் திடீர் மரணத்தால் ஏற்படுத்தப்பட்ட இடைவெளியை நிரப்ப எமது கட்சி மிகவும் அல்லற்படும்.

இறுதியாக ஆனால் நான் இதுவரை குறிப்பிட்ட பண்புகளில் எவ்விதத்திலும் குறைவுபடாத பண்புபற்றிக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். அதுதான் அவர் தமது வீட்டில் வசித்த பாங்கு. அவர் அன்பு நிறைந்த கடமையுணர்ச்சியுடைய கணவராகவும் தந்தையாகவும் திகழ்ந்தார். இச் சூழ்நிலையில் நாம் செய்யக் கூடிய ஆகக் சிறிய செயல் கௌரவ பிரதம அமைச் சர் கேட்டவண்ணம், கௌரவ எதிர்க் கட்சித் தலைவர் ஆதரித்த வண்ணம் அனுதாபச் செய்தி அனுப்புவதே அவ்வேண்டுகோளுக்கு எனது கட்சியின் சார்பில் நானும் உடன்படுகிறேன்.

தொகுப்பு:- **பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்**
**சிரேஷ்ட துணைத்தலைவர்,**
**இலங்கைத் தமிழரசுக் கட்சி.**

## கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் தரமுயர்த்தப்பட வேண்டும்

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வான்பரப்பின் ஊடாக நீண்ட தூரம் பறக்கும் விமானங்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரித்து செல்வதற்கு ஏற்ற வகையில் தரமுயர்த்த வேண்டும் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கையை ஆசியாவின் விமான கேந்திர நிலையமாக மாற்றும் செயற்றிடத்தின் கீழ் அந்த இலக்கை எட்ட வேண்டும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

2012ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் இலங்கையின் போக்குவரத்து துறையின் அபிவிருத்தி தொடர்பாக அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற கலந்துரையடாலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் புகையிரத சேவைகள் அரச மற்றும் தனியார்துறை பேருந்து சேவைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. பாடசாலை மாணவர்கள் மற்றும் பெண்களுக்கான பேருந்து சேவைகள் அதிகரிப்பது கிராமிய மக்களுக்கான பேருந்து சேவைகள் விஸ்தரிப்பு தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

வடக்கு மற்றும் தெற்கு புகையிரத மார்க்கங்களின் நிர்மாணம் மற்றும் புனரமைப்பு புகையிரதச் சேவைகள் அதிகரித்தல் உள்ளிட்ட பல விடயங்களும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது . (4-2)

## ஒரு கிலோமீற்றர் அதிவேகப் பாதையின் நிர்மாணத்திற்கு 6 கோடி ரூபா செலவு

(கொழும்பு)

இலங்கையின் தென்பகுதி அதிவேகப் பாதைக்கான கிலோமீற்றர் ஒன்றின் நிர்மாணத்துக்கு ஆறுகோடி செலவிடப்பட்டுள்ளது.

கடந்த 1995ஆம் ஆண்டு தொடக்கம் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த இந்த அதிவேகப் பாதையானது கொட்டாவையிலிருந்து மாத்தறை வரை 126 கிலோ மீற்றர்கள் தூரம் கொண்டது.

தற்போதைக்கு கொட்டாவை தொடக்கம் காலி வரையான 100 கிலோ மீற்றர்கள் வரையான பாதை நிர்மாணப் பணி நிறைவுற்றுள்ளது.

அதன்போது அதிவேகப் பாதையின் ஒரு கிலோ மீற்றர் நிர்மாணத்துக்கென ஆறு கோடி ரூபா வரை செலவிடப்பட்டுள்ளதாக நெடுஞ் சாலைகள் அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது.

பாதையின் மேலாக நிர்மாணிக்கப்பட்டுள்ள விளக்குக் கம்பங்கள், பாதுகாப்புத் தூண்கள் போன்ற ஏனைய நிர்மாணப் பணிகளையும் சேர்த்துக் கவனத்தில் எடுத்தால் கிலோ மீற்றரொன்றுக்கு சுமார் பத்துக்கோடி ரூபா வரை செலவிடப்பட்டுள்ளது.

பொதுமக்களின் வரிப்பணத்தில் இவ்வாறான கொள்ளையடிப்புகளை மேற்கொண்டு வரும் அரசாங்கம் இலஞ்சம் மற்றும் ஊழலை நாட்டில் தலைவிரித்தாட வழிசெய்துள்ளதாக எதிர்க்கட்சிகள் இவ்விடயம் குறித்து கருத்துத் தெரிவிக்கும்போது கண்டனம் தெரிவித்துள்ளன.

(4-2)

# சமூக நல்லிணக்கத்தை பலப்படுத்த நரேந்திரமோடி உண்ணாநோன்பு



(புதுடில்லி)

குஜராத் கலவர வழக்கை உச்ச நீதி மன்றம் கண்காணிக்க வேண்டும். நரேந்திர மோடி மீது குற்றச்சாட்டு பதிவு செய்ய வேண்டும் என்று உச்ச நீதி மன்றில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை நீதிமன்றம் கண்காணிக்க முடியாது என்றும் நரேந்திர மோடி மீது குற்றச்சாட்டு பதிவு செய்வது குறித்து கீழ் நீதிமன்றை அணுகுமாறு கூறிவிட்டது. இதன்மூலம் நரேந்திர மோடி குற்றச்சாட்டில் இருந்து விடு பட்டுள்ளதாக நிம்மதி அடைந்துள்ளார்.

இதைத்தொடர்ந்து குஜராத்தில் சமூக நல்லிணக்கத்தை பலப்படுத்தும் வகையில் 3 நாட்கள் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக நரேந்திர மோடி அறிவித்துள்ளார். காந்திகர் குஜராத் பல்கலைக்கழக மைதானத்தில் இன்று காலை உண்ணாவிரதத்தை தொடங்குகிறார். இதில் 15 ஆயிரம் தொண்டர்கள் கலந்து கொள்கிறார்கள்.

3 நாட்கள் நடைபெறும் இந்த உண்ணாவிரதத்தில் மோடியுடன் பாரதீய ஜனதா கட்சி பொதுச்செயலாளர் விஜய்கோயல் பங்கேற்க போவதாக அறிவித்து இருந்தார். இந்த நிலையில் மூத்த தலைவர்களான எல்.கே. அத்வானி, சுஷ்மாசுவராஜ், அருண்ஜெட்லி, ராஜ்நாத்சிங், அனந்தகுமார், ரவிசங்கர் பிரசாத், ராஜீவ் பிரதாப் ரூடி, ஷாநவாஸ் உசைன் ஆகியோரும் பங்கேற்பார்கள் என்று தகவல் வெளியாகியது.

அத்துடன் சில மூத்த தலைவர்களும் கலந்து கொள்வார்கள் என்று பாரதீய ஜனதா வட்டாரங்கள் தெரிவித்தன. நரேந்திர மோடி உண்ணாவிரதத்தை காங்கிரஸ் கிண்டல் செய்துள்ளது. மோடியின் உண்ணாவிரதம் அரசியல் நாடகம் என்று மாநில காங்கிரஸ் தலைவர் சங்கர்சிங் வகேலா தெரிவித்துள்ளார்.

உச்சநீதிமன்றம் தீர்ப்பை தனக்கு சாதகமாக திரித்துக் கூறுகிறார்.தன்னை சிறுபான்மையினரின் பாதுகாவலனாக காட்டிக் கொள்ள முயற்சிக்கின்றார் என்றும் அவர் குற்றம் சாட்டினார் .

(4-2)

## பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தலாம்

மும்பை மற்றும் ஆமதாபாத் இடையே இயக்கப்படும் சொகுசு பேருந்துகள் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்பதால் பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

டில்லி உயர்நீதிமன்ற குண்டுவெடிப்பைத் தொடர்ந்து பல இடங்களிலும் குண்டு வெடிக்கலாம் என்பதால் புலனாய்வுத் துறையினர் பொலிஸாரை உஷார்படுத்தியுள்ளனர். மும்பை விமான நிலையத்தின் மீது சிறிய விமான அல்லது ஹெலிகொப்டர் மூலம் தாக்குதல் நடத்த பயங்கரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக வந்த தகவலையடுத்து மகாராஷ்டிரா மற்றும் அதன் அயல் மாநிலங்கள் உஷார் படுத்தப்பட்டன. இதற்கிடையே மும்பை மற்றும் குஜராத்தின் ஆமதாபாத் நகரத்துக்கு இடையே செல்லும் சொகுசு பேருந்துகள் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என புலனாய்வுத் துறைக்கு வந்த தகவலையடுத்து சொகுசு பேருந்துகள் போக்குவரத்தை கண்காணிக்கும்படி பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (4-2)

# காங்கிரஸ் மத்திய தேர்தல்குழு கூட்டத்தில் சோனியா பங்கேற்பு



(புதுடில்லி)

காங்கிரஸ் மத்திய தேர்தல் குழு கூட்டத்தில் அக்கட்சியின் தலைவரான சோனியா காந்தி பங்கேற்றுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இக் கூட்டத்தில் அடுத்த ஆண்டு உத்தரப் பிரதேசத்தில் நடைபெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தலுக்கான 98 வேட்பாளர்களில் 70 பேரின் பெயர்களை அவர் இறுதி செய்துள்ளார்.

அறுவைச்சிகிச்சைக்காக அமெரிக்கா சென்று இந்தியா திரும்பிய பின் சோனியா காந்தி பங்கேற்ற முதல் முக்கிய கட்சி கூட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

மிகுந்த மகிழ்ச்சியுடனும் வழக்கம்போல் இயல்பாகவும் சோனியாகாந்தி பங்கேற்றார் என காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனார்த்தன் திவிவேதி தெரிவித்தார்.

இந்தியாவுக்கு அவர் திரும்பியதுமே கட்சி சம்பந்தப்பட்ட விடயங்களைப் படிக்க ஆரம்பித்து விட்டார் என்றார் அவர்.

உத்தரப் பிரதேச சட்டப்பேரவைத் தேர்தல் தொடர்பாக முடிவுசெய்யப்பட்ட 70 வேட்பாளர்களின் பெயர்கள் ஒரே பட்டியலாக வெளியிடப்படும் என்றும் மற்றவர்களின் பெயர்கள் பரீசிலனைக்கு பின் வெளியிடப் படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய தேர்தல் குழு கூட்டத்தில் அக்கட்சியின் பொதுச்செயலாளரான ராகுல்காந்தி, மூத்த அமைச்சர்களான பிரணாப் முகர்ஜி, ஏ.கே அந்தோனி, சோனியாவின் அரசியல் செயலர் அகமது படேல் ஆகியோரும் பங்கேற்றனர்.

மத்திய தேர்தல்குழு கூட்டத்திற்கு சோனியா தலைமை வகித்தது குறித்து கட்சியின் அனைத்து தொண்டர்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் அம்பிகா சோனி தெரிவித்தார்.

மத்திய தேர்தல் குழு கூட்டத்துக்கு தலைமையேற்பதன் மூலம் அவரது உடல்நலம் தொடர்பான வதந்திகளுக்கு சோனியா முற்றுப் புள்ளி வைத்துவிட்டதாக பெயர் தெரிவிக்க விரும்பாத மூத்த தலைவர் ஒருவர் குறிப்பிட்டார். (4-2)

## பாரதச் செய்திகள்

# ராஜீவ்காந்தியின் பெயரில் சுவிஸ் வங்கியில் கறுப்புப்பணம்

(சென்னை)

ஆந்திரா மாநிலம் குண்டூர் மாவட்டம் கொத்தபேட்டையில் இந்திய கம்யூனிஸ்ட் சார்பில் ஊழலுக்கு எதிரான பேரணி நடந்தது.

இதில் கட்சியின் மாநில தலைவர் நாராயணா கலந்து கொண்டு உரையாற்றுகையில்,

இந்திய தலைவர்கள் பலர் ஊழல் மூலம் கொள்ளையடித்த பலஇலட்சம் கோடி கறுப்பு பணத்தை சுவிஸ் வங்கிகளில் வைப்பில் வைத்துள்ளனர். அதில் ராஜீவ்காந்தி பெயரில் ரூ 1.9 இலட்சம் கோடி கறுப்பு பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது.

இந்த விபரம் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு நன்றாகத் தெரியும். இதை வெளியிட்டால் தனது பதவிக்கு ஆபத்து வந்துவிடும் என்று அவர் கருதுகிறார். சில சுவிஸ் வங்கிகள் தாமாக முன்வந்து கறுப்பு பணத்தை எடுத்துச் செல்லுங்கள் என கூறியது.

ஆனால் அதை வாங்க காங்கிரஸ் அரசு மறுத்து வருகிறது. அப்படியானால் சுவிஸ் வங்கிகளில் உள்ள பெரும்பாலான கறுப்பு பணத்தை காங்கிரஸ் தலைவர்கள் வைப்பிலிட்டு வைத்துள்ளார்களா? அந்த கறுப்பு பணத்தை எடுத்து வந்து ஏராளமான தொழிற்சாலைகள் தொடங்கி படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கலாம். இதன் மூலம் தனிநபர் வருமானம் அதிகரிக்கும் வறுமை முற்றிலும் ஒழிக்கப்படும். கறுப்புப் பணத்தை ஒழிக்க வேண்டுமானால் நாட்டில் ஊழல் ஒழிக்கப்படவேண்டும் என்றார்.

(4-2)

# சிதம்பரத்திற்கு ஏற்பட்ட அவமானத்தை யாராலும் பொறுத்துக் கொள்ள முடியாது

மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்துக்கு நேர்ந்த அவமானத்தை யாராலும் பொறுத்துக் கொள்ள முடியாது என்று தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து கருணாநிதி நிருபர்களிடம் கூறுகையில், மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்திற்கு நேர்ந்த அவமானத்தை யாராலும் பொறுத்துக் கொள்ளவே முடியாது. மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகள் பற்றி திட்டமிடத்தான் அந்த கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மக்கள் பணியாற்ற வேண்டிய செயலாளர்களே இப்படி அந்த கூட்டத்தை புறக்கணித்துள்ளனர் என்பது இங்குள்ள மேலிடத்தின் கட்டாயம் என்பதை உணர்ந்து நான் மிகவும் வருத்தப்படுகிறேன் என்றார். (4-2)

# சட்டவிரோத சுரங்க ஊழல் குறித்து கர்நாடக முன்னாள் மந்திரியின் சகோதரியிடம் சி.பி.ஐ. விசாரணை

(ஐதராபாத்).

கர்நாடக முன்னாள் மந்திரி ஜனார்த்தன் ரெட்டிக்கு சொந்தமான ஓடிலாபுரம் சுரங்க நிறுவனத்துக்கு சுரங்கங்கள் குத்தகைக்கு விடப்பட்டதில் முறைகேடுகள் நடைபெற்று இருப்பதாக புகார்கள் கூறப்பட்டன.

அனுமதிக்கப்பட்ட அளவை விட கூடுதலாக தாதுக்களை வெட்டி எடுத்ததாகவும் இந்த நிறுவனம் மீது குற்றம் சாட்டப்பட்டது.

இந்த சட்டவிரோத சுரங்க ஊழல் பற்றி சி.பி.ஐ விசாரணை நடத்தி ஜனார்த்தன் ரெட்டியை கைது செய்தது. அவரிடம் சி.பி.ஐ காவலில் விசாரணை நடக்கிறது.ஜனார்த்தன் ரெட்டி சகோதரர்கள், நெருங்கிய கூட்டாளிகளிடமும் விசாரணை நடத்த சி.பி.ஐ முடிவு செய்தது.

இதையடுத்து ஜனார்த்தன் ரெட்டியின் சகோதரர்கள் சோமசேகர ரெட்டி, கருணாகர ரெட்டி ஆகியோருக்கு விசாரணைக்கு நேரில் ஆஜர் ஆகுமாறு அழைப்பாணை அனுப்பப் பட்டது. அதன்படி சோமசேகர ரெட்டி ஐதராபாத்தில் உள்ள சி.பி.ஐ அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஆஜரானார். அவரிடம் சி.பி.ஐ அதிகாரிகள் சரமாரி கேள்விகள் கேட்டு விசாரணை நடத்தினர்.

இதேபோல் சுரங்க நிறுவன அதிகாரிகளும் சி.பி.ஐ அலுவலகங்களில் நேற்று ஆஜரானார்கள். அவர்களிடமும் பல்வேறு கேள்விகளை எழுப்பி சி.பி.ஐ அதிகாரிகள் விசாரணை நடத்தினர். தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

(4-2)




திருவள்ளூரில்அண்ணாதுரையின் பிறந்த தினம் நேற்று முன்தினம் இடம் பெற்றது. இந் நிகழ்வில் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா பெண்மணி ஒருவருக்கு உதவிவழங்குவதை படத்தில் காணலாம்.

# பெற்றோலியக் கூட்டுத்தாபன முகாமையாளருக்கு கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பிரதி வர்த்தக முகாமையாளருக்கு நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

தரம் குறைந்த பெற்றோல் விநியோக சம்பவத்தினை அடிப்படையாகக் கொண்டு அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் அறிவித்துள்ளதாக பெற்றோலிய வளத் துறை அமைச்சின் பதில் செயலாளர் சந்தியா விஜேயபண்டார குறிப்பிட்டார்.

இதற்கமைய பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவரினால் நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் கூட்டுத்தாப னத்தின் பிரதி வணிக முகாமையாளருக்கு கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

ஒழுக்காற்று நடவடிக்கையின் கீழ் அவர் கட்டாய விடுமுறையில் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக பதில் செயலாளர் குறிப்பிட்டார்.

(4-2)

# வாய்ப்புற்றுநோய் காரணமாக நாளாந்தம் மூவர் உயிரிழப்பு

(கொழும்பு)

வாய்ப்புற்று நோய் காரணமாக இலங்கையில் தினமும் சுமார் மூவர் உயிரிழப்பதாக தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச் சித்திட்டத் தின் பல்வைத்திய மருத்துவ நிபுணர் ஹேமந்த அமரசிங்க தெரிவித்துள்ளார்.

வாய்ச் சுகாதாரம் தொடர்பான சர்வதேச தினத்தையொட்டி செய்தியாளர் மாநாட்டில் விசேஷ அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சுகாதாரத்துறை பதிலமைச்சர் லலித் திஸாநாயக்க தலைமையில் நடைபெற்ற இச் செய்தியாளர் மாநாட்டில் டாக்டர் அமர சிங்க மேலும் கூறுகையில், வாய்ப்புற்று நோய்க்கு வெற்றிலை மெல்லுதலே மூல காரணமாக உள்ளது.

ஆயினும் இலங்கையில் 35 சதவீதமானோர் வெற்றிலை மெல்லுபவர்களாக உள்ளனர். ஆனால் இந்நாட்டின் கிராமப்புறங்களிலும் பெருந்தோட்டப் பகுதிகளிலும் 53 சதவீதமானோர் வெற்றிலை மெல்லுகின்றவர்களாக இருக்கின்றனர்.

வெற்றிலை மெல்லுதல் பழக்கம் மனித உடலுக்கு உகப்பானதல்ல. இலங்கையில் வாய்ப்புற்று நோய் காரணமாக வருடாந்தம் சுமார் 800 பேர் உயிரிழக்கின்றனர். இது நாளொன்றுக்கு இரண்டு, மூன்று மரணங்களாக இடம் பெறுகின்றது.

இந்நாட்டில் வாய்ப்புற்று நோய்க்கு ஆண்கள்தான் அதிகம் உள்ளாகின்றனர் என்றாலும் மத்திய மாகாணத்தில் பெருந் தோட்டப் பிரதேசங்களில் வாழுகின்ற பெண்களும் குறிப்பிடத்தக்களவில் இந்நோய்க்கு உள்ளாகின்றனர்.

வெற்றிலை மெல்லுதலுக்குப் பயன்படுத் தப்படும் பொருட்களில் புற்று நோய்க்குத் துணை புரியக்கூடிய இரசாயனப் பதார்த்தங்கள் காணப்படுகின்றன. அதனால் வெற்றிலை மெல்லுதல் பழக்கத்தைத் தவிர்த்துக் கொள்ளுவதே உடலாரோக்கியத்திற்கு நன்மை பயக்கும் என்றார்.

(4-2)

# இலங்கை குறித்து விவாதிப்போர் உலகின் ஏனைய நாடுகளையும் விசாரிக்க வேண்டும்

## வாஸ்குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

ஈராக், லிபியா மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இடம்பெற்ற இடம் பெற்று வரும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலும் சர்வதேச ரீதியான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் சஜித் வாஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமெனக் கோரும் தரப்பினர் உலகின் ஏனைய நாடுகளில் இடம் பெற்ற குற்றச் செயல்கள் தொடர்பிலும் விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

சஜின்வாஸ் குணவர்த்தன தற்போது ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் கலந்து கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச கைதிகள் மீது மேற்கொண்ட சித்திரவதைகள், பொதுமக்கள் மீது நடத்திய தாக்குதல்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பிலும் சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென இலங்கை ஆங்கில ஊடகமொன்றுக்கு தகவல் வெளியிட்டுள்ளார்.

(4-2)

# நீதிமன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

நடைபாதையில் வியாபாரம் செய்த குற்றச்சாட்டின் பெயரில் இருவர் யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா குறித்த நபர்கள் குற்றவாளிகளெனக்கண்டு ஒருவருக்கு ஆயிரத்து 500 ரூபா அபராதமும் மற்றவருக்கு ஆயிரம் ரூபா அபராதமும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * *

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற நபரொருவர் விபத்து ஏற்படுத்தியமை, கவனயீனமாக வாகனம் செலுத்தியமை, சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பெயரில் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தைத் ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக்கண்டு மூன்று குற்றத்திற்கும் 4 ஆயிரம் ரூபா அபராதம் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * *

(கிளிநொச்சி)

அனுமதிப்பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பெயரில் நபரொருவர் மதுவரித் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் குறித்தநபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக்கண்டு 6 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * *

(கிளிநொச்சி)

பளைப்பகுதியைச் சேர்ந்த நபரொருவர் அனுமதிப்பத்திரம் இன்றி அரசசாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பெயரில் மதுவரித் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக்கண்டு 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (4-3)

* * * * *

(சாவகச்சேரி)

யாழ். மாவட்ட செயலக பாவனையாளர் அதிகார சபையினரால் தென்மராட்சி பிரதேச வர்த்தக நிலையங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனை 13 வர்த்தகர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு கடந்த மாதம் 24 ஆம் திகதி சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தால் அழைப்புக்கட்டளை அனுப்பப்பட்டது.

இதில் 13 வர்த்தகர்களில் 11 வர்த்தகர்கள் மன்றில் நேற்று ஆஜராகியுள்ளனர். இவ் வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா 11 வர்த்தகர்களும் மன்றில் குற்றத்தை ஒப்புகொண்டமையால் குற்றவாளியாகக்கண்டு தலா 5ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்ததுடன் செலுத்தத் தவறின் தலா 2 மாத சாதாரண சிறைச் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (4-12-29)

# மாலைதீவு ஜனாதிபதி எம்மை தூற்றவில்லை; ஊடகங்களில் வெளியான செய்தி தவறானது

## சுனந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க ஊடகங்களில் வெளியான செய்திகளில் உண்மையில்லை என சுதந்திர ஊடக அமைப்பின் முன்னாள் அமைப்பாளர் சுனந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மாலைதீவு ஜனாதிபதி தம்மை தூற்றியதாக அரசாங்கம் ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தன. எனினும் இதில் எவ்வித உண்மையும் கிடையாது.


அரசசார்பற்ற நிறுவனத்தில் பணியாற்றும் தாம் அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்டு வருவதாக மாலைதீவு ஜனாதிபதி நாசீட் குற்றம் சுமத்தியதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

மாலைதீவு ஜனாதிபதியிடம் தாம் நட்புறவாக பேசியதாகவும் வேறு எந்தவிதமான சம்பவங்களும் இடம்பெறவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்போரை அரசாங்கம் இவ்வாறு இழிவுபடுத்தி வருகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து மாலைதீவு ஜனாதிபதி கடிதம் ஊடாக அறிவிக்கத் திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளது. (4-2)







பூநகரி பிரதேச சபையின் முதலாவது அமர்வு அண்மையில் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் உறுப்பினர்கள் அழைத்துவரப்படுவதையும் பிரதேச சபையின் தவிசாளர் பொ.ஸ்ரீஸ்கந்தராஜா தேசியக் கொடியேற்றுவதையும் பிரதேச சபையின் செயலாளர் திருமதி மேரி மெற்றலின் சிவகுமார் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூநகரி செய்தியாளர்)

## ஏமனில் வன்முறையில் அல்கொய்தாவினர் பலி

(சனா)

ஏமனில் கடந்த 33 ஆண்டுகளாக ஆட்சியில் உள்ள ஜனாதிபதி அலி அப்துல்லா சலே பதவி விலகக் கோரி கிளர்ச்சியாளர்கள் கடந்த பெப்ரவரி மாதம் முதல் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

ஜனாதிபதிக்கு எதிராக நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடக்கும் போராட்டத்தை பயன் படுத்தி அல்கொய்தாவின் பலர் சதி வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் தலைநகர் சனா அருகே அல்கொய்தாவினருக்கும் அரசு படைகளுக்கும் இடையே கடந்த 14 ஆம் திகதி இரவு நடந்த சண்டையில் அல்கொய்தாவைச் சேர்ந்த 12 பேர் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையில் தலைநகர் சனாவில் இரண்டு இடங்களில் நேற்று முன்தினம் நடந்த குண்டு வெடிப்பு சம்பவங்களில் இருவர் கொல்லப்பட்டனர். (4-2)


# பிரிட்டன் நாட்டிலிருந்து ஜப்பானுக்கு அணுக்கழிவு

## பொதுமக்கள் கடும் எதிர்ப்பு

பிரிட்டனில் இருந்து ஜப்பானுக்கு அணுக்கழிவு பொருட்கள் பெருமளவில் கொண்டு வரப்பட்டுள்ளன.

கடுமையான கதிரியக்க அபாயத்தைக் கொண்டுள்ள இந்த அணுக்கழிவு பொருளை கொண்டு வந்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஜப்பானின் புகுஷிமா அணுமின் நிலையத்தில் கடந்த மார்ச் மாதம் அணுக்கசிவு ஏற்பட்டது. அதன் பின் இப்போது முதல் முறையாக அணுக்கழிவுப் பொருட்கள் அங்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இதனால் பெரும் அபாயம் ஏற்படும் வாய்ப்புள்ளதால் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

பிரிட்டனில் இருந்து 76 பிரமாண்டமான சிலிண்டர்களில் அணுக்கழிவு பொருட்கள் கப்பல் மூலம் ஜப்பானின் ரோகாஷோ துறை முகத்திற்கு வந்துள்ளன. 3 ஜப்பானிய மின் நிறுவனங்களுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின்படி கழிவுகளை தங்கள் நாட்டில் இருந்து அப்புறப்படுத்துவதற்காக பிரிட்டன் இதனை அனுப்பியுள்ளது.



இந்த அணுக்கழிவுகளை இறுதியாக எங்கு வைப்பது என்பதை ஜப்பான் இன்னும் முடிவு செய்யவில்லை. இந் நிலையில் அணுக்கழிவுகள் துறைமுகத்துக்கு வந்துள்ளதை அறிந்த உள்ளூர் மக்கள் துறைமுகத்தின் வெளியே கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கதிரியக்கஅபாயம் உள்ள இந்த கழிவுகளை ஜப்பானில் இருந்து உடனடியாக வெளியேற்ற வேண்டு மென அவர்கள் கோஷமிட்டனர்.

அடுத்த சில நாட்களில் போராட்டம் தீவிரமடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்த 10 ஆண்டுகளில் அணுக்கழிவுகள் அடங்கிய 900 சிலிண்டர்களை ஜப்பானுக்கு அனுப்ப பிரிட்டன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

இப்போது இரண்டாவது முறையாக அணுக்கழிவு கொண்டு வரப்பட்டுள்ளது. கடந்த மார்ச் மாதத்தில் முதல்முறையாக கொண்டு வரப்பட்டது.

அப்போது பெரிய அளவில் எதிர்ப்பு ஏதும் ஏற்படவில்லை. (4-2)

## கடாபியைச் சிறைபிடிப்பதற்கு இங்கிலாந்தும் பிரான்சும் உதவி


லிபியாவில் ஜனாதிபதி கடாபியின் 42 ஆண்டுகால சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு வந்துவிட்டது. தற்போது தேசிய மாற்று கவுன்சில் அமைப்பின் இடைக்கால அரசு பதவி வகித்து வருகின்றது. எனவே கடாபியின் குடும்பம் அல்ஜீரியாவுக்கும் நைஜர் நாட்டுக்கும் தப்பி ஓடி விட்டது. ஆனால் கடாபி லிபியாவில் தலைமறைவாகிவிட்டார்.

அவர் எங்கு இருக்கின்றார் என தெரியவில்லை. எனவே அவரை இரகசிய இடங்கள் மற்றும் பதுங்கு குழிகளில் புரட்சி படையினர் தீவிரமாக தேடி வருகின்றனர். இது தொடர்பில் இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் பிரதமர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

கடாபியின் ஆட்சி அதிகாரம் முற்றிலும் ஒழிக்கப்பட்டு மக்கள் நிம்மதியாக வாழும் வரை இங்கு நேட்டோ படைகள் பாதுகாப்பு பணியில் ஈடுபடும்.

மேலும் தலைமறைவாக இருக்கும் கடாபியை சிறைபிடித்து நீதியின் முன்நிறுத்த இங்கிலாந்தும் பிரான்சும் உதவும். மேலும் கடாபியின் இராணுவம் புதைத்து வைத்துள்ள கண்ணி வெடிகள் மற்றும் ஏவுகணைகளை கைப்பற்றி அழிக்கவும் உதவி செய்வோம் என்று தெரிவித்தனர்.

இதற்கிடையே கடாபியின் சொந்தநகரமான சிர்த் மற்றும் பாலைவன் நகரமான வாடிபே ஆகியவற்றை கைப்பற்றும் நடவடிக்கையில் புரட்சிப்படை தீவிரமாக ஈடுபட்டு உள்ளது. (4-2)



கம்போடியா தலைநகர் பொனோம் பெனில் அந்நாட்டு பிரதமர் ஹன் செனை (வலது) தாய்லாந்து பிரதமர் இங்குலத் சினவட்ரா சந்தித்து கைலாகு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## வேலைவாய்ப்பை அதிகரிக்க புதிய சட்டம் இயற்றப்படும்

### ஒபாமா தெரிவிப்பு

அமெரிக்காவில் வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்காக வரிகளில் சீர்திருத்தம் கொண்டு வரும் புதிய சட்டத்தை இயற்றத் திட்டமிட்டுள்ளார். ஜனாதிபதி ஒபாமாவால் இதற்கான வரைவு மசோதா கடந்த திங்கட்கிழமை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க மக்களவையின் முன்பு அவர் தாக்கல் செய்துள்ள இந்த மசோதா சட்டமானால் புதிய வரிகள் மூலம் ரூ.20 இலட்சம் கோடி அரசுக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தனி நபர்களும் எண்ணெய் இயற்கை வாயு உற்பத்தி செய்யும் நிறுவனங்களும் புதிய வரிகளைச் செலுத்துவதற்கு இந்த மசோதா வகை செய்கிறது.




இதுவரை எண்ணெய் இயற்கை எரிவாயு உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் பெற்று வந்த பல வரிச்சலுகைகள் புதிய மசோதா சட்டமாவதன் மூலம் பாதிக்கப்படும். அந்த நிறுவனங்களையும் பிற நிறுவனங்களைப் போலவே வரிகளுக்கு உட்படுத்த உத்தேசிக்கிறது இந்த மசோதா.

இந்த மசோதாவுக்கு குடியரசுக் கட்சி கடுமையாக எதிர்ப்பு தெரிவித்துள்ளது. புதிய வரிகள் எதையும் கொண்டு வருவதை அக்கட்சி ஆட்சேபித்து வருகிறது. இதனால் இம் மசோதா சட்டமாவதில் சிக்கல் எழும் என்று தெரிகிறது.

ஆனால் நாட்டின் முக்கிய தேவையான வேலைவாய்ப்பு விடயத்தில் குடியரசுக் கட்சி எதிர்ப்பு தெரிவிக்கக் கூடாது என்று ஜனாதிபதி ஒபாமா கூறியுள்ளார். (4-2)

## பிஜித்தீவில் நில நடுக்கம்



அவுஸ்திரேலியாவுக்கு கிழக்கே பசுபிக் கடலில் உள்ள பிஜி நாட்டில் நேற்று மிகக் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோளில் இது 7.3 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது.

இதனால் சுனாமி அலைகள் ஏதும் ஏற்படாவிட்டாலும் நிலநடுக்கத்தால் அந்த நாட்டில் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிகின்றது.

இந்திய நேரப்படி நேற்று காலை 7.30 மணியளிவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. தலைநகர் சுவா உட்பட பிஜி தீவின் முக்கிய தீவுகள் அனைத்திலும் நிலநடுக்கம் உணரப்பட்டது.

இதனால் கட்டடங்கள் மிக பயங்கரமாக குலுங்கியதால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி தெருக்களில் ஓட்டம் பிடித்தனர். பிஜியின் டோய் தீவுக்கும் நுகோலபாவுக்கும் இடையே பூமிக்கு அடியில் 626 கி.மீ. ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இவ்வளவு ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதால் சுனாமி அலைகள் ஏற்படவில்லை என்று தெரிகிறது. (4-2)

## தென்சீனக் கடலில் எண்ணெய் எடுக்கும் திட்டத்தை அனைத்து நாடுகளும் நிறுத்தவேண்டும்

(பீஜிங்)

தென் சீனக் கடலில் எண்ணெய் எடுக்கும் திட்டத்தை தவிர்க்க வேண்டும் என இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென் சீனக் கடற்பகுதியும் அதில் உள்ள தீவுக் கூட்டங்களும் சீனாவுக்கு மட்டுமே சொந்தமானவை. இதில் சர்ச்சைக்கே இடமில்லை எனவும் அந்த நாடு கூறியுள்ளது.

வியட்நாமுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி தென் சீனக்கடலில் இரு இடங்களில் எண்ணெய் எடுப்பதற்கு இந்திய நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளன.

இது தொடர்பாக சீன வெளியுறவுத் துறையின் செய்தித் தொடர்பாளர் ஜியாங்யூ விடம் செய்தியாளர்கள் வியாழக்கிழமை பல்வேறு கேள்விகளை எழுப்பினர்.

அவற்றுக்கு அவர் பதிலளிக்கையில்,

தென் சீனக்கடலில் இந்திய நிறுவனங்கள் எண்ணெய் எடுப்பதற்கு திட்டமிட்டிருப்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் வரலாற்று உண்மைகளின் அடிப்படையில் அந்தக் கடலும் அதில் உள்ள தீவுகளும் சீனாவுக்கே சொந்தமானவை. அங்கு எண்ணெய் எடுக்கும் முயற்சியில் ஈடுபடுவதை அனைத்து நாடுகளும் தவிர்க்க வேண்டும் என்றார். இந்தியாவை அவர் நேரடியாகக் குறிப்பிடவில்லை என்றாலும் எண்ணெய் எடுப்பது தொடர்பான அவரது எச்சரிக்கை மறைமுகமாக இந்தியாவுக்கு விடுவிக்கப்பட்டதாகவே கருதப்படுகின்றது.

தென் சீனக் கடலில் எண்ணெய் எடுப்பது தொடர்பாக சீனா தெரிவித்த கருத்துக்கு இந்தியா பதிலடி கொடுத்துள்ளது.

சர்வதேசச் சட்டங்களுக்கு உட்பட்டு வியட்நாமுடன் செய்து கொண்ட ஒப்பந்தப் படியே இந்தத் திட்டங்கள் செயற்படுத்தப்படுவதாக இந்திய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் விஷ்ணு பிரகாஷ் தெரிவித்துள்ளார். (4-2)

அறிவாளி என்பவன் யார் தெரியுமா? தேவைப் படும் போது தன் முடிபை மாற்றிக் கொள்ளத் தெரிந்தவன்தான். - டாக்டர் ஜான்சன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## துணையின்றி பேச்சு நடத்துவது தீர்வுக்கான வழியன்று உணர்க

சர்வதேசத்தின் அழுத்தம் அதிகரிக்கும்போது இலங்கை அரசுக்குப் பேச்சுவார்த்தை பற்றிய நினைப்பு ஞாபகத்துக்கு வரும்.

அழுத்தம் இல்லையாயின் இனப்பிரச்சினைக் குத் தீர்வா? அது ஏன்? இப்படியான குதர்க்கக் கேள்விகள் மேலெழும்பும்.

இது அரசின் நிலைப்பாடாக இருக்க தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு தீர்வு பற்றிய அக்கறைகள் எதுவும் இல்லாமல் பேச்சுவார்த்தை என்று அரசு அழைத்தவுடன் விழுந்துகட்டிக்கொண்டு செல்லும்.

அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவது ஒன்றே கட்சியைக் காப்பாற்றுவதற்கான ஒரேவழி என்பது அவர்களின் நிலைப்பாடு.

இனப்பிரச்சினை தொடர்பில் அரசுடன் பேச்சு வார்த்தை நடத்துவதன் ஊடாக எட்டப்படும் தீர்வு என்ன? அது சாத்தியமாகுமா? இப்படியான சிந்தனைகள் எதுவும் இல்லை என்பது தெரிந்த விடயம்.

இதைவிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் அனைவருக்கும் பேச்சுவார்த்தைகள் பற்றிய விடயங்கள், விபரங்கள் தெரியாது என்பது அடுத்த அதிர்ச்சித் தகவல்.

என்ன செய்வது? எங்கள் தலையெழுத்து இப்படியாகி விட்டது என்ற நினைப்போடு இருந்து விடலாம் என்றால், மர்ம மனித விவகாரம், மீள்குடியேற்றப்படாமல் தறப்பாளின் கீழ் வாழ்வு நடத்தும் எங்கள் உறவுகள், விடுதலை பெற முடியாமல் சிறைகளில் வாழ்வைத் தொலைத்து விட்ட எங்கள் இளைஞர்கள், இப்படியான துயரங்கள் நெஞ்சை அடைக்கின்றன.

வன்னிப் போரில் இழந்தவற்றில் எதனையுமே ஈடுசெய்ய முடியாத நிலையில், தனித்துத் தேர்தலை மட்டும் மையமாகக் கொண்டு சீவியம் நடத்தும் தமிழ் அரசியல் தலைமைகளின் சுயநலப் போக்குகள் தமிழர்களின் துயருக்கு முடிபு கட்டாது என்பதை உறுதிசெய்கின்றது.

அரசு-தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை என்பது தமிழர் விடயத்தில் இருதரப்பும் ஏதோ செய்துகொண்டிருக்கின்றன என்ற காட்டாப்புக்கான வித்தையே தவிர, அதனால் வேறு எதுவும் நடக்கப் போவதில்லை.

இவ்வாறு நாம் கூறுகின்ற கருத்துத் தொடர்பில் பேச்சுவார்த்தை இல்லாமல் எப்படி இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என்ற கேள்வி உங்கள் மத்தியில் ஏற்படலாம். அந்தக் கேள்வி புறந்தள்ளக் கூடியதில்லை.

எம்மைப் பொறுத்தவரை தனித்து அரசும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் பேச்சுவார்த்தை நடத்தி எந்தத் தீர்வுக்கும் இணங்கிக்கொள்ள முடியாது. அது ஒருபோதும் சாத்தியமான விடயமும் இல்லை.

மாறாக அரசும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் நடத்துகின்ற பேச்சுவார்த்தை என்பது வல்லமை பொருந்திய சர்வதேச நாடொன்றின் மத்தியஸ்தத்தின் கீழ் இடம்பெறவேண்டும்.

சர்வதேச நாடொன்றின் மத்தியஸ்தத்தை அரசு விரும்பாதாயினும் எங்களின் பலம் சர்வதேச நாடொன்றின் மத்தியஸ்தத்திலேயே தங்கியுள்ளது.

எனவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு துணையின்றி பேச்சுவார்த்தைக்குச் செல்வது அர்த்தமற்றதாகும்.

# வெலிஓயா பிரதேச செயலர் பிரிவு முல்லைத்தீவில் உருவாக்கப்பட்டது

## சிங்கள குடியேற்றத்துக்கென குற்றச்சாட்டு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதிதாக வெலிஓயா பிரதேச செயலர் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளதாக அரசுக்கு நெருக்கமான இணைய ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த மாதத்தில் இருந்து செயற்படும் வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 8 கிராம நிர்வாகப்பிரிவுகள் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் அந்த இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

முன்னதாக 1987ஆம் ஆண்டில் இந்த நிர்வாகப் பிரிவு அநுராதபுர மாவட்டத்தின் பதவியா பிரதேச செயலர் பிரிவின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டது.

தற்போது பதவியா பிரதேச செயலர் பிரிவிலிருந்து பிரிக்கப்பட்ட 8 கிராம நிர்வாக பிரிவுகளையும் கொண்ட வெலிஓயா பிரதேச செயலர் பிரிவு முல்லைத் தீவு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

1988ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் திகதி வெளியிடப்பட்ட சிறப்பு வர்த்தமானி அறிவித்தலின் மூலம் முல்லைத் தீவு மாவட்டத்தின் மணலாறு மற்றும் வவுனியா மாவட்டத்தின் சில பகுதிகளை உள்ளடக்கிய பகுதி வெலிஓயா என்று சிங்களத்தில் பெயர் மாற்றம் செய்யப் பட்டது.

அதே வர்த்தமானி அறிவுறுத்தல் மூலம் இலங்கையின் 26ஆவது மாவட்டமாக வெலிஓயா பிரகடனம் செய்யப்பட்டது.

நிர்வாகக் காரணங்களுக்காக வெலிஓயா அநுராதபுர மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்தது எனினும் தேர்தல் செயற்பாடுகள் யாவும் வவுனியா மாவட்டத்தின் மூலமே மேற்கொள்ளப்பட்டுவந்தன.

இந் நிலையிலேயே பதவியா பிரதேச செயலகத்துடன் இணைக்கப்பட்டிருந்த வெலிஓயா உதவிப்பிரதேச செயலர் பிரிவை அந்தப்பகுதி மக்களின் வேண்டுகோளின்படி மீளவும் முல்லைத் தீவு மாவட்டத்துடன் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சின் செயலர் தி.பி.அபயக்கோன் தகவல் வெளியிட்டுள்ளார்.

1987ஆம் ஆண்டுக்கு முன்னர் வெலிஓயா பிரதேசம் முல்லைத்தீவு மாவட்டத்துடனேயே இணைந்திருந்தது என்றும் போரினாலும் தீவிரவாத செயற்பாடுகளாலுமே அது அநுராதபுரத்துடன் இணைக்கப்பட்டதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ச-5)

## 70 வயதுக்கு மேற்பட்ட கைதிகளுக்கு விடுதலை

(கொழும்பு)

சிறைத்தண்டனை அனுபவித்து வரும் 70 வயதைத் தாண்டியவர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய உத்தரவிட்டுள்ளார்.

மரண தண்டனை பெற்றோர் மற்றும் பாரிய குற்றச் செயல்களில் ஈடுபட்டுச் சிறைவாசம் அனுபவிப்போர் நீங்கலானவர்கள் மட்டுமே இந்தப் பொது மன்னிப்புத் திட்டத்தின் கீழ் விடுவிக்கப் படுகின்றனர். இதன்படி வெலிக்கடைச் சிறைச்சாலையில் தண்டனைபெற்றுவரும் சுமார் நூறு பேருக்கு விடுதலை கிடைக்கிறது. (ச-5)

## நகையை திருடியவர் விபத்தில் காயம்

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற தமிழ்ப் பெண்ணொருவரின் தங்க நகைகளை பறித்துக் கொண்டு தப்பியோட முயன்ற நபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச் சம்பவம் பம்பலப்பிட்டி பகுதியில் இடம் பெற்றுள்ளது. குறித்த பெண்ணின் கழுத்திலிருந்த தங்க ஆபரணத்தை மோட்டார் சைக்கிளில் வந்த நபர் ஒருவர் அறுத்துக்கொண்டு சென்ற போது அவரது மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதையடுத்து பொலிஸார் அவரைக் கைது செய்யக் கூடியதாகயிருந்தது.

பறிக்கப்பட்ட நகைகளுடன் வேகமாக அவர் மோட்டார் சைக்கிளை செலுத்த முற்பட்ட போது அது விபத்துக்குள்ளானது. குறித்த நபர் பலத்த காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-5)

## கைதிக்கு 333 ரூபா சிறுவருக்கு 20 ரூபா

(கொழும்பு)

சிறைத்தண்டனை அனுபவித்து வரும் ஒரு குற்றவாளிக்கு நாளாந்தம் அரசாங்கம் 333 ரூபாயைச் செலவிடும் அதேவேளை, சிறுவர் பராமரிப்பு நிலையங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கு நாளாந்தம் தலா 20 ரூபா மட்டுமே செலவிடப்படுகிறது என்று தெரியவந்துள்ளது.

சிறைச்சாலைகள் ஆணையாளர்நாயகமான பி.டபிள்யூ. கொடிப்பிலி தகவல் தருகையில், சிறைத்தண்டனை அனுபவித்து வரும் ஒரு கைதிக்காக மாதாந்தம் பத்தாயிரம் ரூபா செலவிடப்படுவதாக தெரிவித்தார். இதன்படி ஒரு நாளைக்கு ஒரு கைதிக்கான செலவு சுமார் 333 ரூபா எனக் கூறினார்.

இதேவேளை, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைத்திணைக்கள அதிகாரியான ராஸிக்க ஜயதுங்க தகவல் தருகையில், சிறுவர் பராமரிப்பு நிலையங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கு நாளாந்தம் தலா 22 ரூபா செலவிடப்படுவதாகவும் அதன்படி மாதாந்தம் 600 ரூபா மட்டுமே ஒரு சிறுவனுக்கு செலவாகிறது எனவும் கூறினார். (எ-5)

## அமைச்சர் டக்ளஸ் கூறியவை அரசாங்கத்தின் கருத்தல்ல

### அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் றொபேட் ஓ பிளேக் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியிட்டது அவரது தனிப்பட்ட கருத்து என்றும் அது அரசாங்கத்தின் நிலைப்பாடு அல்ல என்றும் அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன கூறியுள்ளார்.

வடக்கில் துணை ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த வேண்டும் என்றும், ஈபிடிபி பலமான ஆயுதக்குழுவை வைத்துள்ளதாகவும் அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் றொபேர்ட் ஓ பிளேக் கூறியிருந்தார்.

அதற்கு, பிளேக் உள்நோக்கத்துடன் கருத்துவெளியிடுவதாகவும், அவர் பொய்த் தகவல்களை பணம் கொடுத்து வாங்கியுள்ளதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குற்றம்சாட்டியிருந்தார். வடக்கில் இராணுவம், பொலிஸ் தவிர்ந்த வேறேவரிடமும் ஆயுதங்கள் இல்லை என்றும் அவர் கூறியிருந்தார்.

டக்ளஸ் தேவானந்தாவின் இந்தக் கருத்துக் குறித்து நேற்றுமுன்தினம் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்து அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன, அது அவருடைய தனிப்பட்ட கருத்து என்றும் அது அரசின் கருத்தில்லை என்று கூறியுள்ளார். (எ-1)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### சிரத்தை[ஈடுபாடு]



என் அருமை மாணவர்களே! நான் கூறும் அறிவுரையை ஏற்பீர்களாக! கல்லூரியில் படிப்பு முடிந்த பின்னர் மக்கட்சேவையில் உங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வீர்களாக! விலை மதிப்பற்ற செல்வம் நிறைந்த பொக்கிஷமே கிடைத்தாலும், இத் தொண்டினால் கிடைக்கும் ஆனந்தத்திற்கு ஈடு இணை இல்லை என்பேன். ஏழை என்ற எண்ணத்தை, வறுமை பற்றிய அச்ச த்தை மனதிலிருந்து அறவே ஒதுக்கித் தள்ளுங்கள். எந்த விதத்தில் உங்களை ஏழையாகக் கருதுகிறீர்கள்! கோச்சுவண்டியும், ஒரு ஜோடிக் குதிரைகளும் நமக்கு இல்லையே என்று ஏங்குகிறீர்களா? இட்டபணியை முடிக்க சாரைசாரை யாக வேலையாட்கள் இல்லையே என்று வருந்துகிறீர்களா? அதனால் என்ன, குடியா மூழ்கிப் போயிற்று? அல்லும் பகலும் பிறருக்காக நீங்கள் உங்கள் இரத்தத்தைச் சிந்தி உழைப்பீர்களானால் இந்த வாழ்க்கையில் உங்களால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை என்பதை நீங்கள் உணர்வீர்கள்.

# போர்க்குற்ற விசாரணைகளுக்கு சர்வதேச பொறிமுறை அவசியம்

## ரொபேர்ட் ஓ பிளேக் வலியுறுத்து



இலங்கையில் இடம் பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கத்தின் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு நீதியை நிலைநாட்டத் தவறியுள்ளது.

இது குறித்த விசாரணைகளை மேற்கொள்வதற்கு சர்வதேச பொறிமுறையொன்று உருவாக்கப்படும் என இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் கடந்த 14ஆம் திகதி எச்சரிக்கை விடுத்துள்ளதாக ஐ.ஆர்.ஐ.என் எனும் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இப்போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் உள்நாட்டில் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் நம்பகத்தன்மை அற்றிருப்பதால் இது தொடர்பில் மாற்றுவழிமுறைகளை மேற்கொள்வதற்கான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும் என அமெரிக்காவின் தென் மற்றும் மத்திய ஆசியாவுக்கான பிரதி இராஜாங்க அமைச்சர் ரொபேர்ட் ஓ பிளேக் இலங்கைக்கான தனது விஜயத்தின் முடிவில் தெரிவித்துள்ளதாக இந்த இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

ஆயினும் இது தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு முன்னர் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் வெளியிடப்படும் வரை தாம் காத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார் என இந்த இணையத்தளம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து இவ் இணையத்தளம் தெரிவித்துள்ள முக்கியமான விடயங்கள் வருமாறு,

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவின் அறிக்கையின்படி இலங்கையில் இடம்பெற்ற போரின்போது இருதரப்பினரும் சர்வதேச மனிதவுரிமை மற்றும் மனிதாபிமானச் சட்டங்களை மீறிப் போரில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் இறுதி ஐந்து மாதங்களின் போது 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதாக நிபுணர்கள் குழுவால் வெளியிடப்பட்ட196 பக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவர்களை நீதியின் முன்னிறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென ரொபேர்ட் ஓ பிளேக் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் உள்நாட்டில் நம்பத்தகுந்த சுயாதீனமான மேற்கொள்ளப்படாது விட்டால் இலங்கை அரசாங்கம் சர்வதேச விசாரணைகளுக்கு முகங்கொடுக்க வேண்டும் என்ற அழுத்தம் அதிகரிக்கும் என அமெரிக்க இராஜதந்திரிகள் ஏற்கனவே தெரிவித்திருந்தனர்.

இப்போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை உருவாக்கியிருந்தாலும்கூட இந்த ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட பல விடயங்கள் இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை என உள்ளூர் மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவால் பரிந்துரைகள் சில முன்வைக்கப்பட்டுள்ள போதிலும் அப்பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை என சட்ட மற்றும் சமூக நம்பிக்கை அமைப்பின் தலைவரான றுக்கி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அத்துடன் நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள அதே குற்றச்சாட்டுக்களையே உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்தவர்கள் தெரிவித்துள்ளதாகவும் றுக்கி பெர்னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துவதற்கான பரிந்துரையை ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவோ அல்லது பாதுகாப்புப் பேரவையோ அல்லது பொதுச்சபையோ முன்வைப்பதை தான் வரவேற்பதாகச் செயலாளர் நாயகம் பான் கீ மூன் கடந்த ஏப்ரல் மாதம் அறிவித்திருந்தார் என ஐ.ஆர்.ஐ.என் இணையத்தளம் தெரிவித்துள்ளது. (4-2)

# பயங்கரவாத தடைச்சட்ட நீக்கம் இராணுவ ஆட்சிக்கு வழிவகுக்கும்

## ஜயலத் குற்றச்சாட்டு

கடந்த பல ஆண்டுகளாக அமுலிலிருந்த அவசரகாலச் சட்டத்தை முற்றாக நீக்கிவிட்டதாக அரசாங்கம் கூறுகின்றது. தனது அரசு நாட்டில் பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்து விட்டதாகவும் பயங்கரவாதம் இனி நாட்டில் தலையெடுக்காது என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறுகின்றார்.

ஆனால், ஜனாதிபதியின் இக்கூற்றுக்கு மாறாக இலங்கையின் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது ஏன்? அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டது உண்மையானால் சட்டத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பை பொலிஸாரிடம் அல்லவா கொடுத்திருக்க வேண்டும். ஆனால், நாட்டின் பாதுகாப்பினையும் சமாதானத்தினையும் உறுதிப்படுத்துவதற்கு ஜனாதிபதி முப்படையினருக்கு அழைப்பு விடுத்திருப்பது ஏன்?

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளருமான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன கேள்வி எழுப்பியுள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இக் கேள்விகளை எழுப்பினார்.



ஜெனீவாவில் இடம்பெற்றுவரும் மனிதவுரிமை கூட்டத்தொடருக்கு முன்பாக அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை நீக்கியிருப்பதாக அறிவித்தது. ஆனால், அவசரகாலச் சட்டத்தில் இடம்பெற்ற விதிகள் பலவற்றை பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் இணைத்ததன் மூலம் நாட்டில் இராணுவ நிர்வாகம் தொடருவதற்கு அரசாங்கம் வழிவகுத்திருக்கிறது.

இந்நிலையில் அவசரகாலச் சட்டத்தை நீக்கியிருப்பதாகக் கூறுகின்ற அரசாங்கத்தின் செயற்பாடுகளும் திட்டங்களும் நாட்டை இராணுவ ஆட்சிக்குள் இட்டுச் செல்வதற்கு வழிவகுத்திருப்பதாக டாக்டர் ஜயலத் ஜயவர்தன குற்றம் சாட்டியுள்ளார்.

அரசாங்கத்தினது செயற்பாடுகளும் முன்னெடுப்புக்களும் இந்நாட்டை ஒரு இராணுவ ஆட்சிக்குள் தள்ளி விடுவதற்கான முயற்சிகளாகவே நோக்கப்படுகின்றன. இதனால் மக்கள் மத்தியில் அச்சமும் பீதியும் சந்தேகமும் எழுந்திருக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் முன்னைய அவசரகாலச் சட்டத்தைவிட மோசமான விதிகளைக் கொண்டிருப்பதாக சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்கள் குற்றம் சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-2)

# யாழ். மாவட்ட குடிசன மதிப்பீடு இறுதிக்கட்டப் பணிகள் நவம்பரில்

10 வருடங்களுக்கு ஒருமுறை நாடளாவிய ரீதியில் குடிசன மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் குடிசன மதிப்பீடு பணிகள் யாழ். மாவட்டத்தில் 30 வருடங்களின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையின் இறுதிக்கட்டப் பணிகள் எதிர்வரும் நவம்பர் மாதம் மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ். மாவட்ட செயலக புள்ளிவிபரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

1981 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தற்போது மேற்கொள்ளப்படும் இந்தக் குடிசன மதிப்பீட்டுப் பணிகள் மூன்று கட்டங்களாக நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் முதல் இரண்டு கட்டப் பணிகள் யாழ். மாவட்டத்தில் பூர்த்தியடைந்துள்ளதுடன் மூன்றாம் மற்றும் இறுதிக்கட்டப் பணிகள் எதிர்வரும் நவம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த இறுதிக்கட்ட கணக்கெடுப்பின் போது வீட்டிலுள்ள குடும்பத்தவர்களின் விபரங்கள் பதியப்படவுள்ளன. (4-2)

# வற்றாப்பளை வீதி விபத்தில் 6 பேர் படுகாயமடைந்தனர்

(மல்லாவி)

வவுனியாவிலிருந்து முல்லைத்தீவு நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்று வற்றாப்பளை தண்ணீரூற்று வீதியிலுள்ள பாலத்திற்கருகில் சாரதி வேகக் கட்டுப்பாட்டையிழந்து சரிந்து விழுந்ததில் 6 பேர் படுகாயடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக் கிழமை இடம்பெற்றுள்ளது.

இதிலொருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். காயப்பட்டவர்களை உடனடியாக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்ததுடன் மேலதிக சிகிச்சைக்குரிய ஒருவரை யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். (4-12-15)

# பொன்சேகாவின் சிறைத் தண்டனை மீதான மனு டிசெம்பர் 15 வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு 30 மாத கடூழிய சிறைத் தண்டனை விதித்த இரண்டாவது இராணுவ நீதிமன் றின் தீர்ப்புக்கு எதிராக செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பை மேன்முறையீட்டு நீதிமன்றம் எதிர்வரும் டிசெம் பர் 15 ஆம் திகதி வரை ஒத்திவைத் துள்ளது.

நேற்று முன்தினம் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்ட போது சரத் பொன்சோ சார்பில் ஆஜரான வழக்குரைஞர் ரொமேஷ் டி சில்வா ஜனாதிபதி இராணுவ நீதிமன்றின் தீர்ப்பை மட்டுமே உறுதி செய்துள்ளார்.

ஆனால், சரத் பொன்சேகா செய்ததாக கூறப்படும் குற்றத்தை அவர் உறுதி செய்யவில்லை. எனவே, இராணுவ நீதிமன்றம் இவர் மீது கண்ட குற்றத்தை இல்லாது செய்ய வேண்டும் என நீதிமன்றிடம் கேட்டுக்கொண்டார். நீதிபதிகள் எறிக் பஸ நாயக்க, ஏ.டபிள்யூ ஸ்ரீ. ஏ. சலாம், உபாலி அபேரத்ன ஆகியோர் கொண்ட நீதிபதிகள் குழாம் தீர்ப்பை எதிர்வரும் டிசெம்பர் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (ஸ்ரீ-2)

# இலங்கை அரசாங்க...

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் பிரதி இராஜாங்கச்செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக் இந்தியாவில் இதனைக் குறிப்பிட்டதாக சன் செய்தி தெரிவித்தது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு அமெரிக்கா திரும்பும்போது தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் பிரதி இராஜாங்கச்செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக் இந்தியா சென்றுள்ளார்.

புதுடில்லியில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே பிளேக் இந்தக் கருத்தினை வெளியிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இலங்கை அரசாங்கம் முன்வரவேண்டும். அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அத்துடன் இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் தாமதிக்கக் கூடாது.

இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் புனரமைப்பு போன்றவற்றில் மேலும் பல விடயங்கள் செய்யப்பட வேண்டும் என்பது அமெரிக்காவின் கருத்து. அதிகாரப் பகிர்வு வழங்கினால் மட்டுமே தமிழ் மக்கள் இலங்கை அரசாங்கத்தை நம்புவார்கள் எனவும் அமெரிக்க பிரதி இராஜாங்கச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் நிவாரண பணிகளை உடனடியாக தொடருமாறு இலங்கை அரசுக்கு இந்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என றொபேர்ட் பிளேக் வலியுறுத்தியதாக சன் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

Diploma Course fee Free 5
Ms Office, DTP, Hardware & Networking
Accounting, Web Design, Business English
6 கற்கைநெறிகளில் ஏதாவது ஒரு கற்கைநெறியை
தேர்வு செய்து ஏனைய 5 கற்கைநெறிகளையும்
கற்கைநெறிகட்டணமின்றி பயிலும் வாய்ப்பு
இன்றே உங்கள் <Name>,<Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்
MCS Supported By UNDP/JRRP
இலங்கை தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
324, Palaly Road, Parameswara Junction

# வடக்கில்...

தமிழ், முஸ்லிம், சிங்களம் என்ற தெரிவோ அல்லது அந்தந்த மொழியைக் கொண்டோர் அவரவர் பிரதேசங்களில்தான் கடமையாற்ற வேண்டுமென்றோ இல்லை. இந்த நாட்டில் எவரும் எங்கும் கடமையாற்ற முடியும் எனத் தெரிவித்துள்ளார். இதே கருத்தினையே மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனும் அண்மையில் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-5)

# நிபுணர் குழுவின் அறிக்கை...

குறிப்பிட்டார்.

சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையின் கூட்டத்தொடரில் கலந்து கொண்ட இலங்கைப் பிரதிநிதிகள் குழு நேற்று காலை நாடு திரும்பிய பின்னர் அமைச்சர் மகிந்த சமரசிங்க இந்தக் கருத்தினை கூறினார்.

இந்த விடயம் குறித்து பிராந்திய அமைப்புக்களையும் தெளிவுபடுத்தியுள்ளதாக குறிப்பிட்ட மனித உரிமைகள் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க, மனித உரிமைகள் தொடர்பில் கேள்விகளையும் விளக்கங்களையும் சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பையும் அந்த அமைப்புகளுக்கு வழங்கியிருப்பதாக சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று தருஸ்மன் அறிக்கையை ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் ஜெனிவாவிற்கு அனுப்பி வைத்த சந்தர்ப்பத்தில் அந்த அறிக்கையானது மனித உரிமைகள் பேரவையின் வேண்டுகோளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட ஒன்றல்ல என்பதை எடுத்துக் காட்டியுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (ச-5)

# லிபிய போராளி...

விடுதலைப் போராளிகள் எனவும் தெரிவித்தார். எவ்வாறாயினும், இந்த வழக்கின் பின்னர் நீதிமன்றத்துக்கு வெளியில் கருத்து வெளியிட்ட சட்டத்தரணி விக்டர் கொப்பே, விடுதலைப்புலிகள் லிபிய விடுதலைப் போராளிகளுக்கு ஒப்பானவர்களா என்ற வாதம் இடம்பெறவில்லை எனத் தெரிவித்தார்.

எதிர்வரும் மூன்று வாரங்களுக்கு விடுதலைப் புலிகள் விடுதலைப் போராளிகளா? அல்லது பயங்கரவாதிகளா என்ற விவாதம் ஹேக் நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ள நிலையில், இந்த வழக்கின் தீர்ப்பின் அடிப்படையிலேயே, நிதி வழங்கல் தொடர்பில் கைதான குறித்த ஐவரினதும் ஏனைய நெதர்லாந்து தமிழர்களின் நிதி வழங்கல் வழக்குகளும் தங்கியிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் மீதான பயங்கரவாத முத்திரையை மூவர் கொண்ட ஹேக் நீதிமன்றம் நீக்கினால், விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு நிதி வழங்குவது சட்டரீதியான தாக்கப்படும் என கொப்பே சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

# தொடர்ந்து பேச்சை...

போன்றவர்கள் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடன் பல பேச்சு வார்த்தைகள் நடத்தியது.

2011 செப்ரெம்பர் மாதம் 2-ம் திகதி ஜனாதிபதிக்கும் ஆர்.சம்பந்தனுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பின் பின் இப் பேச்சு வார்த்தைகள் மீண்டும் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

விரைவில் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியலமைப்பு ஏற்பாடுகளை அடைவதற்கு, தேவையான அரசியல் தீர்வொன்றின் வடிவத்தை தீர்மானிக்கின்ற அடிப்படைக் கொள்கைகள் தொடர்பில் இணக்கப்பாடு ஒன்றினை அடையும் நோக்கத்துடன் 2011 மார்ச் 18ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமர்ப்பித்த பேச்சுவார்த்தைக்கான ஆவணம் மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்காக பொதுமக்கள் மத்தியில் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள், வாக்குமூலங்கள், மற்றும் அறிக்கைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு இணங்கப்பட்டது. (ச)

# கனேடிய...

கிளறுவது முறையற்றது என கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெய்ர்ட்டிடம் இலங்கை உயர்ஸ்தானிகர் சித்ராஞ்சனி வாகீஸ்வரா தெரிவித்துள்ளார்.

கனேடிய நாடாளுமன்ற தூதுக்குழுவொன்றை இலங்கைக்கு அனுப்புவதன் சாத்தியம் குறித்தும் ஆராயப்பட்டதாக கனடாவிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிராலயம் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் விவகாரத்தில் முன்னேற்றம் ஏற்படவில்லையாயின் பொதுநலவாய உச்சி மாநாட்டுக்காக தான் இலங்கைக்கு செல்லப்போவதில்லை என கனேடிய பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் கடந்த வாரம் கூறியமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
A/L எழுதிய மாணவர்கள், உயர்கல்வி
மாணவர்கள், தனியார் அலுவலர்களுக்கான
சனி, ஞாயிறு புதிய பிரிவு இன்று ஆரம்பம் - 17.09.2011
பிரிவு 1 : காலை 8.00 - 10.00 பிரிவு 2 : காலை 10.00 - 12.00
பிரிவு 3 : மாலை 2.00 - 4.00 பிரிவு 4 : மாலை 4.00 - 6.00
ஆரம்ப வகுப்பு 17.09.2011 - மதியம் 12.30 - 2.00
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

# இராணுவ ...

நிலையில் அமைச்சர் விமல் வீரவசனம் பேச ஆரம்பித்துள்ளார்.

முல்லேரியா– தோமஸ் கிராமத்தில் வீடற்ற 21 குடும்பங்களுக்கான நிரந்தர வீட்டுத் திட்ட நிர்மாணப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டு வைபவம் நேற்று நடைபெற்றது. இங்கு உரையாற்றிய அமைச்சர்,

இலங்கையில் எதிர்க் கட்சிகள் என்று ஒன்றும் இல்லை எல்லாக் கட்சிகளும் பிளவுற்று காணப்படுகின்றன. ஆகையால் எமது அரசாங்கத்திற்கு உள்நாட்டில் எதிர்க் கட்சிகள் இல்லை என விமல் கூறியுள்ளார்.

ஆனாலும் சர்வதேச ரீதியில் எதிர்க் கட்சிகள் காணப்படுவதாக கூறியுள்ள அமைச்சர் விடுதலைப்புலி ஆதரவாளர்கள், தப்பிச் சென்ற சுதந்திர ஊடகவியலாளர்கள், மேற்குலக சர்வாதிகாரிகள் இலங்கையை சர்வதேசத்தில் இருந்து தனிமைப்படுத்த முயற்சிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்துமாறு பிளேக் தெரிவித்துவிட்டுச் சென்றுள்ளார். கொழும்பிலும் இராணுவ முகாம்கள் இருப்பதை அவர் அறிந்து கொள்ள வேண்டும். இராணுவ முகாம்களை அமைக்கும் உரிமை அரசாங்கத்திற்கு உண்டு. அதனை அகற்றக் கோருவதற்கு பிளேக்கிற்கு உரிமை இல்லை என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (ச-5)

# ஆங்கிலப் பயிற்சிக்கான புலமைப்பரிசில் திட்டம்

## ஏசியன் கல்வி நிலையம் வழங்குகிறது

இக்கால இளைஞர் யுவதிகள், உள்நாட்டு வெளிநாட்டு உயர்கல்வி வாய்ப்புக்களை எதிர்பார்த்திருப்பதாலும், சுயதொழில் வாய்ப்புக்களைத் தேடிநிற்பதாலும் அவற்றிற்குப் பலம் சேர்க்கும் வகையில் எமது பாடநெறிகள் அமைந்துள்ள சிறப்பம்சமாகும். ஏசியன் கல்வி நிலையம் 1994 ஆம் ஆண்டு தொடக்கம் மூன்றாம் நிலைத் தொழிற் கல்வி ஆணைக்குழு மற்றும் அமைச்சில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும். அத்துடன் சிஎஸ்சி மற்றும் **Softview** நிறுவனங்கள் தனித்தனியாக சர்வதேச தரநிர்ணயங்களுக்கமைய **ISO 9001:2008** சிறப்பு அங்கீகார சான்றிதழைப் பெற்றவை.

இவ்வகையில் ஒவ்வொரு ஆண்டும் இலங்கையைச் சேர்ந்த அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில் குறிப்பாக ஜி.சீ.ஈ.சாதாரண மற்றும் உயர்தர பரீட்சைகளின் பின் **Mega Scholarship**எனும்கணினிப் படிப்புகளுக்கான இலவச புலமைப்பரிசில் பரீட்சையை நடத்தி சமூகத்தில் பொருளாதார ரீதியில் எந்த நிலையில் இருந்தாலும் கணினி கல்வியைத் தொடர இச்சிறப்பான வாய்ப்பை **CSC-ASIAN** கல்வி நிறுவனம் அளிக்கின்றது. இவ்வாண்டு தகவல் தொழிநுட்பம், கிராபிக்ஸ் அனிமேஸன் பயிற்சிகளோடு ஆங்கில மொழி பேச்சுப் பயிற்சியையும் ஏசியன் அறிமுகப்படுத்துகிறது. இது சாதாரண தர, உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு உயர்கல்வியை அல்லது தொழில் வாய்ப்புகளைப் பெற ஒரு உந்து சக்தியாக திகழும் என்பதில் ஐயம் இல்லை.

**மெகா இலவசப் பரீட்சைகள்**

ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே நடைபெறும் இவ் இலவச புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவ மாணவியர் பங்குபற்றி முறையே 40% 50% 60% மற்றும் 75% வரையிலான புலமைப்பரிசிலை பெறமுடியும். 50 நிமிடங்கள் மட்டுமே நடைபெறும் இப் பரீட்சையை தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய விரும்பிய மொழியில் எழுதலாம். பொதுஅறிவு, நுண்ணறிவு மற்றும் பாடசாலைத் திட்டத்திற்கமைவாக 50 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். இப்பரீட்சையை எழுதுவதற்கான அடிப்படைத்தகைமை க.பொ.த.சாதாரணதரம்மட்டுமே.

இப்புலமைப் பரிசில்களுக்கான பாடநெறிகள் அனைத்தும் **CSC India, Softview India, Tally India, ICDL U.K** மற்றும் **Speak Easy India** கல்வி நிலையங்களின் நேரடி அங்கீகாரம் பெற்றவை. இப்புலமைப் பரிசில் பெறும் மாணவர் ஒருவர் தனக்குரிய பாடநெறிக் கட்டணக் கழிவுடன் உள்நாட்டு வெளிநாட்டு உயர்கல்வி தொழில்வாய்ப்பு மற்றும் சுயதொழில் வாய்ப்புக்களைப் பெற்றுத்தரும் கீழ்கண்ட பாடநெறிகளைத் தேவைக்கேற்பதெரிவுசெய்யலாம். அத்துடன் அனைத்துப் பாடப்பிரிவுகளும் **Application, Programming, Web Development, Multimedia, English Language** எனப் பிரதான ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

**இலவச அனுமதிகள்**

2011 **A/L**பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் **ICT** கல்வியில் ஆர்வமுடையவர்கள் அனைவரும் இப்பரீட்சையில் பங்குபற்றலாம். இப் பரீட்சை நாளை 18.09.2011 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும். இவ் இலவச பரீட்சைகான அனுமதிகளை யாழ்.நகர், நெல்லியடி, சாவகச்சேரி, வவுனியா, கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை, மட்டக்குளி, நீர்கொழும்பு, மட்டக்களப்பு, பண்டாரவளை, மாத்தளை, மற்றும் நுவரெலியா **CSC-ASIAN** கிளைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வகையில் படித்தவர்களுக்கும் பொருளாதார வசதி படைத்தவர்களுக்கும் மட்டுமே கணினிக் கல்வி என்ற மாயையை புலமைப் பரிசில் திட்டத்தினூடாக உடைத்தெறிந்த பெருமை**ASIAN-CSC**யை சாரும். அத்துடன் ஸ்கொலர்சிப் மூலம் சேர்ந்து படிப்பது உங்கள் கல்விக்கான பெற்றோர்களின் செலவைக் குறைப்பதாகும். படிப்பின் முக்கியமான கட்டங்களில் சிறந்ததையே தெரிவு செய்யுங்கள். (எ-5)

மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை

G.T.V.யும் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதிகள் விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.

MAHARAJA FOOD PRODUCT

மேலதிக விபரங்களுக்கு:-

கொழும்பு

# 18/3 Dr.E.A coory Mawatha,
Wellawathte.
T.P:-0112360926,0112259849

கொழும்புக்கான கட்டணம் ரூபா 200/= மட்டுமே

யாழ்ப்பாணம்

aramex
delivery unlimited

No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825



உல்லாசம் உங்கள் கண்முன்னே...

# TILKO JAFFNA CITY HOTEL



No.70/6, K.K.S
Road, Jaffna.
Tel: 021 2225969

web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com



இளையோர் கல்வி-தொழில் வழிகாட்டி இதழான

# சகரம் ஏற்பாட்டில்

இளையோர் மாதாந்தம்

## யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக

## UK, Australia, Canada New Zealand, USA

பல்கலைக்கழக பட்டப்படிப்புக்களை வழங்கும்

## 10க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் உங்களிடம் நேரில் வருகின்றன

# MALAYSIAN EDUCATION FAIR & SPOT ADMISSION




போர்க்காலச் சூழலில் பல்வேறு காரணங்களால் உயர்கல்விவாய்ப்பைத் தவறவிட்ட வன்னி மாணவர்கள், பொருத்தமான தொழிற்பயிற்சி அல்லது பட்டக்கல்வியைத் தொடர்வதற்கு முன்னுரிமை

புலமைப்பரிசில்கள் மற்றும் இலவச ஆங்கில வகுப்புக்கள்
நிபந்தனைகளுக்கு உட்பட்டது

பெற்றோரே! உங்கள் பிள்ளைகளுடன் நேரில் வந்து பல்கலைக்கழகப் பிரதிநிதிகளைச் சந்தித்து ஒளிமயமான எதிர்காலத்துக்கு உத்தரவாதமான வழிமுறையைத் தெரிவுசெய்யுங்கள்!

**அனுமதி இலவசம்! அனுமதி இலவசம்! அனுமதி இலவசம்!**

**Nottingham UK, Monash Australia, INTI (USA & Canada)**
மலேசிய கிளைகள் உட்பட 10 பல்கலைக்கழகப் பிரதிநிதிகளை நீங்களே நேரில் சந்தித்து அனுமதி பெறும் வாய்ப்பு!
(மொழிபெயர்ப்பு வசதிகள் உண்டு)

**செப். 20**
செவ்வாய்க்கிழமை
மு.ப.10.00 பி.ப.5.00
**ஞானம்ஸ் ஹொட்டேல்**
மணிக்கூட்டுக் கோபுர வீதி
(யாழ் வைத்தியசாலை பின்பக்கம் - பஸ் நிலையத்திலிருந்து 100 m)

கண்காட்சி ஏற்பாடு:
கல்வி வழிகாட்டல் பிரிவு
சிகரம் ஊடக இல்லம்
221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60

In Association with Winning Magnitude
Gateway to Malaysia Education

ஊடக அனுசரணை
சகரம் Day JAFFNA TODAY

Supported and Endorsed by:
Ministry of Higher Education Malaysia
High Commission of Malaysia



# இடமாற்றம்

இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த

**நியூ லலிதாஸ் ஜூவல்லறி** ஸ்தாபனம்

10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**தொடர்புகளுக்கு : 021 222 4134**



(சி-4418)



அடுத்த பிரிவுகளுக்கான பதிவுகள் நடைபெறுகிறது

NIBM

அரச சான்றிதழுடனான கற்கை நெறிகள்

**Certificate in Compueter Science**
(Week ends 9.00 am- 12.00, Week day- Full)
**Certificate in English Language**
(Week ends 9.00 am - 12.00, Week day- Full)
&
**Certificate in Business Management**
(Thursday, Friday 9.00am-12.00)

077 071 6974 , 021 222 0360
No-40 College Road , Jaffna



# தீபாவளி மலிவு விற்பனை கண்காட்சி

எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஐப்பசி மாதம் 21-ம், 22-ம், 23-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் மலிவு விற்பனை கண் காட்சியில் பங்கு பெற விரும்பும் யாழ். வர்த்தகர்கள் தொடர்பு கொள்ளவும்.

**071-7937629, 072-6996019**
(திரு. ரவி)

(6155)



# Organ/Guitar/புல்லாங்குழல் வகுப்புகள்

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
சினிமா பாடல்களின் Notes விற்பனைக்குண்டு.

**கரவீணா இசை மன்றம்**

4 (18/1), செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். T.P.:0777031293



GREENWICH BUSINESS ACADEMY
Your Partner in Education
GBA

# GBA

GREENWICH BUSINESS ACADEMY (PVT) LTD.
OVERSEAS CONSULTING & EDUCATION

*Students are enrolled at a very cheap rate*
*so, Hurry ..................! Do not miss the golden opportunity*

# வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்

யாழ் மக்களுக்காக Green wich Business Academy நிறுவனத்தினரும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற நிறுவனங்களும் இணைந்து நடாத்தும் நேர்முகப் பரீட்சையும் கருத்தரங்கும்.

இடம் :- **No.235, Palaly Road,**
**Kondavil junction, jaffna.**
(GREEN WICH BUSINESS ACADEMY

காலம் :- 19.09.2011 திங்கட்கிழமை காலை 09.00 மணிக்கு

கட்டாரில்

| Gatecory | Salary(Qr) |
|---|---|
| 1. Salesman | 1100 |
| 2. Cashier | 1100 |
| 3.C.I.D/showroom Security | 1100 |
| 4. Furniture Delivery boy | 1100 |
| 5. Heavy Drivers | 1400 |
| 6. Light drivers | 1250 |
| 7. Fork lift operator | 1200 |
| 8. Furniture Kepairman | 1200 |
| 9. Shoe maker | 1100 |
| 10. Painter | 1100 |
| 11. A/C Technician | 1300 |
| 12. Bagger behind cashier | 900 |
| 13. Store helper | 900 |
| 14. Pipe Fitter (plumber) | 900 |
| 15. Serial Helper/clener | 900 |
| 16. Iron Work & Taialroom | 900 |
| 17. Helpers | 700-800 |
| 18. Electrician | 850-1100 |
| 19. Plumber | 850-1100 |
| 20. Mason | 850-1100 |

சவுதி அரேபியாவில்

| Gatecory | Salary(Qr) |
|---|---|
| 1. Stell Fixer | 1200 |
| 2. Mason | 1200 |
| 3. S/Carpenter | 1200 |
| 4. Labours | 800 |
| 5. Driver(Trailer) | 900 |
| 6. Driver (House) | 1000 |
| 7. House Maids | 700 |

சிங்கப்பூரில்

| Catecory | Salary (S.D) |
|---|---|
| 1. Super market | 1200 |
| 2. Security Card | 1200 |
| 3. Milk Factory | 1200 |

ஆப்கானிஸ்தானில்
1.American Camp 1000 U.S.D

மலேசியாவில்
Harvesting Worker 1000 RM

பங்கொக்கில்
1. Shoe Factory 600 U.S.A

சைப்பிரஸ்சில்
1. Factory cleaners 1200 U.S.D
2. Vacancies of ships 1500 U.S.D



குறிப்பு :- கலந்து கொள்ளும் இளைஞர் யுவதிகள் தங்கள் தகமைகளுடன் கூடிய சுய விபரக் கோவையுடன் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். (முன் பதிவுகள் வரவேற்கப்படுகின்றன.)

**தொடர்புகளுக்கு :- 0773483438, 0771371617, 0215672727**


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.